இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32
கதிர் 258
ஆடி 26ஆம் நாள்
வெள்ளிக்கிழமை
11 ஓகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048

# அரசமைப்பு உருவாக்க தாமதத்துக்கு ஐ.தே.கவின் சுயநலனும் காரணம்

## சம்பந்தன் நேற்றுச் சாடல்



கொழும்பு, ஓகஸ்ட் 11

புதிய அரசமைப்புக்கான முயற்சி தாமதமடைவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாத்திரம் அன்றி ஐக்கிய தேசியக் கட்சி யின் சுயநலனும் காரணம் என்று கடுமையாகச் சாடியிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன். இதுவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியே சுயநலத்துடன் செயற்பட்டு வருகிறது என்று குற்றஞ்சாட்டி வந்த அவர், அண்மைக் காலத்தில் முதற்றடவை யாக ஐக்கிய தேசியக் கட்சி மீதும் நேற்றுக் குற்றஞ்சாட்டினார். அத்துடன் நாட்டில் நியாயமான தீர்வு எட்டப்படாவிட்டால், தமிழ் மக்கள் மீண்டும் புலம்பெயரும் நிலை ஏற்படும் என்றும் சுட்டிக் காட்டினார்.

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் சந்திப்பில் உடனிருந்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரி விக்கப்பட்டிருப்பதாவது: >> 25

# பதவியிலிருந்து விலகினார் ரவி



கொழும்பு, ஓகஸ்ட் 11

பிணைமுறி சர்ச்சையில் சிக்கிய முன்னாள் நிதி அமைச்சரும், அயலுற வுத்துறை அமைச்சருமான ரவி கருணாநாயக்க தனது பதவியிலிருந்து விலகுவதாக நாடாளு மன்றத்தில் நேற்று அறி வித்தார்.

அவர் பதவி விலகவேண்டும் என்ற கருத்து, கூட்டு அரசி லுள்ள சக அமைச்சர்களால் வலியுறுத்தப்பட்டது. தனது பதவி வில கல் கடிதத்தை அரச தலைவரிடம் நேற்று முன்தினம் >> 25

## பதவி துறப்புக்கு ரணில் பாராட்டு

கொழும்பு, ஓக.11

எந்தவொரு விசாரணைகளி லும் நல்லாட்சி அரசு தலை யிடாது என்பதையே அமைச் சர் ரவி கருணாநாயக்கவின் பதவி விலகல் எடுத்துக்காட்டு கின்றது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அமைச் சர் ரவி கருணாநாயக்க தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகும் அறிவிப்பை விடுத்த பின்னர், கருத்து வெளி >> 25

அடுத்த அயலுறவுத்துறை அமைச்சர்

## மங்களவா? நவீனா? அரசுக்குள் இழுபறி

கொழும்பு, ஓக. 11

அயலுறவு அமைச்சுப் பதவியிலிருந்து ரவி கருணாநாயக்க விலகியதையடுத்து அந்த அமைச்சுக்கு மங்கள சமரவீர மற்றும் நவீன் திசாநயக்க ஆகியோரில் யாரை நியமிப் பது என்பது தொடர்பில் கூட்டு அரசுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்று அறியமுடி கிறது.

அயலுறவுத் துறை அமைச்சராக திலக் மாரப்பன மற்றும் நவீன் திசாநயக்க இரு வரின் பெயர்களும் முன்மொழியப்பட் டுள்ளன. திலக் மாரப்பன, கூட்டு அரசில் சட்டம் ஒழுங்கு அமைச்சராக >> 25

கொக்குவில் வாள்வெட்டு:

## பொலிஸ் வேட்டையில் இதுவரை 13 பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 11

கொக்குவிலில் பொலிஸார் மீது வாள்வெட்டு நடத்திய சந்தேகத்தில் மேலும் இரு இளைஞர் கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர் களுடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 13 பேர் கைது செய்யப்பட் டுள்ள னர். மேலும் பலர் தேடப்படுகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

“வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 22 வயது இளைஞனும், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த 18 வயது இளைஞனும் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களது பெற்றோர் பாடசாலை அதிபர்களாக உள்ளனர். >> 25

# பிடிக்க வந்தவர்கள் என நினைத்தே பொலிஸாரை துரத்தி வெட்டினோம்

## முக்கிய சூத்திரதாரியின் வாக்குமூலம் இது

யாழ்ப்பாணம், ஓக. 11

“பொலிஸாரைத் திட்டமிட்டு வெட்டவில்லை. அவர்கள் எங்களைப் பிடிக்க வருகின் றார்கள் என்று நினைத்தே துரத்தித் துரத்தி வெட்டி னோம்” என கொக்குவில் வாள் வெட்டுச் சம்பவத்தின் முக்கிய சூத்திரதாரியான நிசா விக்டர் இவ்வாறு வாக்குமூலம் வழங்கியுள்ளார் எனப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட அவரிடம் பயங்கரவாத விசாரணைப் பிரிவு சிறப்புப் பொலிஸ் அணி விசாரணை நடத்தி வருகின்றது. இதன்போது அவர் தனது வாக்குமூலத் தில், “ஆவா குழுவில் இருந்து என்னுடன் முரண்பட்டுக் கொண்டு வேறு குழுவை உருவாக்கச் சென்ற ‘தனு ரொக்’ என்பவரை வெட் டவே நாம் சென்றோம். வீட் டில் அவர் இருக்க வில்லை. நாம் மீள திரும்ப முற்பட்ட போது, பொலிஸார் இருவர் மோட்டார் சைக்கிளில் வரு வதை அவதானித்தோம். அவர்கள் எம்மை மடக்கிப் பிடிக்கவே வருவ- >> 25

see more news in
newuthayan.com

# சாரதிகளே அவதானம்!

## போக்குவரத்துக் குற்றங்களுக்கு இனிமேல் ரூபா 25,000 தண்டம்

யாழ்ப்பாணம், ஓக. 11

போக்குவரத்துக் குற்றங் களுக்காக 25 ஆயிரம் ரூபா வரையில் தண்டப் பணம் அறவிடுவதற்கான திருத்தத்துக்கு அமைச் சரவை ஒப்புதல் வழங்கி யுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங் களை அறிவிக்கும் செய்தி யாளர் சந்திப்பில் அமைச் சர் கயந்த கருணாதிலக இத னைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகாரம் பெற்ற போக்குவரத்து அனுமதிப் பத்திரங்கள் இன்றி வாகனம் செலுத்துதல், போக்குவரத்து அனு மதிப்பத்திரம் அற்ற சாரதி ஒருவரை சேவைக்கு அமர்த்துதல், மதுபானம் அல்லது போதைப் பொருள் பாவித்ததன் பின்னர் வாகனம் செலுத்து தல், தொடருந்துக் கடவை களில் முறையற்ற விதத் தில் மோட்டார் வண்டி களைச் செலுத்துதல், அதிகாரம் பெற்ற காப்பு றுதி இன்றி வாகனம் செலுத் துதல் என்பவற் >> 25

## ரவிகரன் விளக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 11

வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் தன்னி டம் விளக்கம் கோரி யுள்ளார் என்று வெளி யான செய்திக்கு மறுப் புத் தெரிவிக்கும் வடக்கு மாகாண சபையின் முல்லைத் தீவு மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன், அது தொடர்பில் எந்தவொரு கடிதமும் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் கூறினார்.

பொது அமைப் >> 25

## முச்சந்தி முரளி



இப்பத்தான் உது உவருக்கு தெரியுதோ?

# நீதியமைச்சர் விஜயதாஸ மீதும் நம்பிக்கையில்லாப் பிரேரணை

## ‘சேம் சைட் கோல்’ அடிக்கத் தயாராகிறது ஐதேக


கொழும்பு, ஓக. 11

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரு- வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர்களே தயா ராகி வருகின்றனர் என்று அந்தக் கட்சி வட்டா ரங்களிலிருந்து அறியமுடிகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் 18 நாடாளு மன்ற உறுப்பினர்கள் நேற்றுக் கட்சித் தலை வரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிர மசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இது பற்றித் தெளிவு- படுத்திய பின்னர் பிரேர ணைக்கு கையொப் >> 25

# பொலிஸை தாக்கிய சந்தேகத்தில் கைதானவரிடம் திருட்டுப் பொருள்

## அவரிடம் நடத்திய விசாரணையில் மேலும் ஒருவர் சிக்கினார்





வடமராட்சி, ஓக.11
பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவரிடம் இருந்து துன்னாலையில் வீடொன்றில் திருடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

**திருட்டுகள்**
வடமராட்சி, துன்னாலையில் உள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய குற்றச் சாட்டில் நேற்றுக் காலை கைது செய்யப்பட்ட ஒருவரிடம் இருந்து அவற்றில் சில பொருள்கள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. துன்னாலையில் உள்ள வீடொன்றில் அதிகாலை 1 மணியளவில் நுழைந்த 4 பேர் கொண்ட கும்பல் அங்கிருந்த பொருள்களைத் திருடிக்கொண்டு தப்பிச் சென்றது. இரு அலைபேசிகள், பென்ரைவ், மடிக்கணினி என்பற்றுடன் 25 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது இது தொடர்பில் வீட்டு உரிமை பாளர் பருத்தித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அதேவேளை, பருத்தித்துறை ஆவோடைப் பகுதியில் வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளும் நேற்றிரவு திருடப்பட்டது. அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

**சந்தேகத்தில் கைது**
அண்மையில் துப்பாக்கிச் சூட்டில் துன்னாலை இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். அதனை அடுத்து பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் நேற்றுக் காலை 9 மணியளவில் துன்னாலையைச் சேர்ந்த 20 வயது இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். நெல்லியடிப் பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

**திருட்டுப் பொருள் மீட்பு**
அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் அதிகாலை வீட்டிலிருந்து திருடப்பட்ட பென்ரைவுடன், 15 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் நடத்தப்பட்டன. அவர் திருட்டுச் சம்பவம் தொடர்பில் மூவரைக் குறிப்பிட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவரிடம் இருந்து பெறப்பட்ட தகவலுக்கு அமைய துன்னாலை, ஞானசாரியார்கோயில் சந்தை மயானத்தில் இருந்து மடிக்கணினி மீட்கப்பட்டது.

**மற்றொருவர் கைது**
பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்ட சமயம் சந்தேகநபர் பெயர் குறிப்பிட்டவர்களில் ஒருவர் மயானத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அவரிடம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஆவோடைப் பகுதியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் யாக்கரு, தில்லையம்பலம் காட்டுப் பகுதியில் மீட்கப்பட்டது. சந்தேக நபர்களிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-26)

# அமைச்சர் பதவியில் இருக்க புதிதாக அமைச்சர் நியமனம்

பதுளை, ஓக. 11
ஊவா மாகாணத்தின் சுகாதார அமைச்சராக குமாரசிறி ரட்னாயக்க பதவியில் இருக்கும் போது, அவரது அமைச்சுப் பதவிக்கு அனுர விதானகமகே நியமிக்கப்பட்டுள்ளார். அவர் அரச தலைவர் செயலகத்தில், அரச தலைவர் முன்னிலையில் நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். ஊவா மாகாண சுகாதார அமைச்சராக இதுவரை இருந்து வந்த குமாரசிறி ரட்னாயக்கவுக்குத் தெரியாமலேயே, அவர் அமைச்சு பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. ஊவா மாகாண சபை அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் மாகாண சுகாதார அமைச்சு ஆசனத்தில் குமாரசிறி ரட்னாயக்க அமர்ந்திருந்தார் எனக் கூறப்பட்டது. "எனக்கு எதுவும் தெரியாது. நான் ஊவா மாகாண சுகாதார அமைச்சராகவே தற்போதும் இருந்து வருகின்றேன்" என்று குமாரசிறி ரட்னாக்க தெரிவித்தார்.
(ஐ-10, 47)

# பொலிஸ் சேவையில் இணைய வேண்டும்


## செஞ்சோலைச் சிறார்களுக்கு வடக்கு முதலமைச்சர் அறிவுரை



யாழ்ப்பாணம், ஓக. 11
முல்லைத்தீவு செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் கற்றலை நிறைவு செய்த சிறார்கள் பொலிஸில் இணைவதற்குத் தம்மைத் தயார்ப் படுத்த வேண்டும்.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் செஞ்சோலைச் சிறார்களுக்கு அறிவுரை கூறினார். செஞ்சோலை இல்லத்தில் பராமரிப்பில் உள்ள சிறார்கள் வடக்கு மாகாண சபை அமர்வுகளை நேற்றுப் பார்வையிட்டனர். அங்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட பிள்ளைகளிடம் எவ்வாறான உதவிகள் தேவையாக இருக்கின்றன என்பதை முதலமைச்சர் கேட்டறிந்தார். அதன்போது அங்கு கூடியிருந்த சிறார்கள் தமக்குக் கல்வி உதவிகள் மற்றும் படிப்பதற்கான மண்டபம், கட்டட உதவி போன்ற கோரிக்கைகளை முன்வைத்தனர். அவர்களை அழைத்து வந்த செஞ்சோலை இல்லப் பொறுப்பாளர்கள், செஞ்சோலை யில் படிப்பை நிறைவு செய்கின்றவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித்தர ஏற்பாடுகள் செய்துதரும்படி கேட்டனர். அதற்குப் பதில் அளித்த முதல்வர், "சிறார்கள் படிப்பதற்கான உதவிகள் அனைத்தும் செய்துதர நடவடிக்கை எடுக்கப்படும். என்னென்ன தேவைகள் இருக்கின்றன என்பன பற்றிய விவரங்களைப் பட்டியலிட்டு எனது அமைச்சுக்குக் கடிதம் அனுப்புங்கள். தற்போது பொலிஸ் திணைக்களத்தில் ஏராளமான விண்ணப்பங்கள் இருக்கின்றன. எனவே பொலிஸில் இணைய செஞ்சோலை இல்லச் சிறார்கள் முன்வர வேண்டும்" - என்றார். (ஐ-4.8)

## முதியவர் விபத்தில் சிக்கிப் படுகாயம்

அதிகாலையில் நடைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த முதியவர் விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. அவர் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அச்சுவேலிப் பகுதியில் பிரதான வீதியில் நேற்று அதிகாலை முதியவர் நடை பயிற்சி மேற்கொண்டார். அதன் போது பின்னால் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதித் தள்ளியது எனத் தெரிவிக்கப்பட்டது. விபத்தில் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த கர்தன் சிவபாதம் (வயது - 69)என்பவர் படுகாயமடைந்தார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துமனையின் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-ரி1.8)



மோட்டார் சைக்கிளும் டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்து யாழ்ப்பாணம், கோண்டாவில் சந்திப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் நடந்தது. அதில் இருவர் காயமடைந்தனர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ-26)

## உயிரிழந்த சிறுத்தை மீட்பு

கொழும்பு, ஓக. 11
திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பத்தனை தேயிலை மலையில் சிறுத்தைக் குட்டி ஒன்று உயிரிழந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டது. நேற்று அதிகாலை கொழுந்து பறிக்கச்சென்ற தொழிலாளர்கள் சிறுத்தைக் குட்டி ஒன்று உயிரிழந்த நிலையின் இருந்ததைக் கண்டனர். பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அங்கு விரைந்த பொலிஸார் சிறுத்தைக் குட்டியை மீட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10, 43)

# தசநாயக்கவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக. 11
கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்கவுக்கு மீண்டும் விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 24 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நேற்று உத்தரவிட்டது.
கடந்த 2008ஆம் மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் கொழும்பு மற்றும் கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் 11 தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டு, காணாமலாக்கப்பட்டனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.
அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரணை செய்த நீதி வான் மீண்டும் விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்தார்.
(ஐ-10)

# பெண்ணைக் கொலை செய்த பிக்குவுக்குச் சாவுத் தண்டனை

கொழும்பு, ஓக. 11
பெண் ஒருவரைக் கொலை செய்த பிக்குவுக்கு பாணந்துறை மேல் நீதிமன்றம் நேற்று சாவுத்தண்டனை விதித்தது. பன்னிப்பிட்டிப் பிரதேசத்தில் வசித்து வரும் 34 வயதான ஹேனேகம ரத்னசிறி தேரர் என்ற கொடித்துவக்கு ஆராச்சிகே சாரங்க என்ற நபருக்கே சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. துறவறம் பூண்டிருந்த பிக்கு, துறவறத்தைக் கைவிட்டு 5 ஆண்டுகளாக பெண்ணொருவரைக் காதலித்துள்ளார். அதன் பின்னர் அந்தப் பெண்ணிடம் காதலை முறித்துக் கொண்டார் எனக் கூறப்பட்டது. பின்னர் பிக்கு கொரியாவுக்குத் தப்பிச் சென்றுள்ளார். அங்கிருந்து இரண்டு வருடங்களின் பின்னர் நாட்டுக்குத் திருப்பியுள்ளர். பின்னர் அந்தப் பெண்ணுடன் தொடர்பை ஏற்படுத்தி தனது காதலைப் புதிப்பித்துக் கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. அவரைத் திருமணம் செய்து கொள்வதாகப் பிக்கு உறுதியளித்துள்ளார். கடந்த 2010 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி திருமணத்துக்கான பொருள்களை வாங்குவதற்காக பெண்ணைக் கொழும்புக்கு அழைத்துச் சென்றுள்ளார். அதன் பின்னர் இங்கிரிய நாச்சிமலை நீர்தேக்கத்தில் பெண் சடலமாக மீட்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்தனர். சந்தேகத்தில் பிக்கு கைது செய்யப்பட்டார். அவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த வழக்கு பாணந்துறை மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சந்தேக நபருக்கு எதிரான சாட்சியங்கள் நிரூபிக்கப்பட்டன. சந்தேக நபரும் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதனையடுத்து நீதிவான் சாவுத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.
(ஐ-10)

## இந்திய மீனவர்கள் 12 பேருக்கு மறியல்

யாழ்ப்பாணம்.ஓக.11

யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற்பகுதியில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 12 பேர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டது. இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள், யாழ்ப்பாணம் நீரியல்வளத் திணை க்களத்தி னரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

உரிய பதிவுகளை மேற்கொண்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினர் மீனவர்கள் 12 பேரையும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

அவர்களை எதிர்வரும் 23ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை கடந்த 7ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 49 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களும் விள க்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ-101)

# சுங்கத் திணைக்கள பணியகம் வடக்கில்

## 34 வருடங்களின் பின்னர் நேற்று காங்கேசன்துறையில் திறக்கப்பட்டது



யாழ்ப்பாணம், ஓக. 11

34 வருடங்களின் பின்னர் சுங்கத்திணைக்களத்தின் வடக்கு மாகாணத்துக்கான அலுவலகம் தெல்லிப்பழையில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட நிதியமைச்சர் மங்கள சமரவீர அலுவலகத்தைத் திறந்து வைத்தார். பின்னர் அலுவலகத்தின் பெயர்ப்பலகையைத் திறந்து வைத்தார். காங்கேசன்துறை வீதியின் தெல்லிப்பழைப் பகுதியில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டு ஆட்சிக் காலத்தில் நாட்டின் ஜனநாயகத்தையும், சமூக ஒற்றுமையையும் மேம்படுத்தப்பாடுபட்டோம். தற்போது பொருளாதாரத்தை மேம்படுத்தப் பாடுபடுகிறோம். குறுகிய நோக்கோடு கிணற்றுத்தவ ளைகளாக வாழ்வோரின் சதிகளையும் முறியடிப்போம். அதேவேளை இந்தப்பகுதியில் 34 ஆண்டுகளின் பின்னர் சுங்கத் திணைக்களம் மீண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் முதன்முதல் கொழும்பு , காலி , யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலேயே இந்தத் திணைக்களம் இயங்கியது . யாழ்ப்பாணத்தில் இயங்கிய அலுவலகம் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரம் காரணமாக இயங்காமல் போனது. அதன் பின்னர் 2011 ஆம் ஆண்டில் யாழ். பிரதான தபாலகத்தின் ஒரு பகுதியில் இயங்கியது. அது இன்று தனியான அலுவலகமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தின் மூலம் இந்தப் பகுதியில் இடம்பெறும் கடத்தல், சட்ட விரோதப் பொருள்கள் எடுத்து வருதல் என்பன கட்டுப்படுத்தப்படும்." என்று நிதியமைச்சர் மங்கள சமரவீர தனது உரையில் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சிறுவர் மற்றும் மகளிர் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம் , சயந்தன் ஆகியோருடன் சுங்கத்திணைக்கள அதிகாரிகள் , இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ஐ-10, 101)

## பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக. 11

வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களுக்கு நேற்று நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. ஆளுநர் செயலகத்தில் வைத்து அவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே நியமனக் கடிதங்களை வழங்கினார். வடக்கு மாகாண ஆளுநரினால் பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. பின்னர் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் 5 பேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கான கடிதங்களே நேற்று வழங்கப்பட்டது. ஓய்வு பெற்ற யாழ். மாவட்டச் செயலர் செல்லையா பத்மநாதன், வட மத்திய மாகாணத்தின் ஓய்வு நிலைக் கல்விப்பணிப்பாளர் எஸ்.எம்.கலகொட, அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் ஓய்வு பெற்ற பணிப்பாளர் சம்சுதின் லீலாவுதீன், ஓய்வு பெற்ற வடக்கு மாகாண பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் நாகமணி இராசநாயகம், ஓய்வு பெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கதிரவேலு இராசையா ஆகியோரே பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், ஆளுநரின் இணைப்புச் செயலர் எச்.சுமணபால, வடக்கு மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மோகன்ராஸ், வடக்கு மாகாண நிர்வாகச் செயலாளர் உள்ளிட்டபலர் கலந்து கொண்டனர்.

"வடக்கு மாகாணத்தில உள்ள அரச அலுவலங்களில் நிலவுகின்ற பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளனது. அரச அதிகாரிகளுககான பதவி உயர்வுகளும் முறைப்படி வழங்கப்பட வேண்டும். அரச உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் தொடர்பிலும் மிகக் கூடிய அக்கறை செலுத்த வேண்டும். இந்த விடயங்களில் பொதுச்சேவைகள் ஆணைக்குழு காலம் தாழ்த்தாது செயற்பட வேண்டும்." என்று ஆளுநர் தெரிவித்தார். (ஐ - 10, 115)



## இலங்கை மீனவர்கள் விடுவிப்பு

யாழ்ப்பாணம்.ஓக.11

தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் இருவர் நேற்று விடுவிக்க ப்பட்டனர். மீனவர்கள் இருவரையும் இந்தியக் கடலோரக் காவல் படையினர் இலங்கைக் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் இலங்கைக் கடற்படையின் கடலோரப் பாதுகாப்பு பிரிவில் கையளிக்கப்பட்டுள்ளனர். மீனவர்கள் இருவரும் பருத்துறைப்பகுதியைச் சேர்ந்தவர்கள். கடந்த மே மாதம் 20 ஆம் திகதி இந்தியக் கடலோரக் காவல் படையினர் மீனவர்கள் இருவரையும் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி)

# பன்னாட்டு விமான சேவைகளை பலாலியில் ஆரம்பிக்க வேண்டும்

## சுங்கத் திணைக்கள திறப்பு விழாவில் சரவணபவன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக.11

யாழ். மாவட்டத்தில் சுங்கத் திணைக்களப் பணிமனை திறக்கப்பட்டுள்ள நிலையில் பலாலியில் இருந்து பிற நாடுகளுக்கான நேரடி விமான சேவையையயும் ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார். சுங்கத் திணைக்களத்தின் உப அலுவலகம் நேற்று காங்கேசன்துறையில் திறக்கப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கிலிருந்து நேரடியான விமான சேவைகள் இடம்பெறும் போது தான் மக்கள் இந்த அலுவலகள் ஊடான முழுப் பயனையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மயிலிட்டித் துறைமுகம் ஒரு காலத்தில் இந்த நாட்டின் மொத்தக் கடல் உற்பத்தியின் 43 வீதத்தை தன்னகத்தே கொண்டிருந்தது. இப்போது அந்தப் பிரதேசம் அழிவடைந்துள்ளது. மீன்களை ஏற்றுமதி செய்து வந்த மீனவன் தற்போது தனது உணவுக்கு மீனை விலைகொடுத்து வாங்கும் நிலையில் இருக்கின்றான். அந்தப்பகுதி மீனவர்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். மயிலிட்டித் துறைமுகமும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

வட மாகாணத்தில் பெரிய தொழிற்சாலைகள் , நிறுவனங்கள் அமைக்கப்பட்டு அதன் உற்பத்திகள் இந்தத் துறைமுகங்களின் ஊடாக ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். அதன்மூலமே பொருளாதார அபிவிருத்தியையும் வேலை வாய்ப்பையும் பெற்று மேம்பாட்டை எட்டமுடியும். அவ்வாறான தொழிற்சாலைகள் தற்போது இங்கு இல்லை. அவற்றை ஏற்படுத்தவேண்டும் - என்றார். (ற-101)

## வித்தியா வழக்கில் கலா வாக்குமூலம்

கொழும்பு, ஓக.11

சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கில் நீதிமன்ற உத்தரவுப்படி இராஜாங்க அமைச்சரிடம் நேற்றுமுன்தினம் மாலை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

மாணவி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கின் சந்தேகநபரான சுவிஸ் குமாரை மக்கள் கட்டி வைத்திருந்தபோது, அந்த இடத்துக்கு இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் சென்று பார்வையிடும் காணொலி அடங்கிய இறுவட்டு ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்தக் காணொளி தொடர்பில் ஆராய்ந்து நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் ஏ.எம்.எம். ரியால் விடுத்த உத்தரவின் பிரகாரம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இராஜாங்க அமைச்சரிடம் வாக்குமூலம் பதிவு செய்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ற)

# கலா என்று விளிக்கப்பட்டதால் கொந்தளித்தார் விஜயகலா!

யாழ்ப்பாணம், ஓக.11

யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்றில் கலாவிடம் வாக்குமூலம் என்று செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அரசியல்வாதிகளுக்கு ஊடகங்கள் மதிப்பளிக்க வேண்டும்.


இவ்வாறு கூறினார் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்.

சுங்கத் திணைக்களத்தின் உப அலுவலகம் நேற்று காங்கேசன்துறையில் திறக்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சுங்கத் திணைக்களம் யாழ்.மாவட்டத்தில் திறக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். தமிழர் செறிந்து வாழும் இங்கு அமைக்கப்பட்டுள்ள பெயர்ப் பலகையில் சிங்கள மொழியை முன்னுரிமைப்படுத்தி தமிழை இரண்டாவது மொழியாகப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். தமிழர் பகுதிகளில் தமிழ் மொழியை பிரதானப்படுத்த வேண்டும் என்று கோருகின்றேன். கடந்த காலங்களில் ஊடகங்கள் கடந்த அரசால் முடக்கப்பட்டிருந்தன. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவ ணபவனும் இருக்கின்றார். அவருடைய உதயன் பத்திரிகை அலுவலகமும் பல முறை தாக்கப்பட்டிருந்தது. ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டிருந்தார்கள். பல ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டனர். கொழும்பிலும் ஊடக அலுவலகங்கள் தாக்கப்பட்டிருந்தன. கூட்டரசின் ஆட்சியில் ஊடகங்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஊடகங்களுக்கான சுதந்திரத்தில் நாம் ஒருபோதும் கை வைக்கப்போவதில்லை. ஊடகங்கள் சரியானவாறு நடந்து கொள்ள வேண்டும். இரு பகுதியினரதும் விடயங்களை அறிந்து எழுத வேண்டும்.

அண்மையிலும் யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்றில் கலாவிடம் வாக்குமூலம் என்று செய்தி வெளியிடப்பட்டிருந்தது. எனது பெயர் முன்னர் மார்க்கண்டு விஜயகலா. இப்போது விஜயகலா மகேஸ்வரன். ஆனால் பத்திரிகையில் எவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது?. ஊடகத்துக்கு நாங்கள் மதிப்பளிக்கின்றோம். அதே மதிப்பை ஊடகங்களும் தர வேண்டும் - என்றார். (ற-101)



வவுனியாவில் நேற்று மாலை 4 மணியிலிருந்து கடும் மழை பெய்து வருகின்றது. கடந்த இரண்டு நாள்களாகத் மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். (கு)

## புதையல் தோண்டிய நால்வருக்குத் தண்டம்

பதுளை, ஓக. 11
சட்ட விரோதமாகப புதையல் தோண்டிய நால்வருக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. மொனனராகலைப் பகுதியில் சட்ட விரோதமாகப் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மொனராகலை நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்கள் மொனராகலைப் பகுதியின் வெலேவத்தை என்ற இடத்தில் தொல் பொருளுக்கென ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் புதை தோண்டினர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. சந்தேகநபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அவர்களுக்குத் தலா ஆயிரம் ரூபா வீதம் 4 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-10,47)

## கைக்குண்டுடன் இருவர் கைது

மாத்தறை,ஓக 11
மாத்தறை கந்தரப் பகுதியில் கைக்குண்டுடன் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. திக்வல்லப் பிரதேசத்தைச் சேர்ந்த 24 மற்றும் 27 வயதுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். கந்தர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாதோகமப் பொனிக் பாடசாலைக்கு அருகாமையில் பயணித்த முச்சக்கர வண்டியைப் பொலிஸார் சோதனையிட்டனர். அதன் போது முச்சக்கர வண்டியில் பயணித்தவர்களின் உடமையில் இருந்த கைக்குண்டைப் பொலிஸார் மீட்டனர். சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் கந்தரப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ-ரி)



# வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் இன்று உணவு ஒறுப்பு

வவுனியா, ஓக. 11
வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கோரி இன்று ஒரு நாள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். வவுனியா நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போராட்டம் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும் என்று சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா , மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தர நியமனம் கோரியுள்ளனர்.

அதேவேளை, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தையும் மேற்கொண்டு வருகின்றனர். வவுனியாவில் நடத்தப்படும் போராட்டம் இன்றுடன் 100 நாள்களை எட்டியுள்ளது. அதனை முன்னிட்டு இன்று உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. வவுனியா மாவட்டச் சுகாதாரத் தொண்டர்கள் கடந்த மாதம் 4 ஆம் திகதி போராட்டத்தை ஆரம்பித்தனர். வவுனியா பிராந்திய மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு முன்பாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் போராட்டம் கடந்த மாதம் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. “போர்க் காலத்திலும் மற்றும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களிலும் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக சுகாதாரத் தொண்டர்களாக சேவைக்கால அடிப்படையில் கடமையாற்றினோம். தற்போது எமது சேவைக்காலத்தின் அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். வெயில் மழை பாராது ஊதியம் இல்லாமல் பணியாற்றிய எங்களுக்கு நிரந்தர நியமனம் இல்லையா? . நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையிலும் நாங்கள் பணியாற்றக் காத்திருக்கிறோம். எங்கள் நியமனம் தொடர்பாக அரச தலைவர் மற்றும் கொழும்பு சுகாதார அமைச்சர் கவனம் எடுக்க வேண்டும். நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை எங்களது போராட்டம் தொடரும். இன்று உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுக்க வுள்ளோம்” என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர். (ஐ-10)

## நிரந்தர மருத்துவரை நியமிக்கக்கோரி சம்பூரில் கவனவீர்ப்பு

திருமலை, ஓக.11
சம்பூர் பிரதேச மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிக்கக் கோரி பிரதேச மக்கள் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சம்பூர் பிரதேச மருத்துவமனைக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதில் சம்பூர் பிரதேச மக்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் "மருத்துவமனை என்பது திறந்த கட்டடமா, திறந்தது அரச தலைவர் திறப்பு எங்கே?, புதிய மருத்துவர் ஒருவரை அவசரமாக நியமியுங்கள், எமக்கு வேண்டும் நிரந்தர மருத்துவர்" என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். "கடந்த மே மாதம், திறந்து வைக்கப்பட்ட இந்த மருத்துவமனைக்கு இன்னும் நிரந்தர மருத்துவர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. தற்காலிகமாகவே மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரும் எந்த நேரத்தில் மருத்துவமனைக்கு வருவார் என்று எமக்குத் தெரியாது. மருத்துவர் வருகை பற்றிய எந்தவொரு தகவலும் விளம்பரப் பலகையில் இடப்படவில்லை. அவசரமாக ஏற்படுகின்ற நோய்களுக்கு 5 கிலோ மீற்றர் கடந்து மூதூர் தள மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தெரிவித்தனர். (ஐ-10, 40)





## செங்கல் ஏற்றிய ஹன்ரர் கவிழ்ந்தது தலைகீழாய்

வவுனியா, ஓக. 11
அம்பாறையில் இருந்து கிளிநொச்சி நகருக்குச் செங்கற்கள் ஏற்றி வந்த ஹன்ரர் வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டு விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது. அதில் பயணித்த சாரதி, உதவியாளருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. இந்த விபத்து வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை நடந்தது. அம்பாறை யில் இருந்து செங்கற்களை ஏற்றிக் கொண்டு வந்த ஹன்ரர் ஏ9 வீதி ஊடாக பயணித்தது. வவுனியா, தாண்டிக்குளம் பகுதியை அண்மித்தபோது ஹன்ரர் சாரதியின் வேகக் கட்டுப்பாட்டை இழந்தது. வீதியை விட்டு விலகிய ஹன்ரர் தலைகீழாகத் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10, 402)

## இடைக்கால அறிக்கை விவகாரம்:

# சு.க., மகிந்த தரப்புக்கு வழிநடத்தல் குழுவால் மேலும் கால அவகாசம்

யாழ்ப்பாணம், ஓக.11
புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ள வழிநடத்தல் குழு நேற்றுக் கூடிய போதும் உருப்படியான முடிவுகள் எதுவும் எடுக்க வில்லை.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கைக்குப் பின்னிணைப்பாகச் சேர்ப்பதற்கு சிறி லங்கா சுதந்திரக் கட்சிமற்றும் மகிந்த அணிக்கு மேலும் கால அவகாசம் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

வழிநடத்தல் குழு நடப்பு வார நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் அனைத்து நாள்களிலும் கூடுவதற்கு முன்னர் திட்டமிட்டிருந்தது. கடந்த செவ்வாய்க்கிழமை வழிநடத்தல் குழு கூடியது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது யோசனைகளைச் சமர்பிக்கவில்லை. இதனால் மறுநாள் புதன்கிழமை வழிநடத்தல் குழு கூடவில்லை.

இந்த நிலையில் நேற்றைய தினம் வழிநடத்கல் குழு கூடிச் சில நிமிடங்களிலேயே கலைந்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் நேற்றைய கூட்டத்துக்கு வருகை தரவும் இல்லை.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை இறுதி செய்யப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ள விடயங்களுக்கு மாற்றுக் கருத்துக்கள் இருப்பின் அவற்றை தனியான அறிக்கையாகச் சமர்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் மகிந்த அணி ஆகிய தமது யோசனைகளை முன்வைப்பதாகக் கூறியிருந்தன. இதுவரை சமர்பிக்கவில்லை. எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் அதனைச் சமர்பிக்குமாறு இரு தரப்புகளுக்கும் கால அவகாசம் நீட்டப்பட்டுள்ளது. (வ-5)

### 11 தமிழர்கள் கடத்தல்:

# கடற்படைஅதிகாரி தசநாயக்காவை கொல்ல முயற்சி

### சிஐடியினர் நேற்றுநீதிமன்றுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஓக. 11

தலைநகர்கொழும்பில்5மாணவர்கள் உள்பட 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பானவழக்குடன்தொடர்புடையகுற்றச் சாட்டில் விளக்கமறியலிலுள்ள கொமடோர் டி.கே.பி. தசநாயக்கவை கொலை செய்ய கடற்படையைச் சேர்ந்த ஒருவர் முயற்சித்தார் என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்று நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு முழுமையான அறிக்கையைநீதிமன்றில்முன்வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

2008ஆம்ஆண்டுவெள்ளைவேனில் கொழும்பு உள்ளிட்ட சில பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 தமிழர்கள் கடத்தப்பட்டு பின்னர் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில்கடற்படை அதிகாரிதசநாயக்கஉள்ளிட்டசந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

வழக்கின் ஏழாவது சந்தேகநபரான கொமடோர்டி.கே.பி. தசநாயக்கவைத் தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதால் அவரை நேற்றும் நீதிமன்றத்தில் முற்படுத்தவில்லை.

மருத்துவக்காரணங்களின்அடிப்படையிலா? அவரை நீதிமன்றுக்கு முற்படுத்த முடியவில்லை என்பது தொடர்பில் உண்மைத் தன்மையை மன்றுக்கு அறிவிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்குநீதிவான் அறிவுறுத்தினார்.

இதேவளை, இந்த வழக்குடன் தொடர்புடைய அனைவரையும்கைதுசெய்து நீதிமன்றத்தில்முற்படுத்தநடவடிக்கை எடுத்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றுக்கு நேற்று அறிவித்தது. (வ-5)

(மற்றொரு செய்தி பக்கம் 2)

# சட்டம், ஒழுங்கு அதிகாரிகள் மீது அமைச்சர் ராஜித கடும் கோபம்

கொழும்பு, ஓக. 11

சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸார்மீது அமைச்சர்ராஜித சேனாரத்ன நேற்றுக் கடுமையாகச் சாடினார்.

அரசு மாறியுள்ள போதிலும்அரசபொறுப்புக்கள் மாறாதுள்ளதனாலேயே மகிந்த ராஜபக்ச கால திருடர்கள் தப்பித்து வருவதாக சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

“அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பான விசாரணைகள் மிக விரைவாக முன்னெடுக்கப்பட்டன. அதன்விளைவே அவர் குற்றவாளியல்லாத நிலையிலும் பதவியைவிலகவேண்டியநிலைஏற்பட்டது. நல்லாட்சி அரசிலுள்ள ஒரு அமைச்சருக்கு எதிராக இவ்வாறு விசாரணை நடைபெறுகின்றது.

இருப்பினும், கடந்த அரசிலுள்ளவர்களின் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஆவணங்கள் தொடர்பில் மந்த கதியிலேயே விசாரணைகள் இடம் பெறுகின்றன. இதற்கு முக்கிய காரணம் அரசு புதிதாக மாறியிருந்தாலும், அரச பொறுப்புக்களிலுள்ளவர்கள்கடந்த அரசின் ஆதரவாளர்களாகவே இருக்கின்றனர் என்பதாகும்” என்றுஅமைச்சர்ராஜிதமேலும்தெரிவித்தார். (வ)



# பொன்னாலை வெண்கரம் படிப்பகம் தமிழ்ப் பண்பாட்டு முறையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.11

பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தின் ஆரம்ப நிகழ்வும் பெயர்ப்பலகை திரை நீக்கமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தமிழர் பண்பாட்டு நிகழ்வாக இடம் பெற்றது.

வெண்கரம் செயற்பாட்டாளர்மு.கோமகன்தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு இணை முதன்மை விருந்தினர்களாக டென்மார்க் நாட்டின் டெமக்கிரட்டிவ்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் டிரோல்ஸ ரவின்ஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்களும்ஏனைய விருந்தினர்களும் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வைத்து மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

மாணவர்கள் முன்னே சங்கொலி முழங்கிச்செல்ல மாணவிகள் முழு நிறைகுடம் தாங்கிச் செல்ல தமிழ்ப் பண்பாட்டு ரீதியாக விருந்தினர்கள் வெண்கரம் படிப்பகம்நோக்கிஅழைத்துச்செல்லப்பட்டனர்.

அங்கு பெயர்ப் பலகையை நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், டிரோல்ஸ் ரவின்ஸ் ஆகியோர் இணைந்து திரைநீக்கம் செய்துவைத்தனர். அதைத்தொடர்ந்துஅரங்கத்தில்மாணவர்களின்நிகழ்வுகள் இடம்பெற்றன.

வெளிநாட்டில் இருந்து வருகை தந்த விருந்தினர்கள் இங்கு கௌரவிக்கப்பட்டனர். வெண்கரம் படிப்பக ஒருங்கிணைப்புச் செயற்பாட்டுக்கு ஒழுங்காக வருகை தந்த 10 மாணவர்கள்விருந்தினர்களால்மதிப்புறுத்தப்பட்டனர். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

முக்கியமாக, டென்மார்க் டெமக்கிரட்டிவ் கட்சியின் உறுப்பினரும் தாயகம் கரவெட்டியைச் சேர்ந்தவருமானதர்மகுலசிங்கம்தருமனின் மணிவிழாவை முன்னிட்டு அவர் மேற்படி அரங்கில் பொன்னாலை சிவில் சமூக அமைப்புக்களாலும் வெண்கரம் அமைப்பினாலும் மதிப்புறுத்தப்பட்டார். (21)

## முயற்சியாளர் கண்காட்சி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.11

“யாழ் முயற்சியாளர் 2017” என்னும் விற்பனைக் கண்காட்சி இன்று நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்கா வளாகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கண்காட்சி தொடர்ந்து மூன்று தினங்கள் அங்கு இடம்பெறவுள்ளது.

சிறு தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும், அவற்றுக்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் யாழ்ப்பாண மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் இந்தக் கண்காட்சி ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது.

இன்று ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு உற்பத்திப் பொருள்களைக் குறைந்த விலையில் கொள்வனவு செய்து பயன்பெறுமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினர் கேட்டுக் கொண்டனர். (21)

### சுமந்திரன் கொலை முயற்சி:

# சந்தேகநபர்களின் பிணைமனு மேல் நீதிமன்றால் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 11

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக் கொலை செய்யமுயன்ற குற்றச் சாட்டில் விளக்கமறியலில் உள்ள சந்தேகநபர்களின் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை மனு மீதான விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் 19 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. 5 சந்தேகநபர்கள் சார்பிலும் சட்டத்தரணி அர்ஜுனா பிணை மனுத் தாக்கல் செய்திருந்தார்.

அதனை மன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டது. அவர்கள் தொடர்பான விசாரணைகள் நிறைவடையவில்லை என்றுகூறிய அரச சட்டத்தரணி நிஷாந் நாகரட்ணம் பிணை வழங்க ஆட்சேபனை தெரிவித்தார். ஆட்சேபனைக்கான தகுந்த காரணங்களைமுன்வைக்குமாறு அரச சட்டத்தரணிக்கு மன்று பணித்தது. (4)

# நடைபாதைவியாபாரிகளின் போராட்டமுயற்சிகைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ்ப்பாணம்நகரமையப்பேருந்துநிலைய சூழலில் நீண்டகாலமாக நடைபாதை புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வியாபாரிகளில் சிலர் தாம் தொடர்ந்து அந்த இடத்திலேயே வியாபாரத்தைத் தொடரப் போவதாகக்கோரிநேற்றுபோராட்டம்நடத்தத் திட்டமிட்டிருந்தனர். எனினும்அந்தப்பகுதிக்கு வந்த பொலிஸார் நீதிமன்றத்தில் இந்த விவகாரகமுள்ளதால் போராட்டம் நடத்த வேண்டாமென அறிவுறுத்தினர். அதனால் வியாபாரிகள் போராட்டத்தை கைவிட்டனர்.

யாழ்ப்பாணம்நகரப்பேருந்துநிலையத்துக்கு வெளியேதனியார்பேருந்துத்தரிப்பிடத்துக்கு அருகே நீண்டகாலமாக புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட 9 வியாபாரிகளே இந்தப் போராட்டத்துக்கான ஏற்பாட்டை மேற்கோண்டிருந்தனர்.

யாழ்ப்பாண நகரின் நடைபாதை வியாபாரத்தில் பலர் ஈடுபட்டுவந்தனர். அந்த வியாபாரிகளிடம் யாழ்ப்பாணம் மாநகர சபையும் வரி அறவிட்டே வந்தது. எனினும் நடைபாதை வியாபார நடவடிக்கைகளை நிறுத்த அறிவுறுத்திய காலப்பகுதி முதல் மாநகரசபைவரிஅறவீட்டைநிறுத்தியிருந்தது.



நீண்டகாலமாக நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டோருக்காக யாழ்ப்பாணம் மாநகர சபையால் தற்போது தனியான அங்காடிக் கடைத்தொகுதியாழ்ப்பாணநகரில்அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து பல வியாபாரிகள் அந்தக் கடைத் தொகுதிக்குள் தமது வியாபாரத்தை ஆரம்பித்துள்ளனர். எனினும்9வியாபாரிகள் மட்டும் தம்மை தொடர்ந்தும் பழைய இடத்திலேயே வியாபாரத்தில் ஈடுபட அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். அதனை நிராகரித்த மாநகர சபை, இந்த விடயத்தைநீதிமன்றம்வரைகொண்டுசென்றது. (வ-101)

# செயலமர்வு

ஏ.எஸ்.என்.கல்வி நிலையம் நடத்தும் வெற்றிக்கு வழி இலவச செயலமர்வு இன்று வெள்ளிக் கிழமை காலை 8.30 மணிக்கு காமாட்சி அம்பாள் திருமண மண்டபத்தில் (கருணை இல்லம் முன்பாக, உரும்பிராய்) நடை பெறவுள்ளது.

இந்த செயலமர்வில் முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன் யாழ்ப்பாணத்தின் முன்னணி ஆசிரியர்கள் கலந்துகொள்கின் றனர். எனவும் கல்வி நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (4)

# கணபதி ஹோமம்

யாழ்ப்பாணம், ஓக 11

நீர்வேலிஅரசகேசரிப்பிள்ளையார்கோயிலில்இன்றுவெள்ளிக்கிழமைகணபதிஹோமம்இடம்பெறும்எனஅறிவிக்கப்பட்டது. இன்றுகாலை 8மணிக்குசிறப்புப்பூசைகள், அபிசேகம்இடம்பெற்றுத்தொடர்ந்துகணபதிஹோமம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. (21,17)

# தெய்வீகத் தொடர் இசைப் பேருரை ஆறாம் நாள் இன்று

யாழ்ப்பாணம், ஓக.11
யாழ்ப்பாணம் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் இடம்பெறும் " தெய்வீகத் தொடர் இசைப் பேருரை" யின் ஆறாவது நாளான இன்று கம்பராமாயணத்தின் "கைதேகி வரம்" எனும் பகுதி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் இடம்பெறும். நிகழ்வை கான கதா வாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா நிகழ்த்துகிறார் என அறிவிக்கப் பட்டது. (21,ரி)

# தெய்வீக இசையரங்கு நல்லூரில்

யாழ்ப்பாணம்.ஓக.11
இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் திருவிழா காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் ஏற்பாட்டில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று பாட்டு தேனுகா கருணாகரனும், வயலின் சுவர்ணாங்கி சுதர்சனும், மிருதங்கம் சி.செந்தூரனும், கெஞ்சிரா நா.சிவசுந்தரசர்மாவும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்தநிகழ்வுநல்லூர்துர்க்காதேவிமணி மண்டபத்தில் மாலை 6.45 தொடக்கம் மாலை 8 மணி வரை இடம்பெறும், அத்தோடுஎதிர்வரும்23ஆம்திகதிவரை ஒவ்வொருநாளும் நிகழ்வு இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டது. (21)

# விளாவெளி மயானத்தை துப்புரவு செய்ய வேண்டும்

## வலி.தென்மேற்கு பிரதேச மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.11
விளாவெளி இந்து மயானம் அபிவிருத்திகள் இன்றிபற்றைக்காடாகக் காணப்படுகிறது. இதனால் விசஜந்துக்களின்வரத்தும், நுளம்புத்தொல்லைகளும்அதிகரித்துள்ளன. இவற்றிடமிருந்து மக்களைக் காப்பாற்றும் வகையில், மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன்பு மயானத்தைத் துப்புரவு செய்யவேண்டும். இதற்குச்சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கைவிடுத்தனர்.

வலி.தென்மேற்குப்பிரதேசத்தில் பண்டத்தரிப்புப் பட்டினத்தில் ஜே/146 கிராம அலுவலகர் பிரிவில்அமைந்துள்ளதுவிளாவெளி இந்து மயானம். 5கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்த மயானத்தைப் பயன்படுத்தி வருகின்றார்கள். மயான அபிவிருத்திச் சபையும் தெரிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றது. எனினும் மயானம்பலவருடங்களாகப்பராமரிப்பின்றிக்கைவிடப்பட்டநிலையிலி ருக்கிறது. மயானத்துக்குச் செல்லும்மக்கள் பெரும்சிரமங்களுக்குமுகம்கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இந்த நிலை குறித்து மக்கள் வலி. தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளருக்குச் சுட்டிக்காட்டினார். மக்களின் நலன்கருதி மயானத்தைஅபிவிருத்திசெய்வதற்கு பிரதேச சபைச் செயலாளர் முன்வந்தார். வலி.மேற்கு, வலி.தென்மேற்குபிரதேசங்களின்எல்லைப் பகுதியில் மயானம் அமைந்துள்ளமையால்மயானத்தின்நிலைப்பாடு குறித்து அறியத் தருமாறு சண்டிலிப்பாய்பிரதேசசெயலாளரைக் கோரினார். இரு பிரதேச மக்களையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு அழைத்த சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் அவர்களுடன் பேச்சுநடத்தினார். இரு பிரதேச மக்களும் மயானம் தங்களுக்குத் தான் உரிமையென்று வாதாடினர். இதனால் பேச்சுத்தீர்வின்றிமுடிவடைந்தது. இந்த நிலையிலேயே குறித்த மயானத்தைதுப்புரவுசெய்துதருமாறு வலி.தென்மேற்கு பிரதேச மக்கள் சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரிக்கு எழுத்து மூலம் அறிவித்தனர்.

மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன்மயானத்தைத்துப்புரவுசெய்யுமாறு சுகாதார மருத்துவ அதிகாரிமயானஅபிவிருத்திச்சபைக்கு அறிவித்துள்ளார். இரு பிரதேச மக்களும்மயானத்திற்குஉரிமை கோரிமுரண்படுவதால்மயானத்தின் அபிவிருத்தியில் தடங்கலும் தாமதமும் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (21,115)

# கந்தபுராண வாழ்வியல் 15ஆம் நாள் இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு கந்தராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள்அரங்கேறும்"கந்தபுராணக் கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்"15ஆம்நாள்நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமயக் கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில்நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரி அதிபர் ஐயம்பிள்ளை தயானந்த ராஜா கலந்துகொள்ளவுள்ளார்என தெரிவிக்கப்பட்டது. (21)

# இந்திய மீனவர் 12 பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 11
நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் 12 பேர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப் பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்பட்டனர். 3 றோலர் படகுகளில் அவர்கள் இலங்கைக் கடற்



பரப்புக்குள் தொழிலில் ஈடுபட்டனர் என கடற்படையினர் தெரிவித்தனர். அவர்களது படகு காரைநகர் கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. 12 பேரும் கடற்றொழில் நீரியல்வளத்துறைத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதி மன்றில் நேற்று முற்படுத்தப்பட்ட னர். அவர்களை எதிர் வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தர விட்டது.

கடந்த 7 ஆம் திகதியும் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி வந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 49 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு யாழ்ப்பாணம் சிறையில் 61 தமிழக மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4,8,101)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 60 | 60 |
| கத்தரி | 70 | 80 | 100 | 100 | 80 |
| மரவள்ளி | 60 | 100 | 80 | 60 | 80 |
| பயிற்றை | 100 | 120 | 120 | 100 | 140 |
| பாகல் | 150 | 100 | 240 | 160 | 200 |
| க.கிழங்கு | 120 | 130 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 130 | 90 |
| சி.வெங்காயம் | 140 | 340 | 160 | 160 | 130 |
| பூசணி | 90 | 50 | 60 | 60 | 60 |
| தக்காளி | 140 | 140 | 160 | 150 | 120 |
| வாழைக்காய் | 100 | 110 | 80 | 80 | 60 |
| கீரை | 25 | 20 | 40 | 10 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 40 | 30 | 20 |
| ப.மிளகாய் | 300 | 300 | 380 | 350 | 300 |
| புடோல் | 100 | 80 | 80 | 100 | 100 |
| கோவா | 120 | 160 | 140 | 130 | 120 |
| வெண்டி | 80 | 80 | 60 | 80 | 60 |
| போஞ்சி | 100 | 180 | 180 | 180 | 180 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 | 120 |
| தேங்காய் | 60 | 60 | 70 | 70 | 60 |
| உ.கிழங்கு | 100 | 100 | 110 | 110 | 120 |
| தேசிக்காய் | 60 | 50 | 80 | 60 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 150 | 160 | 200 | 140 | 300 |
| கரட் | 160 | 200 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 70 | 180 | 60 | 40 | 40 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 1200 | 80 |
| நண்டு | 400 | 300 | 600 | 4 00 |
| கணவாய் | 800 | 700 | 800 | 800 |
| பாரை | 600 | 500 | 700 | 600 |
| சுறா | 500 | 700 | 1000 | 900 |
| சீலா | 400 | 400 | 500 | 500 |
| விளை | 600 | 400 | 600 | 500 |
| முரல் | 400 | 400 | 450 | 400 |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | — | 600 | 600 |
| ஓரா | 350 | 300 | 450 | 400 |
| திரளி | 300 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | 200 |
| சூடை | 200 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 300 | 200 | 300 | 300 |
| திருக்கை | 400 | 200 | 400 | 250 |
| மதனம் | 250 | 150 | 250 | 300 |
| கொய் | 200 | 30 | 80 | 50 |
| பாலை | 300 | 200 | 500 | 300 |
| வாழை | 200 | 200 | 400 | 250 |




ஆண்களுக்கான 'வி' கழுத்து வடிவமைப்புடைய 'ரீ' சேட் வகைகள் தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை முழு நீளக் கைகளுடன் காணப்படுகின்றன. இவை ஆயிரத்து 250 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# விளையாட்டுத்துறைபிரதி அமைச்சர் பக்கச் சார்பாக செயற்படுகிறார்

## சாள்ஸ் எம்.பி. நாடாளுமன்றில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக. 11

“விளையாட்டுத்துறையின் பிரதி அமைச்சர் கரிஸ் கடந்த இரண்டு வருடங்களாக மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் இளைஞர்களின் விளையாட்டுக் கழகங்க ளுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்து பாகுபாட்டை ஏற்படுத்துகின்றார்”

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்சாள்ஸ்நிர்மலநாதன் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினார்.



இது தொடர்பில் அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

விளையாட்டுத்துறையின் பிரதி அமைச்சர் கரிஸ் கடந்த இரண்டு ஆண்டுகளாக மன்னார் மாவட்டத்துக்கென 12 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளார்.

ஆனால் அந்த நிதி முழுவதும் முஸ்லிம் இளைஞர்களின் விளையாட்டுக் கழகங்களுக்கு மட்டுமே ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

12 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களில் ஒன்றுகூட தமிழ் இளைஞர்கள் வாழும் பிரதேசத்து விளையாட்டுக் கழகம் கிடையாது. இவ்வாறு வேண்டுமென்றே ஓர் அமைச்சு செயற்படுவது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

தனி ஓர் பிரதேசத்துக்கோ அல்லது மதத்துக்கோ உரித் தானது அல்ல விளையாட்டுத்துறை அமைச்சு. எனவே இவ்வாறு பிரதி அமைச்சர் செயற்படுவது தொடர்பில் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

பதிலளித்த பிரதி அமைச்சர் கரிஸ், “இது தவறான கூற்று. மன்னார்மாவட்டத்திலே பள்ளிமுனை நகர சபையின்கழகத்துக்கும் 33 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டது” என்றார்

இதற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ், “அந்த நிதியை விளையாட்டுத் துறை அமைச்சுஒதுக்கீடுசெய்யவில்லை. நாம் நகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க விடம் விடுத்தவேண்டுகோளின் அடிப்படையில் அவரின் அமைச்சின் ஊடாகவே ஒதுக்கீடு செய் யப்பட்டது அன்றி விளையாட்டுத் துறை அமைச்சர் அதற்கு ஒரு ரூபா பணம்கூட வழங்கவில்லை. சபையை தவறாக வழி நடத்தக்கூடாது” என்றார்.

(4,101)

---

### புதிய ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்க

## 17.5 கோடி ரூபா மேலதிக நிதி தேவை

யாழ்ப்பாணம், ஒக.11

வடமாகாண பாடசாலைகளில் புதிதாக ஆசிரியர் நியமனம் பெற்றவர்களுக்கான சம்பளத்தை வழங்க இந்த ஆண்டில் 17.5 கோடி ரூபா மேலதிகமாகத் தேவைப்படுகிறது. இந்த நிதியை ஒதுக்குமாறு திறைசேரியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. திறை சேரியிடமிருந்து பெற்றுக் பெற்றுக் கொடுக்கவும் மாகாண அமைச்சர்கள் சபையால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்தது.

இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும்,இலங்கை ஆசிரியர் சேவை 3ஆம் வகுப்பு தரம் 1(அ) இற்குரிய பதவி வெற்றிடங்களுக்கு 559 பேர் இந்த வருட நடுப்பகுதியில் நியமிக்கப்பட்டனர். இவர்களில் 505 பேர் கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர்.

அவர்களுக்கான சம்பளத்தை வழங்குவதற்கு உரியநிதி 2017ஆம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டில் உள்ளடக்கப்படவில்லை. ஆகவே இது தொடர்பாக 51ஆவது அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

புதிதாக நியமனம் வழங்கப்பபட்டவர்களுக்கு சம்பளம் வழங்க 17 கோடியே 48 லட்சத்து 59 ஆயிரத்து 280 ரூபா (174,859,280) தேவை என்று சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கான நிதியைப் பெறுவது தொடர்பாகவும் கலந்துரை யாடப்பட்டது.

புதியநியமனத்துக்கானமேலதிகஒதுக்கீட்டை நிதி ஆணைக்குழுவின் ஊடா கப் பொது திறைசேரியிடமிருந்து பெற்று அதனை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு க்கு வழங்க மாகாண அமைச்சர் சபையால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (4,ரி)

---

# வடக்கில் இணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்த இருதரப்புக்கும் கடிதங்கள்

## மாகாண போக்குவரத்து அமைச்சுக் கூறுகிறது

யாழ்ப்பாணம், ஒக.11

வடக்கு மாகாணத்தில் போக்குவரத்துக்காக இணைந்த நேர அட்டவணையை விரைவில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தனியார் மற்றும் அரச போக்குவரத்துப் பணியில் ஈடுபடும் தலைமை அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு குறித்த கடிதங்களை அனுப்பியுள்ளதாக அந்த அமைச்சுத் தெரிவித்தது.

இது தொடர்பில் அமைச்சு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் மக்களுக்குச் சிறப்பான போக்குவரத்துப் பணியை முன்னெடுக்க வடக்கு மாகாண அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. போக்குவரத்துப் பேருந்துகளை பணிக்கு அமர்த்துவதில் 60:40 என்ற முறைமையை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரச மற்றும் தனியார் பேருந்து பணியில் ஈடுபடுபவர்களை அழைத்துக் கலந்துரையாடி வருகின்றோம். பயணிகளை ஏற்றும்போது பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்காக வடக்கு மாகாணத்தில் 159 நேரக் கணிப்பு மையங்கள் வகுக்கப்பட்டுள்ளன. 25 பேருந்து தரிப்பிடங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.


ஆனால் சில காரணங்களுக்காக இரண்டு தரப்பினரும் ஒத்துவராத தன்மையே காணப்படுகிறது. இன்று வரை இது இழுபறியில் உள்ளது. இணைந்த நேர அட்டவணை மற்றும் வவுனியா புதிய பேருந்துநிலையத்தைத் திறப்பது தொடர்பில் நாம் மும்முரமாகச் செயற்பட்டு வருகிறோம்.

இதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. தனியார் பேருந்து சங்கங்களின் தலைவர்களுக்குக் கடிதங்கள் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அத்துடன் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அமைச்சுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அரச பேருந்து சேவையில் ஈடுபடுபவர்களின் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது என்று அமைச்சுத் தெரிவித்தது.

(4,ரி)

---



## 15ஆம் திருவிழா

### உனையன்றி யார் ஐயா

முருகா உன் பெயர் சொல்ல
எம் வினைகள் நீங்குமே
நாம் செய்த பாவங்கள்
எல்லாம் அகன்றுவிடும்
குழந்தை முருகா உன்
முகம்காண நம் வினைகள்
யாவும் பறந்து ஓடிவிடும்
நீ இருக்கும் வரை
எங்கள் குலத்துக்கு
எது கவலை செல்வா!

உன் திருப்பாதங்கள்
தனில் நாம் வணங்கிட
நூறு ஜென்ம வினைகள்
தீர்ந்துவிடும் வேலவா!
உனையன்றி யார் ஐயா
எம் தெய்வமே
நீ இருக்கும் ஆலயம்
தேடி வரும் புண்ணியம்
நமக்கல்லவா நல்லூரா!

*சுபானுஜன், தெல்லிப்பழை.*

### தேவலோகமும் நல்லூரே

**பல்லவி**

முருகனைக் கண்டேனய்யா
அவன்மலையேறி ஓடினான்
நல்லூரில்

**அனுபல்லவி**

மலையும் நகர்ந்ததோ
நல்லூருக்கு அவன்
தன்னையே காட்டினான்
எந்தனுக்கு

**சரணம்**

தேவலோகமும் நல்லூரோ
அவன் இலங்கையில்
விரும்பும் பழனியுமோ
பச்சிளம் பாலகனாய் காட்சி
தந்தான் அவனை
கட்டி அணைக்கவில்லை
தலைதொட்டேன்

மனம் என்னை விரட்டியது
சென்று விட்டேன் நான்
கண்டு கொண்டேன் அவன்
முருகனென்று கண்கண்ட
தெய்வமே என்முருகா
உன்னைகட்டியணைக்க
ஆவல் கொண்டேன்

*மலர் சின்னையா*

### பூதலத்துக் கீந்திடப்பா

கன்னித் தமிழ்சுரக்கும் கந்தலடி வேலவனே
பின்னிப் பிணைந்தெமக்குப் பேராற்றல் ஈபவனே
உன்னி உனைவழுத்தும் உத்தமத்தைத் தந்தவனே
மன்னு புகழ் சேர்த்து மாதலத்தைக் காத்திடப்பா

சித்தம் தெளிய வைக்கும் சிருங்கார நாயகனே
நித்தம் எமைக்காத்து நிம்மதியை யீந்திடப்பா
பித்தம் பிடித்துன் மேல் பேயா யலைகின்றோம்
புத்தம் புது வாழ்வைப் பூதலத்துக் கீந்திடையா

*கலாபூசணம் கலைமாமணி*
*கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்*






# தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை மாகாண சபை நிறைவேற்றவில்லை

## புதிய உறுப்பினர் ஜெயசேகரம் கன்னி உரை

யாழ்ப்பாணம், ஓக. 11

எந்த நோக்கத்துக்காகத் தமிழ் மக்கள் அணிதிரண்டு தங்களது பலத்தைக் காட்டி இந்த மாகாண சபையை தெரிவு செய்தார்களோ, அந்த மக்களின் பல எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற இந்தச் சபை தவறியுள்ளது. கடந்த 45 மாதங்களில் நாங்கள் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. இவ்வாறு வடக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினராகப் பதவியேற்ற யாழ். வணிகர்கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தனது கன்னி உரையில் குற்றஞ்சாட்டினார். சபையின் 101 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் மக்களின் நீண்டகால அபிலாசைகளுக்கும் ஆழமான எதிர்பார்ப்புக்கும் மத்தியில் தமிழ் மக்களின் அமோக ஆதரவுடன் இந்த சபை உருவாக்கப்பட்டது.

மொத்த தேசிய உற்பத்திக்கு வடக்கு மாகாணத்தின் பங்களிப்பை அதிகரிக்கவில்லை. தண்ணீர் பிரச்சினையை நாம் சரியான முறையில் கையாளவில்லை. நீரைத்தேக்கி வைக்கக்கூடிய, வழுக்கையாறு திட்டம், உப்பாற்றுத் திட்டம் போன்றவற்றை அபிவிருத்தி செய்திருக்கலாம். இதன் மூலமாக நிலத்தடி நீரையாவது பாது காத்திருக்க முடியும்.

மறுவாழ்வு விடயத்துக்கும் வாழ்வாதாரத் திட்டத்துக்கும் முதலமைச்சர் நிதியத்துக்கான அனுமதியை எதிர்பார்க்காமல் சட்டரீதியாக வேறு பொறிமுறையை கையாண்டிருக்கலாம். நாங்கள் அந்த முயற்சியை எடுக்கவில்லை. போரால் கைவிட்ட நெல்வயல்கள், விவசாய நிலங்களை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ள வில்லை. மீன்பிடித்துறையில் போதுமான அபிவிருத்தி மேற்கொள்ளவில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே அதிகளவான மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ளனர்.

கல்வியில் பின்தங்கியுள்ள நாங்கள் கல்வியியலாளர்களையும், புத்திஜீவிகளையும் உள்ளடக்கிய ஆலோசனைக் குழுவை வலுவுள்ளதொரு அமைப்பாக உருவாக்குவோமாக இருந்தால் கல்வித்துறையில் முன்பு இருந்த இடத்தை நாங்கள் மீண்டும் பெறமுடியும்.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் எமக்கு எஞ்சியிருப்பது மூன்று தெரிவுகளே. ஒன்று அபிவிருத்தியை நோக்கி பயணிப்பது. மற்றையது தன்னிறைவான பொருளாதாரத்தை நோக்கிப் பயணிப்பது. அடுத்தது அறிவுபூர்மாகவும் இராஜதந்திர ரீதியாகவும் தமிழ்மக்களுக்கான தீர்வை நோக்கிப் பயணிப்பது.

அறிவுபூர்மாகவும் இராஜதந்திர ரீதியாகவும் தமிழ்மக்களுக்கான தீர்வை நோக்கி பயணிப்பதற்கு எமது தலைவர்கள் முயன்று கொண்டு இருக்கின்றார்கள். அதிலே நாம் வெற்றியடைவோம் என்று நம்புகின்றோம். ஏனைய இரண்டு விடயங்களையும் நாம் முன்னெடுக்கத் தவறிவிட்டோம்.

நான் இங்கே எல்லாவற்றையும் குறைகூற வரவில்லை. ஆக்கபூர்வமான மாற்றுத் திட்டங்களை அல்லது எவ்வாறான திட்டங்களை மேற்கொண்டால் எமது இலக்கை அடையலாம் என்ற கருத்தையே முன்வைக்கின்றேன். போரால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு எமக்குண்டு. தன்னிறைவான பொருளாதாரத்தை நோக்கி நகர்வதற்கு எங்களுடைய வளங்கள் எங்கெங்கே இருக்கின்றன என்பதனை அறிந்து எவ்வாறு வளங்களைப் பயன்படுத்த முடியும்? எங்கெங்கே தொழிற்சாலைகள் அமைக்க முடியும்? எங்கெங்கே உப்பளங்கள் அமைக்க முடியும்? எங்கெங்கே விவசாய நிலங்களைப் பெருந்தோட்டத்துறையை பெருக்க முடியும்? மீன்பிடித்துறையை எப்படி வளர்த்தெடுக்க முடியும்? அப்படியான பல திட்டங்களை அந்தத் திட்ட குழு வகுக்க முடியும். அப்படி வகுத்தால் எதிர்காலத்தில் எந்த இடங்களில் எவ்வாறான மையங்களை அமைக்கலாம் என்பதனை முன்கூட்டியே அறியக்கூடியதாக இருக்கும். அதற்கான குழுக்களை உருவாக்க வேண்டும். வடக்கு மாகாணசபையின் அனுமதியில்லாமல் எந்தக் காணிகளையும் அரச அதிகாரிகள் கையாளக்கூடாது என்பதனை சட்டரீதியாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட வேண்டும். அரச அதிகாரிகளுக்கு இது ஒரு அறிவுறுத்தலாகவும் அமையும். இப்படிப்பட்ட நடை முறைகளை நாங்கள் உடனடியாக முன்னெடுக்க வேண்டும். பெரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி மூலங்களைப் பெற்றுக்கொள்வதில் நாம் சரியாக செயற்படவில்லை. உதாரணமாக யாழ். மாநகர பாதாள சாக்கடைத்திட்டம் கழிவு முகாமைத்துவம் போன்ற விடயங்களில் நாம் முனைப்பாக செயற்படவில்லை. எம்மால் இலகுவாக மேற்கொள்ளப் படக்கூடிய பல வேலைத்திட்டங்களைக்கூட நாம் செய்யவில்லை. இது வேதனை தரக்கூடிய விடயம் என்றார். (4,8)

# மாகாண சபையை எட்டியது இந்துமயானப் பிரச்சினை

யாழ்ப்பாணம், ஓக. 11

வடக்கு மாகாணத்தில் மயானங்களைச் சுற்றி 200 மீற்றர் சுற்றுவட்டத்துக்குள் கட்டடங்கள் அமைக்கப்படுவது தொடர்பில் மாகாண உள்ளூராட்சி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நீர்வேலியில் மயானம் ஒன்றை அண்மித்துள்ள குடியிருப்பாளர்கள் தமது பிரச்சினை தொடர்பில் மாகாண பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் கருத்து முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாக அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்ததாவது:

"நீர்வேலி கிந்துப்பிட்டி மயான பிரச்சினையில் நாம் தலையிட விரும்பவில்லை. ஏனெனில் அந்த விடயம் நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

ஆனால் மயானங்களைச் சுற்றி 200 மீற்றர் சுற்றுவட்டத்துக்குள் இனிவரும் காலங்களில் குடியிருப்புக்களை உருவாக்குவது தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

"வடக்கு மாகாணத்தில் பல மயானங்கள் அரச மற்றும் தனியார் காணிகளில் காணப்படுகின்றன. அனைத்து மயானங்களையும் உள்ளூராட்சித் திணைக்களம் பொறுப்பேற்க வேண்டும்" என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தனது கருத்தைப் பதிவு செய்தார்.

"கொக்குவிலில் உள்ள மயானத்தை அண்மித்துள்ள, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் விடுதி அனுமதி பெறப்படாமல் தான் கட்டப்பட்டதாக அறியமுடிகின்றது.

மயானத்துக்கு அருகே உள்ள கட்டடங்களுக்கு என்ன நடவடிக்கை எடுக்கலாம்? எதிர்காலத்தில் இவ்வாறு கட்டடங்கள் அமைக்கப்படாது இருக்க என்ன நடவடிக்கை எடுக்கலாம்? என்பன தொடர்பில் சரியான கொள்கைகளை நடைமுறைப்படுத்தவேண்டும்" என்று சபையின் எதிர்க் கட்சித் தலைவர் தவராசா குறிப்பிட்டார்.

அதன் பின்னர் கருத்து தெரிவித்த உறுப்பினர் விந்தன், "கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் இறந்தவர்களின் சடலங்களை மயானங்களில் புதைக்கின்றனர். ஆனால் இந்து மதத்தினர் இறந்தவர்களின் சடலங்களைத் தீயில் இட்டு எரிக்கின்ற முறையைப் பின்பற்றுகின்றனர்.

இவ்வாறு உடலங்களை எரிப்பதால் புகை மண்டலமும் துர்நாற்றம் வீசுவது உள்ளிட்ட சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படுகின்றன" என்றார்.

"சில இடங்களில் உள்ள மயானங்களில் சுற்றுச்சூழல் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்குமாறு பணித்துள்ளேன். அறிக்கையைப் பார்த்த பின்னர் குடியிருப்புக்கு அண்மையில் உள்ள, இடம்மாற்ற வேண்டிய மயானங்களை அகற்றுவது தொடர்பில் தீர்மானிப்பேன்" என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதிலளித்தார்.

சிறுப்பிட்டி, கிந்துப்பிட்டி மயானத்தைப் பயன்படுத்துவதால் தமக்கு சுகாதாரப் பிரச்சினை உள்ளதாக மயானத்தை அண்மதித்துள்ள மக்கள் கூறுகின்றனர். அந்த மயானத்தில் சடலங்களை எரிக்க வேண்டாம் என்று கோரி, மயானத்தை அண்மித்துள்ள குடியிருப்பாளர்கள் தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு முன்னர் மயானத்தில் சடலங்களை எரிப்பதற்கு குடியிருப்பாளர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நீதிமன்றின் உத்தரவில் மயானத்தைச் சுற்றியிருந்த மதில் இடித்து வீழ்த்தப்பட்டது. அது தொடர்பில் விசாரிக்க அங்கு பொலிஸார் சென்றனர். அதன்போது ஏற்பட்ட முறுகலால் பொலிஸார் திரும்பிச் சென்றனர். சில நாள்களின் பின்னர் 3 பேரை பொலிஸார் கைது செய்தனர். அதனால் பொலிஸாருக்கும் குடியிருப்பாளர்களுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது. பின்னர் 9 பேரை பொலிஸார் கைது செய்தனர். பெயர் குறிப்பிடப்பட்ட 45 பேரைக் கைது செய்ய நீதிமன்று உத்தரவிட்டது. அவர்களில் பலர் சரணடைந்தனர். (4,8)

# உண்மையை அறிந்துகொள்ள ஆர்.ரி.ஐயை பயன்படுத்துங்கள்

## சபையில் சொன்னார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஓக. 11

சபையில் கேட்கப்பட்ட கேள்விக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் (ஆர்.ரி.ஐ.) பதிலை அறிந்து கொள்ளுங்கள் என்று தட்டிக் கழித்தார் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். யாழ். மாநகர சபைக்குட்பட்ட நிகழ்வுகளுக்கு சபையின் எல்லைக்குள் வசிக்கும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு மட்டுமே அழைப்பு அனுப்பும் படி முதலமைச்சர் உத்தரவிட்டாரா என்பது தொடர்பில் மாநகர சபை ஆணையாளர் சொல்வது உண்மையா பொய்யா என்பதை அறிந்துகொள்ளவே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தும் படி முதலமைச்சர் தெரிவித்தார்

வடக்கு மாகாண சபையின் 101 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது.

"யாழ்ப்பாண மாநகர சபையின் வைபவ ரீதியான நிகழ்வுகளுக்கு யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைக்குள் வாழும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு மட்டும் அழைப்பிதழ் அனுப்புமாறு மாநகர சபைக்கு தங்கள் அமைச்சின் ஊடாக எழுத்து மூலமான அறிவுறுத்தல்வழங்கப்பட்டதா?" என்று சபையின் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா முதலமைச்சரிடம் வாய் மூலமாகக் கேள்வி எழுப்பினார். "நான் அவ்வாறு எழுத்து மூலமாக எந்த அறிவுறுத்தலையும் வழங்கவில்லை" என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பதிலளித்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த தவராசா, "யாழ்ப்பாண நகரில் அங்காடி வியாபாரிகளுக்கான கடைத்தொகுதியைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதற்கு யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட வடக்கு மாகாணசபை உறுப்பினர்களை மட்டும் அழைப்பது தொடர்பில் யாழ்ப்பாண மாநகர சபைக்கு வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சால் தமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக மாநகர சபையின் ஆணையாளர் பொ.வாகீசன் எனக்குத் தெரிவித்தார். ஆணையாளருக்கு அமைச்சினால் அவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறியதாலேயே முதலமைச்சரிடம் இப்படி கேள்வியெழுப்பியுள்ளேன். ஆனால் முதல்வரோ, தான் அவ்வாறு அறிவுறுத்தல் வழங்கவில்லை என்று தற்போது கூறுகிறார். அப்படியாயின் ஆணையாளர் பொய் கூறுகின்றாரா" என்று விசனத்துடன் சபையில் கருத்துக்களை முன்வைத்தார்.

"ஆணையாளர் கூறுவது பொய் என்றால் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்தார்.

"நான் மாநகர சபை ஆணையாளருக்கு எவ்வித அறிவுறுத்தல்களையும் வழங்கவில்லை. அறிவுறுத்தல் வழங்கியதாக ஆணையாளர் கூறினால் நீங்கள் தகவல் அறியும் சட்டம் ஊடாக யாழ்ப்பாண மாநகர சபையிடம் கேளுங்கள்" என்றார் முதல்வர். (4,8)

8,000 பக்கங்களை 48 மணி நேரத்தில் படிக்க முடிந்தால்

# மகிந்த ஆட்சியில் நடந்த மோசடிகளை விசாரிக்க ஏன் இந்தத் தாமதம்?

## தன்னிலை விளக்கத்தில் ரவி கேள்வி



கொழும்பு, ஓக.11

சட்டமா அதிபர் திணைக் களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தனது பதவி உயர்வுக்காக பக்கச் சார்பான வகையில் செயற்படுகின்றார். 8 ஆயிரத்து 803 பக்கங்கள் கொண்ட அறிக்கையை 48 மணிநேரத்துக்குள் விசாரிக்க முடியு மானால், கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் குறித்த விசாரணையை ஏன் துரிதப்படுத்த முடியாது? இவ்வாறு அமைச்சர் ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார்.

ரவி கருணாநாயக்க தனது பதவி விலகலை அறிவித்து நாடாளுமன்றத்தில் தன்னிலைவிளக்கவுரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பத்தரமுல்லையிலுள்ள எனது வீடு மறுசீரமைக்கப்பட்டு வருகின்றது. எனக்கு உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்படவில்லை.

குடும்ப உறுப்பினர்கள் வேறு வீடு பார்த்தனர். எனது மகளின் பாடசாலை நண்பியொருவரின் வீடு வாடகைக்கு வழங்கப்பட்டது. அவர்கள் அரசியல்வாதிகளுக்கு கொடுக்க விரும்பாததால் அலோசியஸின் நிறுவனத்தின் ஊடாக பணம் வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அந்த வீடு விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப் பட்டது. செலான் வங்கியில் கடன்பெற்று அந்த வீட்டை குடும்பத்தார் வாங்கியுள்ளனர். இதில் ஒளிப்பதற்கு ஒன்றுமில்லை.

நான் ஒரு வணிகன். அந்தத் துறையில் வெற்றிநடைபோட்டுள்ளேன். அரசியலிலோ அல்லது சட்டவிரோதமாகவோ பணம் தேட வேண்டிய தேவை எனக்கில்லை. கடந்த காலங்களில் விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் அமைச்சர்கள் தோன்றமாட்டார்கள். சட்டத்தையும், நீதியையும்மதித்துநான்முன்னிலையானேன். இதுதான் நல்லாட்சி.

பிணைமுறி விற்பனை பற்றி ஆராயவே அரச தலைவர் ஆணைக்குழு அமைக்கப் பட்டது. சொகுசு வீடு பற்றியே அதிகம் பேசப்படுகின்றது.

37 வருடங்களாக அரசியல் களத்தில் இருக்கும் நான் ஐக்கிய தேசியக் கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுள்ளேன். கட்சிக்கு நெருக்கடி ஏற்பட்டபோதிலும், தலைமைத்துவத்துக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யப்பட்டபோதிலும் அவற்றை முறியடிக்க முன்னின்று செயற்பட்டுள்ளேன். எதிர்க்கட்சியில் இருந்தபோது பல்வேறு அச்சுறுத்தல் களை சந்தித்தேன். உயிர் அச்சுறுத்தல்கூட ஏற்பட்டது. ஆட்சி மாற்றத்துக்காகவும் கடுமையாக உழைத்துள்ளேன்.

எனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை. எனக்கு எதிரான குற்றச்சாட்டைப் பயன்படுத்தி அரசியல் உறுதிப்பாடற்ற நிலையை உருவாக்குவதற்கு அதிகார ஆசைபிடித்து அலையும் அணி முயற்சிக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியை உடைப்பதற்கும் சதித்திட்டம் தீட்டப்படுகின்றது. இதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டேன்.

எனக்கான இடத்தை வரலாறு தீர்மானிக்கும். அச்சத்தாலோ அல்லது நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குப் பயந்தோ பதவி விலகவில்லை. புதியதொரு அரசியல் கலாசாரத்துக்கு முன்னுதாரணமாகத் திகழும் வகையிலேயே பெருமையுடன் பதவி துறக்கின்றேன் - - என்றார். (5)

பதவி விலகிய ரவியை

# புகழ்ந்துதள்ளிய சம்பந்தன் புழுங்கியது மகிந்தஅணி

கொழும்பு, ஓக.11

ரவி கருணாநாயக்க பதவி விலகிய முடிவை துணிச்சல்மிக்க செயற்பாடு எனப் பாராட்டிய எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், சிறந்த தொரு முன்னுதாரணத்தை அவர் வழங்கியுள்ளார் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:

குற்றவாளியாக நிரூபிக்கப்படும் வரையில் அவன் நிரபராதியாகவே கருதப்படுவான். இது மனித உரிமையும்கூட. அமைச்சர் ரவி கருணாநாயக்க குற்றமிழைத்தவர் என எந்தவொரு நீதிமன்றத்தாலும், ஆணைக்குழுவாலும் இன்னும் அறிவிக்கப்படவில்லை. எனினும், அவர் பதவி விலகியுள்ளார். அவரின் துணிச்சல்மிக்க செயற்பாட்டுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கடந்த ஆட்சிக்காலத்தில் இவ்வாறு எதுவும் நடக்கவில்லை. இது சிறப்பான முன்னுதாரணமாக இருக்கின்றது - என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் பேசி முடித்த பின்னர், 'வெட்கம், வெட்கம்' என்று மகிந்த அணியினர் கூச்சலிட்டனர். இப்படியொரு எதிர்க்கட்சித் தலைவரைக் கண்டதில்லை என்றும் சாடினர்.

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சீற்றமடைந்தனர். மகிந்த அணிக்கும், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே கடும் சொற்போர் மூண்டது. (5)

### சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) சுன்னாகம்

கீழ்க்குறிப்பிடப்படும் நிரந்தரப் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கணக்காளர் :- குறி.இல. 104/ 09**

**சம்பள அளவுத் திட்டம் :-15660 - 19560 (13/2015 சு.நி.இன்படி)**
190*10 - 200*10

சுற்.இல. **04/ 2017** அமைய விசேடபடி 15% அடிப்படையுடன் சேர்த்து வழங்கப்படும்.

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத்திட்ட கணக்காளர் அல்லது உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத்திட்ட உள்ளக கணக்காய்வாளர் அல்லது கணக்குப் பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி அல்லது கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 ஆண்டு கால அனுப வம் அல்லது க.பொ.த (உ/த) பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வுத்துறையில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகால அனுபவம்.

**வயது:-** விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

**சங்கப் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை தமது சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கவும்.**

விண்ணப்ப படிவங்களையும், மேலதிக விவரங்களையும் சங்கத் தலைமை அலுவலகத்தில் வேலை நாள்களில் (காலை 9.00 - மாலை 04.30) ரூபா 10/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
T.P.No:- 021 321 2380

**விண்ணப்ப முடிவு திகதி :- 26.08.2017 ஆம் திகதி பிற்பகல் 04.00 மணி.**

10.08.2017

சி.குமரவேல் - தலைவர்
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்

### மணமகள் தேவை

94. ரோகிணி. 7 செவ்வாய். லண்டன் P.R மணமகளுக்கு மணமகன் தேவை தரகர் திருமண சேவை
077 818 5978 , 075 011 1122

### கொடிகாமத்தில் கடை வாடகைக்கு

A9 இல் இருந்து 100 M தூரத்தில் கச்சாய் வீதியில் வாகன தரிப்பிடத்துடன் அலுவலகம் நடத்தக் கூடிய 900 ச.அடி கடை வாடகைக்குண்டு.
077 969 8914, 077 725 1266

### வீடு வாடகைக்குண்டு

ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்களுக்கு மட்டும்
077 343 2422, 075 777 2158

### பெயர் மாற்றம்

கோண்டாவில் கிழக்கு கோண்டாவிலைச் சேர்ந்த **தெய்வேந்திரம் தனிஸ்வரன்** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **தெய்வேந்திரம் தனேஷ்** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் அறியத்தருகின்றேன்.
- தெய்வேந்திரம் தனேஷ் -

### ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
### வலிகாமம் வடக்கு பிரதேசசபை, உப அலுவலகம் தெல்லிப்பழை, வட்டாரம் - 07 சிற்றுலாம்பிட்டி ஒழுங்கை, ஆதன இல.37

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தெல்லிப்பழை உப அலுவலகத்துக்குட்பட்ட சிற்றுலாம்பிட்டி ஒழுங்கையில் வட்டாரம் 07 ஆதன இல.37 இல் உள்ள ஆதனமானது எமது ஆதனப்பதிவேட்டில் இராமச்சந்திரன் மனைவி சிவமதி என்னும் பெயரிலுள்ளது.

**ஆதன விவரம்**

வடக்கு மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தெல்லிப்பழை பிரதேச செயலகம் J/227 கிராமசேவகர் பிரிவு, தெல்லிப்பழை கோவில்பற்று தெல்லிப்பழை கிழக்கிறை " கயித்தம்பை தோட்டம்" இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட வரைபட இலக்கம் 2016/1/246/10.10.2016 இல் துண்டு 1 எனக்காட்டப்பட்ட நிலப்பரப்பு 12 குளி.13.5.

**எல்லைகள்**

**கிழக்கு** :- கிராம சபையின் ஆதனமும் சிதம்பரநாதன் கைம்பெண் விசாலாட்சியின் ஆதனமும் தூர்வையும் வாயில் வழியும் பொன்னம்பலம் முருகையாவின் ஆதனமும்.
**வடக்கு** :- கிராம சபை ஒழுங்கையும் கிராமசபையும்.
**மேற்கு** :- சின்னையா பத்மினி பிள்ளையின் ஆதனம்.
**தெற்கு** :- கந்தையா மூத்ததம்பிக்கும் மறுபேரின் ஆதனமும் தூர்வையும் அதில் உள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

மேற்குறித்த ஆதனமானது 4040ஆம் இலக்க 01.02.2012 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் C.விஸ்வலிங்கம் முகதாவில் எழுதிய அறுதி உறுதி மூலம் சுப்பிரமணியம் ஜெயந்தனும் மனைவி பவானியும் ஆகிய இவர்களை வந்தடைந்துள்ளது. இவ்வாதனத்தினைப் பிரதேசசபை ஆதனவரிப் பதிவேட்டில் சுப்பிரமணியம் ஜெயந்தனும் மனைவி பவானியும் என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பித்துள்ளார்.

குறித்த ஆதனத்தை தெல்லிப்பழை தென்மேற்கைச் சேர்ந்தவரும் ஐக்கிய அரசியல் வெல்ஸ்ரோன் என்னும் இடத்தில் வசித்தவருமான சின்னத்தம்பி சிவதேவன் அவர்களால் தனது அற்றோனித்தத்துவக்காரரான அ.சின்னத்தம்பி மூலம், பிரசித்த நொத்தாரிஸ் வேலுப்பிள்ளை சிற்றம்பலம் கணேசலிங்கம் முகதாவில் நிறைவேறிய 1373 இலக்க 1984.01.29 ஆம் திகதிய சீதன உறுதியின் பிரகாரம் இராமச்சந்திரன் பெண் சிவமதிக்கு கையளித்துள்ளார். இதற்கான அற்றோனித்தத்துவம் சமர்ப்பிக்கப்படவில்லை.

யாழ்ப்பாணம் சங்கானை தொட்டிலடி, சதாசிவம் இராமச்சந்திரனும் மனைவி சிவமதியும் சின்னத்தம்பி சிவதேவன் கைம்பெண் அருந்ததி தேவியும், சிறேன் சிவதேவனும், வினோதினி சிவதேவனும் ஆகிய இவர்களால் அற்றோனித்தத்துவக்காரர் ஆர்.சதாசிவம் பொன்னுத்துரை மூலம் சுப்பிரமணியம் ஜெயந்தனும் பெண் பவானி ஆகியோருக்கு வழங்கப்பட்ட மேற்குறித்த 4040ஆம் இலக்க 01.02.2012 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் C.விஸ்வலிங்கம் எழுதிய அறுதி உறுதியில் குறித்த ஆதனமானது நொத்தாரிஸ் இ.த.அன்ரன்பாலசிங்கம் முன்பாக 2377/09.02.1981 இல் முடிந்த அறுதி உறுதிப்படி சிவதேவனின் கொள்விலையும் அவர் இறக்க மனைவி மற்றும் வாரிசுகளை வந்தடைந்த உரிமையும் என்றும் பிரசித்த நொத்தாரிஸ் வி.எஸ்.கணேசலிங்கம் முகதாவில் 1373/29.01.1984 முடிந்த உறுதிப்படி சதாசிவம் இராமச்சந்திரனதும் மனைவி சிவமதியினதும் சீதனமும் ஆட்சியுமானதும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் [illegible] பதாரியின் பெயருக்கு குறித்த இலக்கமுடைய ஆதனத்[illegible] மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் [illegible] மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் [illegible] சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவி[illegible]

செயலாளர்
[illegible]

10.08.2017

# 20ஆம் திருத்தம் தொடர்பில் சம்பந்தன் நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தவேண்டும்

## கேட்கிறார் குமரகுருபரன்

கொழும்பு, ஓக.11

20ஆம் திருத்தச் சட்டம் கொண்டு வரப்படும்போது, மாகாண சபைகளின் அதிகாரத்தை கொழும்பு அரசிடம் தாரை வார்ப்பதற்கு இடமளிக்கக் கூடாது. அத்துடன் 20ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தனது நிலைப்பாட்டைத் தெரியப்படுத்தவேண்டும். இவ்வாறு ஜனநாயக மக்கள் காங்கிரஸின் பொதுச் செயலர் நல்லையா குமரகுருபரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைகளின் காலம் முடிவடைந்து விட்டால் சபையை நீடிப்பதற்கு மாகாணசபைகள் சட்டத்தில் இடமில்லை. அதன் பின்னர் ஆளுநரின் ஆட்சியை நடைமுறைப்படுத்தலாம். சபை உறுப்பினர்களின் செயற்பாடுகள் முடிவுக்கு கொண்டு வரப்படும். அல்லாவிடின் அரச தலைவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் சபையைக் கொண்டு வந்து நீடிக்க முடியும்.

20ஆவது திருத்தம் கொண்டு வரப்படும் பொழுது அது மாகாண சபைகளின் அதிகாரத்தை அல்லது பலத்தை கொழும்பு அரசிடம் தாரைவார்ப்பத்தற்கு இடமளிக்கக்கூடாது.

மாகாணசபைத் தேர்தலை பிற்போடவும், புதிய தலைவர்கள் தெரிவு செய்வதை தவிர்க்கவும், தேர்தல்களை இரு வருடங்களுக்கு நடாத்தமல் இருக்கவும் மாகாண சபைகளை கட்டுப்படுத்தவும், கொழும்பின் அரசுக்கு அதிகாரத்தை கொடுப்பது என்பது சனநாயக ரீதியில் ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றல்ல. மாகாணசபை தேர்தல்களை பிற்போடும் யோசனையின் ஊடாக மாகாண சபை முறைமையை கட்டுப்படுத்தும் முறையொன்று கொழும்பு அரசின் கீழ் வருகின்றமை தெளிவாகின்றது.

தேர்தல்களை பிற்போடுதல், தேர்தல்கள் இல்லாமல் மாகாணசபைகளை கொண்டு நடத்துதல், மாகாண சபையைக் கலைத்து கொழும்பு அரசின் ஊடாக மாகாண சபைகளை நிர்வகித்தல் என்பன சனநாயக பண்புகளைப் பறிப்பதாகவே அமையும்.

அதிகாரப் பரவலாக்கலை வேண்டி நிற்கும் அனைத்து மாகாண மக்களுக்கும் நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பும், தனது நிலையை பொதுமக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் தெளிவு படுத்த வேண்டிய கடமையும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு உண்டு - என்றார். (5)

# 20ஆம் திருத்தத்தை தோற்கடிக்க சிறுபான்மைச் சமூகம் திரள வேண்டும்

## கோருகின்றது முஸ்லிம் காங்கிரஸ்

மட்டக்களப்பு, ஓக.11

மாகாணசபைத் தேர்தல்களை ஒரே நாளில் நடத்தும் 20ஆம் திருத்தச் சட்டம் சிறுபான்மைச் சமூகத்திற்கு இழைக்கப்படும் பெரும் அநியாயமாகும். இதனைத் தோற்கடிக்க சிறுபான்மை இனப் பிரதிநிதிகள் ஒன்றாக அணிதிரள வேண்டும். இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொள்கைப் பரப்புச் செயலர் என்.முபீன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பிடம் குவிந்துள்ள அதிகாரத்தை ஓரளவுக்கேனும் மாகாணமட்டத்தில் பரவலாக்க உருவாக்கப்பட்டது மாகாணசபை. மாகாணசபைக்கான தேர்தல் நடத்தும் தினத்தை தீர்மானிக்கும் உரிமையை நாடாளுமன்றம் கைப்பற்றுவதை ஏற்க முடியாது.

தேர்தல் தோல்வியைத் தவிர்ப்பதற்கே கூட்டு அரசின் கதாநாயகர்கள் இந்த முடிவை எடுப்பதாக மக்கள் சந்தேகிக்கின்றனர்.

ஏற்கனவே முன்மொழியப்பட்டுள்ள நாடாளுமன்ற மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்முறை மாற்றம் தொடர்பில் சிறுபான்மை சமூகம் வெகுவாகப் பாதிக்கப்படும் சூழல் காணப்படுகிறது. முன்மொழியப்பட்டுள்ள நாடாளுமன்ற தேர்தல் மாற்ற முறைமையில் சிறுபான்மையினர் பல தொகுதிகளை இழக்கும் நிலை காணப்படுகிறது.

சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் சிறிய கட்சிகள் தற்போது இருக்கின்ற மாகாணசபைத் தேர்தல் முறையிலேயே உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படுவதற்கான அழுத்தங்களை பிரயோகிக்கவேண்டும். தேர்தலை ஒத்திப்போடல், உரிய காலத்தில் நடத்தாமல் இருத்தல் ஆகியன மக்களின் இறைமையை கேள்விக்குட்படுத்தும் விடயமாகும். இந்த விடயத்தில் சிறிய மற்றும் சிறுபான்மை கட்சிகள் ஒன்றிணைந்து மக்களின் அரசியல் உரிமையை உறுதிப்படுத்த முன்வரவேண்டும் - என்றார். (5,ய46)

நாளை யாழ் மாநகரில் முதன் முறையாக
சினிமா பாடல்களுடன்
பிரபல தென்னிந்திய பாடகர்
கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
மற்றும் பாடகி உத்ரா உன்னிகிருஸ்ணன்
இணைந்து வழங்கும் மாபெரும் இசை நிகழ்ச்சி



இடம் : யாழ்/ஸ்ரான்லி வீதி , லிங்கம் கூல்பார் சந்தியில்
(வெலிங்டன் தியேட்டர் மைதானம்)
காலம் : நாளை (12.08.2017) சனிக்கிழமை
மாலை 6.00 மணிக்கு
300/=, 500/=, 1000/= டிக்கெட்
டிக்கெட்டுகளைப் பெற்றுக் கொள்ள
The Phone Shop
நெல்லியடி 077 285 0285
பூபாலசிங்கம் புத்தகசாலை 021 222 6693
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் : K.T. பிரசாத்
தொடர்பு 077 550 4910
Ceylon Art Creation

மணிவிழா வாழ்த்து



திரு.தாமோதரம்பிள்ளை தேவேஸ்வரன்
(ஆசிரியர் முதல் நியமனம் 16.03.1990)
சேவை விவரம்
16.03.1990 - 31.12.1997 :- கிளி/பன்னங்கட்டி இ.த.க.பாடசாலை
01.01.1998 - 31.12.1999 :- பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
01.01.2000 - 01.08.2008 :- யா/சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்
யா/ மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்.
02.08.2010 - 02.02.2011 :- யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
03.02.2011 - 22.02 2015 :- யா/மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதயா ம.வி
23.02.2015 - 11.08.2017 :-(இன்றுவரை) யா/கைதடி நுணாவில்அ.த.க.பாடசாலை
மணிவிழாக் காணுகின்ற மாண்புமிகு ஆசானே!
பார்புகழும் இனிய பணி போற்றி மகிழுகின்றோம்
ஆசிரியர் பணிக்கோர் அணிசேர்த்த உத்தமனே
தேசு புகழ் தேவஸ்வர ஐயா!
மாசிலாத் தங்கள் பணி மாநிலத்தில் நாம் மறவோம்
மனம் நிறைந்தே வாழ்த்துகின்றோம் வாழிய பல்லாண்டு!
வாழ்த்துவோர்:-
யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

வாழ்த்துகின்றோம்



செல்வத்துரை திருமாறன் (பிரபு)
(இராஜேஸ்வரி மண்டபம்
கோண்டாவில், தெல்லிப்பழை – உரிமையாளர்)
2017 ஆகஸ்ட் 3 ஆம் திகதி
அகில இலங்கை சமாதான நீதிவான்
பதவியை பெற்றமையை எண்ணி உவகையடைவதுடன்.....
ஏற்றங்கள் பல பெற்று - இன்னும் ஏணிப்படிகள் பல வேறி
சேவைகள் பல உயர்வு பெற்று - மக்களுக்கும் சேவைகள் பல செய்து
பாராட்டுக்கள் பலவும் பெற்று பார்புகழ வாழ்ந்திடுவீர்
ஆரோக்கியமான வாழ்வோடும் அன்பான குடும்பத்தோடும்
நெடுங்காலம் நீங்கள் வாழ - எம் நல் வாழ்த்துக்கள்
- என்றும் நட்புக்கள் -

## 3லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்த கும்பல் சிக்கியது



கொழும்பு, ஓக.11 பாடசாலைச் சிறுவனை அச்சுறுத்தி வீட்டுக்குள் அத்துமீறி நுழ்ழந்து 3 லட்சம் ரூபா பெறுமதியான 9 பவுண் நகையைக் கொள்ளை யடித்த சம்பவத்து டன் தொடர் புடைய சந்தேகத்தில் குழு ஒன்று பொலிஸாரால் கைது செய்ய ப் பட்டுள்ளது. இது தொடர்பில் உப்புவெளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜானக ஜெய ரட்ண தெரிவித் ததா வது, கடந்த 8ஆம் திகதி காலை, வீட்டில் தனியாக இருந்த 7 வயது சிறுவனிடம் குடிக்கத் தண்ணீர் தருமாறு கேட்டுள்ளனர். சிறுவன் கதவைத் திறந்ததும் உள்ளே நுழைந்த மூவர் அடங்கிய கொள்ளைக் கும்பல், சிறு வனை மிரட்டி அமைதியாக இருக்குமாறு செய்தது. வீட்டின் அலு மாரிக் கதவை உடைத்து 3 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளை யிட்டது. வீட்டு உரிமையா ளர் சம்பவம் நடைபெற்ற அன்றே முறைப் பாடு செய்தார். நாம் கொள்ளைக் குழுவைத் தேடுதல் நடத்திக் கைது செய்தோம் - என்றார். (5)

---

# அகவை ஐம்பதும் 3ஆம் ஆண்டு நினைவு தினமும்

அமரர்

## யோகாம்பிகா உதயகுமார்

(ஆசிரியர் - அச்சுவேலி மத்திய கல்லூரி)

மலர்வு 06.06.1967 — உதிர்வு 11.08.2014



அன்பில் அன்னையாய் அறிவில் ஆசானாய்
உறவில் தோழமையாய் எம்மை வழிநடத்திய
எம் அன்னையின் ஆத்மா சாந்தியடைய
மூன்று ஆண்டு நினைவுநாளாகிய
இன்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

நெல்லியோடை,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

---

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



## கந்தசாமி மயூரன் (அப்பன்)

(போதனாசிரியர் இலங்கை
தொழிற்பயிற்சி அதிகாரசபை)

மலர்வு 02.08.1984 — உதிர்வு 11.09.2013


தலைமகனாய் வந்துதித்த குலவிளக்கே
காலமெல்லாம் நிலைத்திருக்க கனவுகண்டோம்
உள்ளம் துடிக்குதடா உன் பிரிவை தாங்காமல்
ஆண்டுகள் நான்கு ஆனாலும் ஆறவில்லையே
அப்பனே உன்ன்ன எப்போது காண்போம்.

இல.4, கல்மடுநகர்,
இராமநாதபுரம்.

ஆறாத்துயரில்
அன்பு அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள், உறவினர்கள்.

---

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் பதிவாளர்
G.J. தனசிங்கம் அவர்களின்
மூத்த புதல்வன்

## F. ராஜன் தனசிங்கம்

லண்டனில் காலமானார்.
இச்செய்தியை கேட்டு மிகவும் கவலை
அடைந்துள்ளோம் இதனால் துயரம் அடையும்
அவரது குடும்பம், தாய், தகப்பன், உற்றார்,
உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவித்துக்கொள்கின்றோம். இவரது ஆன்மா
இறைவன்சன்னிதியில் இன்புற்றிருக்க
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அலுவலர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள்
**பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்**
**இல.61, சென்பற்றிக்ஸ் யாழ்ப்பாணம்.**
T.P.No. 021 222 6148 / H.P. 077 271 9359

---

# மரண அறிவித்தல்



தோற்றம் 19 10 1931 — மறைவு 09 08 2017

## திருமதி சரஸ்வதி கந்தப்பு

மகாத்மா வீதி, கேணியடி, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற செல்லப்பா பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகளான, கந்தப்பு சரஸ்வதி 09.08.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரு கந்தப்பு அவர்களின் அன்பு மனைவியும், வசந்த குமார் (லண்டன்), திருக்குமார், தேவகுமார், உதயகுமாரி ஆகியோரின் அன்புத் தாயும், சுமங்கலி, காலஞ்சென்ற பாலயோகினி மற்றும் விஜயன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஐங்கரன் (கனடா), சஞ்சீவன் (லண்டன்), சிந்துஜா (பிரான்ஸ்) பிரசாந்தன், தர்மிலா, பிரியங்கா, சதுசனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிறிஷாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (11.08.2017) முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகாத்மா வீதி,
கேணியடி, நெல்லியடி.

தகவல்:
குடும்பத்தினர்.

0778469169

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மேரிஇராசாத்தி மாணிக்கம்



கீரிமலை வீதி, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிஇராசாத்தி மாணிக்கம் 07.08.2017 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மாணிக்கத்தின் (இளைப்பாறிய ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி, ஊழியர் - தென்னிந்தியத் திருச்சபை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான லூதர் பஸ்தியாம்பிள்ளை றோசலின் சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஜோன்தம்பி ஐயா, தங்கராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) காலஞ்சென்ற யோசவ் பாலச்சந்திரன் மற்றும் சூசின்தங்கரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஜெயராஜதேவி, ராஜக்கோன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் டயாளினி (U.S.A), கலாஜினி(U.K), தயாபரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுகந்தன் (U.S.A), றிச்சேட் விக்கிரம குமார் (U.K).சுதர்ணா ஆகியோரின் அன்பு மாமியும் ஹனா(U.S.A), எட்றிச்(U.K).றொஷேல்(U.K), ஈடன்(U.K), தாரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (12.08.2017) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பண்டத்தரிப்பு சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

---

## கணபதி கந்தசாமி



யாழ். கோண்டாவிலைப் (மிசன் பாடசாலை வீதி) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி கந்தசாமி 09.08.2017 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி (மலேசியா) தம்பதிகளின் அன்பு மருமகனும், அழகம்மாவின் பாசமிகு கணவரும், கமலநாதன், இரஞ்சிதானந்தன் ஆகியோரின் மதிப்புக்குரிய தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, அழகம்மா, நல்லம்மா (மலேசியா), சரஸ்வதி, சின்னம்மா, தங்கரட்ணம் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கனகம்மா (மலேசியா), இராசம்மா (மலேசியா), காலஞ்சென்ற செல்லத்துரை (மலேசியா) மற்றும் [illegible] (மலேசியா), [illegible] (மலேசியா), சரஸ்வதி (மலேசியா), [illegible] (மலேசியா), காலஞ்சென்ற இராசதுரை (மலேசியா), பரமேஸ்வரி (மலேசியா), யோகமலர் (மலேசியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், குவமலர், ராணி ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும், [illegible] ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்து மயானத்துக்குப் பிற்பகல் 3.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிசன் பாடசாலை வீதி,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# கூட்டு அரசுக்குள் குத்துவெட்டு

## பைசலுக்கு எதிராக ஆளும் கட்சியே நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, ஓக. 11
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசல் முஸ்தபாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜேசிறி நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

ஊவா மாகாண சபையின் பொதுமனுக்கள் குழு தொடர்பில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசல் முஸ்தபாவிடம், ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி கேள்விகளை எழுப்பியிருந்தார்.

அமைச்சர் சபையில் பிரசன்னமாகியிருக்காததால், ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் கயந்த கருணாதிலக பதில்களை வழங்கினார்.

இதன் பின்னர் சமிந்த விஜேசிறி தெரிவித்ததாவது:

ஊவா மாகாண சபையின் பிரச்சினைகள் சம்பந்தமாக தொடர்ச்சியாக கேள்விகளை எழுப்பி வருகின்றேன். பதில்களை வழங்குவதற்கு அமைச்சர் வருவதில்லை. கேள்வி பதில் நேரத்தின்போது அமைச்சர்கள் சபையில் இருக்க வேண்டும் என்று சபாநாயகர் அறிவுறுத்தியும் அது உரிய வகையில் நடக்கவில்லை.

அமைச்சர் பைசல் முஸ்தபாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவருவதற்குத் தயாராகி வருகின்றேன். இதற்குப் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்குவார்கள் என்று நம்புகின்றேன் - என்றார். (5)

---

வரலாற்றில் முதன்முறையாக

# கிராம அலுவலர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஓக. 11
வரலாற்றில் முதன்முறை யாக நாட்டின் ஒட்டுமொத்த 332பிரதேசசெயலாளர் பிரிவு களைச் சேர்ந்த அனைத்து கிராம அலுவர்களும் ஒன்றிணைந்து மாபெரும் பணிப்புறக்கணிப்பில் இறங்குவதற்குத் தீர்மானித்திருப்பதா கத் தெரியவருகின்றது.

> “நீண்டகாலமாக முகம் கொடுத்து வரும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கவதற்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு எவ்வித சிரத்தையையும் காட்டாமல் புறக்கணித்து வருகின்றது.”

‘நீண்டகாலமாக முகம் கொடுத்து வரும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கவதற்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு எவ்வித சிரத்தையையும் காட்டாமல் புறக்கணித்து வருகின்றது. இன்னும் இரு வாரங்களில் தங்களது கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் மேலதிக அறிவித்தல்கள் எதுவுமின்றி நாடு தழுவிய பணிப் புறக்கணிப்பில் ஈடுபடப்போகின்றோம்’ என்று அகில இலங்கை கிராம அலுவலர் சங்கச் செயலாளர் டபிள்யூ. ஜீ. கமல் கித்சிறி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரைகாலமும் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பல பணிகள் பிரதேச செயலகங்களிலுள்ள அபிவிருத்தி அதிகாரிகளுக்கு வழங்கியிருப்பதை நிறுத்துதல். கிராம அலுவலர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல். அவர்களில் சேவைக்கான சரியான சட்டதிட்டங்களை வடிவமைத்தல் ஆகியவை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அண்மையில் சமர்ப்பித்துள்ள பிரேரணையின்படி கிராம அலுவலர்கள் இதுவரைகாலமும் மேற்கொண்டு வந்த ஏழு பணிகள் அபிவிருத்தி அதிகாரிகளுக்கு ஒப்படைக்கப்படவுள்ளன.

அரச தலைவர் செயலகம் அறிமுகப்படுத்தியுள்ள உணவுப்பொருள்கள் உற்பத்தி, சுற்றாடல் பாதுகாப்பு, மது மற்றும் போதைப்பொருட்கள் ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, போசணை அபிவிருத்தி, சிறுவர் பாதுகாப்பு, தேசிய டெங்கு ஒழிப்புப் பணி, கிராமிய மட்டத்திலான அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் தகவல்களைச் சேகரித்தல், கிராம அலுவலர் மட்டங்களில் அபிவிருத்திக் குழுக்களை அமைத்தல் போன்ற விவகாரங்களில் கிராம அலுவலர்களின் பங்களிப்பு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் பிரேரணையின்படி மட்டுப்படுத்தப்படவுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு இன்னும் இரு வாரங்களில் தீர்வு வழங்காவிட்டால் நாங்கள் போராட்டத்தில் இறங்கவுள்ளோம் - என்றார். (5)

---

# பாதாளக் கும்பல்களை அடக்கி ஒடுக்குவதற்கு சிறப்புப் பொலிஸ்குழு

## அமைச்சர் சாகல நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.11
பாதாளக் கோஷ்டிகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும், பெரிய குற்றச் செயல்களைத் தடுப்பதற்காகவும் சிறப்புப் பொலிஸ் பிரிவொன்று அமைக்கப்படும் என்று சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, அடக்கப்பட்டிருந்த பாதாளக்கோஷ்டி மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. குண்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளனர் என்றே தெரிகின்றது. மக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் ஏற்பட்டுள்ளது. இதைத் தடுப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?, என்று கேட்கப்பட்ட வினாவுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:


பாதாளக் கோஷ்டி தலைதூக்கியுள்ளதாகக் கூறப்படுவதை ஏற்கமுடியாது. இதுபற்றி பிரச்சினையொன்று இருக்கின்றது.

பாதாளக் கோஷ்டியின் செயற்பாடு, பெரிய குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு சிறப்பு பொலிஸ் பிரிவொன்று அமைக்கப்படும். இந்தப் பிரிவே பொலிஸில் உயர்மட்ட பிரிவாக இருக்கும். விவரங்கள் பொலிஸ்மா அதிபரிடம் வழங்கப்பட்டுள்ளன. பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கிய பின்னர் அது அமைக்கப்படும் - என்றார் சட்டம், ஒழுங்கு அமைச்சர். (5)

---


# அமெரிக்காவுடன் இன்னும் நெருக்கம்

கொழும்பு, ஓக.11
அயலுறவுத்துறைச் செயலர் பதவியின் மூலம் அமெரிக்கா இலங்கை இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்தவுள்ளதாக, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பதவியில் இருந்து விலகும் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவுக்கான தூதுவராக பணியாற்றிய பிரசாத் காரியவசம், அயலுறவுத்துறை அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். வொசிங்டனில் உள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் அவருக்கு நேற்று முன்தினம் பிரியாவிடை அளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (5)

---



அரிசி விலை

# கட்டுப்பாட்டை மீறும் வர்த்தகர்கள்

## பொதுமக்கள் முறைப்பாடு

கொழும்பு, ஓக. 11
நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அரிசிக்கான உச்சபட்ச விலையை நிர்ணயித்து வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளபோதிலும் அரிசி வியாபாரிகள் அதை உதாசீனம் செய்து விற்பனை விலைகளை அதிகரித்திருப்பதாக பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

அரசு நிர்ணயித்துள்ள கட்டுப்பாட்டு விலைகளின்படி உள்நாட்டு சம்பா 90 ரூபாவுக்கும், இறக்குமதி செய்யப்பட்ட சம்பா 80 ரூபாவுக்கும், உள்நாட்டு நாட்டரிசி 80 ரூபாவுக்கும், இறக்குமதி செய்யப்பட்ட நாட்டரிசி 75 ரூபாவுக்கும், உள்நாட்டு பச்சரிசி 78 ரூபாவுக்கும், இறக்குமதி செய்யப்பட்ட பச்சரிசி 65 ரூபாவுக்கும் விற்கப்படவேண்டும். வியாபாரிகள் சகல அரிசிகளையும் 90 தொடக்கம் 105 ரூபா வரை விற்றுவருகிறார்கள் எனவும் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அரிசி வியாபாரிகள் சங்கம், இறக்குமதி செய்யப்பட்ட அரிசிகளை அரசு நிர்ணயித்துள்ள விலைகளுக்கு விற்கமுடியுமென்றாலும் மக்கள் அவற்றை வாங்குவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். உள்நாட்டு அரிசிகளை அரசு நிர்ணயித்த கட்டுப்பாட்டு விலைகளுக்கு விற்கமுடியாதெனவும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் விளக்கமளித்த நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை, நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு அதிகமாக விற்பனைசெய்யும் வியாபாரிகளையும், இறக்குமதியாளர்களையும், விநியோகத்தர்களையும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தும் சுற்றி வளைப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது. (5)

---

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில்

# ‘குட் பிறைடே’ ஒப்பந்தத்தை முன்மாதிரியாக எடுக்க வேண்டும்

## பிரிட்டன் பிரதிநிதிகளிடம் கூறினார் அமைச்சர் துரைராசசிங்கம்

செங்கலடி, ஓக. 11
இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் எமது அரசியல் தலைவர்கள் தீர்வுகளை எட்ட முற்படுகின்றபோது பெரும்பான்மை இன மதத்தலைவர்களின் தலையீடு காரணமாக அவற்றைச் செயற்படுத்த முடியாமல் போயுள்ளது. இப்போதும் அவ்வாறான நிலமைகள் ஏற்படுமோ என்கின்ற அச்சம் எழுந்திருக்கின்றது.

இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில், வட அயர்லாந்தின் சமாதானத்திற்கு வழிவகுத்த குட் பிறைடே ஒப்பந்தத்தின் முன்மாதிரிகளை இலங்கை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய சனநாயகத்திற்கான வெஸ்ட் மினிஸ்டர் மன்றத்தினுடைய குழுவினருக்கும், கிழக்கு மாகாண அமைச்சர்களுக்குமிடையில் இடம்பெற்ற நல்லிணக்கம் தொடர்பிலான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் முடிவில் அவர் தெரிவித்ததாவது:

நல்லிணக்கம் தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினது ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்ட அரச தலைவர் தற்போதைய தலைமை அமைச்சர் மற்றும் எமது எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக புதிய அரசமைப்பு உருவாக்கும் செயற்பாடு நாடாளுமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அதிகாரப்பகிர்வு தொடர்பாக கூட்டமைப்பு அதிக அக்கறையோடு செயற்பட்டு வருகின்றது. எங்களைப் பொறுத்த வரையில் அதிகாரங்கள் பிராந்தியங்களுக்கு பங்கீடு செய்யப்பட வேண்டும்.

அதிகாரங்கள் கொழும்பு அரசின் நிரல், மாகாண நிரல், உள்ளூராட்சிமன்ற நிரல்கள் என்ற வகையில் நிரல்ப் படுத்தப்பட வேண்டும். கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் கையகப்படுத்தப்படலாகாது.

வட அயர்லாந்தின் சமாதானத்திற்கு வழிவிட்டதான குட் பிறைடே ஒப்பந்தத்தின் முன்மாதிரிகளை இலங்கை அரசுக்கு எடுத்து விளக்கவேண்டும்.

வட அயர்லாந்தின் இன விடுதலைப் புரட்சிக்கு காரணமாக இருந்த விடயம் புரட்டஸ்தாந்து பெரும்பான்மை மதத்தவருக்கும், கத்தோலிக்க சிறுபான்மை மதத்தவருக்கும் இடையேயான பிணக்குகள் தான். அந்த அடிப்படையில் மதத் தலைவர்கள் இவ்விடயங்களில் எவ்வாறு செயற்பட்டார்கள் என்கின்ற விடயத்தை எமது அரசோடு பகிர்ந்துகொள்ள வேண்டும். இந்த விடயங்களில் யதார்த்த பூர்வமான ஆலோசனைகளை எதிர்பார்க்கின்றோம் என்று அவர்களிடம் கூறினோம் - என்றார்.

(5,ய,47)

# அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு மத்தள வானூர்த்தி நிலையம் இந்தியாவுக்கு

## இலங்கையின் சமாளிப்பு வியூகம்

கொழும்பு, ஓக. 11

அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டுகாலப் பகுதிக்கு சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கியதால் ஆத்திரமடைந்துள்ள இந்தியாவைச் சமாளிப்பதற்காக துறைமுகத்தை அண்மித்து அமைக்கப்பட்டுள்ள மத்தல வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்குக் குத்தகைக்கு வழங்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்திய நிறுவனத்துக்கு மத்தல வானூர்தி நிலையத்தை 40 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.


சீனாவின் நிதியுதவியில் கட்டப்பட்ட மத்தல வானூர்தி நிலையத்தை, இந்திய நிறுவனத்தின் உதவியுடன் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு அருகில் மத்தல விமான நிலையம் அமைந்துள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன நிறுவனம் 99 ஆண்டுகள் குத்தகைக்குப் பெற்றுக்கொண்டது. இலங்கை அரசின் நடவடிக்கையால் இந்தியா அதிருப்தி அடைந்திருந்தது.

சீன நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு சில தினங்களிலேயே, டில்லியின் முக்கிய அதிகாரி ஒருவர் கொழும்புக்கு வருகை தந்து பேச்சுக்கள் நடத்தியிருந்தார்.

இதன் பின்னணியில், மத்தல வானூர்தி நிலையம் இந்தியாவின் கைக்குச் சென்றுள்ளது. (5)



# நில உரிமையை விட்டுக்கொடோம்

### இலங்கை சீனா நட்புறவு நிகழ்வில் அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 11

வெளிநாட்டு முதலீடுகளின் போது நாட்டின் இறைமைக்கு பாதிப்பேற்படாதவாறு செயற்படுவது தற்போதைய ஆட்சியாளர்களின் கொள்கை. முதலீடுகள் தொடர்பில் வெளிநாடு அல்லது நிறுவனத்துடன் உடன்பாட்டுக்கு வரும் போது அது தொடர்பான தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதனைத் தவிர நில உரிமை ஒருபோதும் அவர்களுக்கு உரித்தாக்கப்பட மாட்டாதெனும் கூற்று உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை இலங்கை அரசு, சீனாவுக்கு தாரைவார்த்து விட்டது என்ற குற்றச்சாட்டுக்கள் மேலெழுந்து வரும் நிலையிலேயே அரச தலைவரின் இந்தக் கூற்று வெளியாகியுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சீன - இலங்கை நட்புறவின் 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன உரையாற்றினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் அபிவிருத்தியின் போது உலகில் பொருளாதார ரீதியில் பலமான நாடுகளின் ஒத்துழைப்பு தேவை. நட்புறவான வெளியுறவு கொள்கை மூலம் தற்போதைய ஆட்சியாளர்களினால் அனைவரினதும் ஒத்துழைப்பை இன்று இலங்கைக்கு உரித்தாக்க முடிந்துள்ளது.

பன்னாட்டுச் சமூகத்தில் இலங்கைக்கு தாக்கம் செலுத்தும் பல பாதகமான நிலமைகளிலிருந்து விடுபடுவதற்கு கடந்த இரண்டரை ஆண்டுகளில் தற்போதைய ஆட்சியாளர்களினால் முடிந்துள்ளது. வெளிநாட்டுச் சொத்துக்களை அதிகரிப்பதற்கும், வெளிநாட்டுக்கடன்சுமையிலிருந்து விடுபடுவதற்கும் அரசு மேற்கொண்ட செயற்பாடுகளின் சாதகமான பெறுபேறுகள் தற்போது தெரியத் தொடங்கியுள்ளன.

கடந்த இரண்டரை ஆண்டு காலப்பகுதியில் உறவுகளைப் பலப்படுத்தியதனாலேயே இன்று சீன - இலங்கை தூதரக தொடர்புகளின் அறுபது ஆண்டு நிறைவை மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாட முடிகின்றது. அந்த உறவுகளைப் பலப்படுத்துவதற்குத் தற்போதைய அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது - என்றார். (5)



## மதுபோதையில் சாரத்தியம் இடைநிறுத்தப்பட்டது அனுமதிப் பத்திரம்

கொழும்பு, ஓக. 11

போக்குவரத்துக்கு பொருத்தமற்ற பாடசாலைப் பேருந்தை மதுபோதையில் செலுத்திச் சென்றார் என்ற குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட சாரதியின், சாரதி அனுமதிப்பத்திரத்தை மூன்று மாதங்களுக்கு இடைநிறுத்திய தம்புத்தேகம நீதிவான் அவருக்கு 29 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்தார்.

நொச்சியாகம பிரதேச மாணவர்கள் 19 பேரை ஏற்றிச்சென்ற பேருந்து போக்குவரத்துக்குப் பொருத்தமில்லாத நிலையில் இருந்ததுடன், சாரதி மதுபோதையில் இருந்தார் என்று நொச்சியாகம பொலிஸார் இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தனர். இந்தப் பேருந்தின் உரிமையாளரும் அவரே என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனையடுத்து சாரதி அனுமதிப் பத்திரத்தை 3 மாதங்களுக்கு இடைநிறுத்தியதுடன், 29 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. (5)

# எமக்கும் அமைச்சு வேண்டும்

### இப்படிக் கோருகின்றனர் ஆதிவாசிகள்

கொழும்பு, ஓக. 11

ஆதிவாசிகளின் பொறுப்புக்கள் அரசின் ஒரு அமைச்சின் கீழ் கொடுக்கப்படல் வேண்டும் என்று ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியல அத்தோ தெரிவித்தார்.

மகியங்கன தம்பான மொரபெத்தேயில் ஆதிவாசிகள் தினம் நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை ஆதிவாசிகள், வேறு நாடுகளிலுள்ள ஆதிவாசிகளைப் போன்று பன்னாட்டு அமைப்புக்களுடன் இணைந்து ஆட்சியாளர்களுக்கு எதிராகச் செயற்படுவதில்லை என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

தேசிய மொழிகள் அமைச்சுக்கு ஆதிவாசிகளின் மொழியைப் பாதுகாக்கும் பொறுப்பு உள்ளது. இந்த நாட்டில் எத்தனையோ அமைச்சுக்கள் இருந்தும், ஆதிவாசிகளுக்கென்று ஒரு அமைச்சு இல்லை. எம்முடைய பிரச்சினைகளை நாமே தான் பேசுகின்றோம். நாம் இதற்கு முன்னரும் இந்தக் கோரிக்கையை முன்வைத்தோம். நாம் நாடாளுமன்றம் செல்லத் தேவையில்லை. எமது விடயங்களுக்குப் பொறுப்பான ஒரு அமைச்சு தேவை - என்றார். (5)

### ரவியைத் தொடர்ந்து

# ஐ.தே.கவின் இரண்டு அமைச்சர்கள் விசாரணை வளையத்துள் சிக்குவர்

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் சூடு பிடித்திருக்கின்ற நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரபல அமைச்சர்கள் இருவர் மீதும் விரைவில் ஆணைக்குழு விசாரணை நடத்தக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாக அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுவரை ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்திருக்கும் மத்திய வங்கியின் அதிகாரிகள் வெளிப்படுத்தியிருக்கும் தகவல்களின் அடிப்படையில் இவ்விரு அமைச்சர்களும் பிணைமுறி மோசடியில் சம்பந்தப்பட்டுள்ளனர் எனச் சந்தேகம் எழுந்துள்ளதால் விரைவில் அவர்களுக்கு ஆணைக்குழு அழைப்பாணைகள் அனுப்பும் அறிகுறி தென்படுகின்றது.

அவர்களுக்கு மேலதிகமாக அரசின் மிக முக்கிய அரசியல்வாதியொருவரும் விசாரணைக்கு அழைக்கப்படலாம் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விடயத்தில் சிக்கியுள்ள அமைச்சர் ரவி கருணாநாயக்காவை பதவி விலகுமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (5)

# வரவை மீறுகிறது செலவு

### பொருளாதாரம் பாதாளம் நோக்கிப் போகிறது

கொழும்பு, ஓக. 11

நடப்பு ஆண்டின் ஜனவரி முதல் ஏப்ரல் வரையான நான்கு மாதக் காலப் பகுதியில் அரசின் மொத்த வருமானம் 5 லட்சத்து 89 ஆயிரத்து 20 மில்லியன் ரூபா. அரசின் மொத்த செலவினம் 12 லட்சத்து 3 ஆயிரத்து 840 மில்லியன் ரூபா என மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் மொத்த வருமானத்தை விட செலவினங்கள் இருமடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளது. வெளிநாடுகளில் பெற்ற கடன்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன.

கடன்களுக்கான தவணைக் கொடுப்பனவுகள் கடந்த வருடத்தைவிட இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.

இந்த நிலையில், நாட்டின் பொருளாதாரம் பலத்த சரிவை நோக்கிச் சென்றுக் கொண்டிருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# 20ஆம் திருத்தம் தொடர்பில் பொது வாக்கெடுப்பு அவசியம்

### மகிந்த அணியின் நிலைப்பாடு இது

கொழும்பு, ஓக. 11

அனைத்து மாகாண சபைகளினதும் தேர்தலை ஒரே தினத்தில் நடத்துவதற்கான 20ஆவது சட்டவரைவை நடைமுறைப்படுத்த அரசு பொதுவாக்கெடுப்பு நடத்தவேண்டும்.

இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவருமான உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.


இது தொடர்பில் அவர்மேலும் தெரிவித்ததாவது:

அர்த்தமற்ற சமாதானங்களைக் கூறி உள்ளூராட்சித் தேர்தல்களை இழுத்தடித்துவரும் இந்த அரசு தற்போது மாகாண சபைத் தேர்தலிலும் கைவைக்க முயல்கிறது.

20 ஆவது சட்டவரைவு மூலம் சகல மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்தப்போவதாக அரசு கூறுகின்றது.

அந்தத் தேர்தல் 2019 ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டிலும் இத் தேர்தல் நடைபெறுமா என்பது சந்தேகமாகவே உள்ளது - என்றார்.

தற்போதுள்ள தேர்தல் சட்டதிட்டங்களின்படி மாகாண சபையொன்றின் பதவிக்காலம் முடிந்ததும் அதற்கான தேர்தலை உடனடியாக நடத்தும் அதிகாரம் தேர்தல் ஆணையகத்துக்கு உள்ளது. அதை நடத்தவிடாமல் 20ஆவது சட்டவரைவைக் கொண்டுவர அரசு முயற்சிசெய்து வருகின்றது. இந்தச் சட்டவரைவுக்கு பொது வாக்கெடுப்பொன்று அவசியம். இந்த நிபந்தனையை அரசு மீற முற்பட்டால் நாங்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வோம் - என்றார். (5)



# கென்யாவில் பதற்றம்


நைரொபி, ஓக. 11
கென்யாவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் கென்யாட்டா வெற்றி பெறுவது உறுதியாகிவிட்ட நிலையில், எதிர்க்கட்சியினரும் அவர்களின் ஆதரவாளர்களும் வன்முறைப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.
கிழக்கு ஆப்பிரிக்க நாடான கென்யாவில் நேற்று முன்தினம் அதிபர் தேல்தல் நடைபெற்றது. இந்தப் பதவிக்கு 8 பேர் போட்டியிட்டனர். தற்போதைய அதிபர் உஹுரு கென்யாட்டா (வயது55), முன்னாள் அதிபர் ரைலா ஒடிங்கா (வயது72) ஆகியோருக்கிடையே நேரடிப் போட்டி நிலவியது. வன்முறை ஏற்படலாம் என்ற அச்சத்திற்கு மத்தியில் பலத்த பாதுகாப்புடன் வாக்குப்பதிவு நடந்தது.
ஆனால், தேர்தல் ஆணைய கணினிகள் மற்றும் அதில் உள்ள தரவுகளை ஹேக்கர்கள் முடக்கிவிட்டதாகவும், இது மிகப்பெரிய வாக்கு மோசடிக்கு வழிவகுத்திருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரைலா ஒடிங்கா குற்றம்சாட்டினார். இதனால் அவரது ஆதரவாளர்களிடையே கடும் கொந்தளிப்பு ஏற்பட்டது. ஒடிங்காவின் ஆதரவாளர்கள் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தொடங்கினர். நேற்று கென்யாவின் பல இடங்களில் பெரும் பதற்றநிலை ஏற்பட்டது. பொலிஸாருக்கும், பொது மக்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு இடம்பெற்று, அது கலவரங்களுக்கும் வித்திட்டது என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. (ம)





# உலகம் இதுவரை க
# வடகொரியா மிக வி

## ட்ரம்ப் மீண்டும் கண்டனம்



பீஜிங், ஓக. 11
உலகம் இதுவரை காணாத தீயையும் சீற்றத்தையும் வடகொரியா சந்திக்கும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார். அவரது இந்த மிரட்டலுக்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.
பன்னாட்டு சட்டதிட்டங்களையும், விதிகளையும் மீறி வடகொரியா தொடர்ந்து பல ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது.
அண்மையில் அந்த நாடு கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை வெற்றிகரமாகச் சோதித்தது.
வடகொரியாவிடம் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் இல்லை என்று தெரிவித்துக் கொண்டிருந்த அமெரிக்காவுக்கு, வடகொரியாவின்

> “ வடகொரியாவிடம் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் இல்லை என்று தெரிவித்துக் கொண்டிருந்த அமெரிக்காவுக்கு, வடகொரியாவின் இந்தச் சோதனை பெரும் தலைவலியைக் கொடுத்தது.

இந்தச் சோதனை பெரும் தலைவலியைக் கொடுத்தது.
அமெரிக்காவின் கோரிக்கையின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபை வடகொரியா மீது தற்போது புதிய பொருளாதாரத் தடைகள் பலவற்றை விதித்துள்ளது.
வடகொரியாவின் பொருளாதாரத்தில்

முதல் மூன்று இடங்க
நிலக்கரி, இரும்பு, கடலு
களே. இந்த மூன்றும்

# ஆட்டம் பாட்டத்துடன் கானாவில் சாவு வீடு

கானாவில் இடம்பெறும் அனேகமான சாவு வீடுகள் உலகின் கவனத்தை தற்போது மிகையாகவே ஈர்த்துள்ளன.
ஒரு சாவு வீட்டை ஆட்டம் பாட்டத்துடன் நடத்தி முடிப்பதற்கு என்றே கானாவில் ஓர் அமைப்பு செயற்பட்டு வருகிறது. ஒவ்வொரு குழுவிலும் 20 நபர்கள் என்று மொத்தம் 40 குழுக்கள் கானாவின் பல்வேறு நகர்களில் செயற்படுகின்றன.
சாவு வீடுகளில் உயிரிழந்தவரின் இறுதிச் சடங்குகள் நடத்தப்படுவதற்கான பொறுப்பு இந்தக் குழுவிடம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் கொண்டாட்டங்களைப் போன்று ஆட்டம் பாட்டத்துடன் இறுதி ஊர்வலத்தை நடத்தி முடிக்கின்றனர். இந்த ஆட்டம் பாட்டங்களைக் கானா மக்கள் பெரும்பாலும் விரும்பவே செய்கின்றனர். எனினும் எதிர்ப்புக்களும் இருக்கவே செய்கின்றன. (ம)





# நடுங்கியது ஜப்பான்

டோக்கியோ, ஓக. 11
ஜப்பான் தலைநகர் டோக்கியோ அருகே நேற்று மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது.
உலகின் அதிமான நிலநடுக்கங்கள் உணரப்படும் இடமாக உள்ள ஜப்பானில் 20 சதவிகித நிலநடுக்கங்கள் ரிச்டர் அளவு கோலில் 6 அலகுகளாகப் பதிவாகின்றன. இந்த நிலையில், தலைநகர் டோக்கியோவிலிருந்து கிழக்குப்பகுதியில் உள்ள சிபாவில் நேற்று அதிகாலை மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவு கோலில் 4.9 அலகுகளாகப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தினால் சுனாமி எச்சரிக்கைகள் எதும் விடப்படவில்லை. (ம)




# விண்கற்களின் வேடிக்கை மாதம் ஒகஸ்ட்

வொஷிங்டன், ஓக. 11
வானவியல் அறிஞர்களுக்கு இந்த மாதம் மிக முக்கியமான மாதம். கடந்த 7ஆம் திகதி இரவு சந்திர கிரகணம் தோன்றியது. அடுத்து வரும் 21ஆம் திகதி முழுச் சூரிய கிரகணம் ஏற்பட உள்ளது. இதற்கிடையில் இந்த மாதம் முழுவதும் விண்கற்கள் வாணவேடிக்கை நிகழ்த்தி வருகின்றன.
பெரும்பாலான விண்கற்கள் கோளப்பாதையில் சூரியனைச் சுற்றி வருகின்றன. அவை பூமியின் வளிமண்டலத்தில் நுழையும்போது தீப்பிழம்புகளாக எரிந்து சாம்பலாகின்றன.
ஒவ்வொரு ஆண்டும் ஜூன் இறுதி முதல் ஒகஸ்ட் வரை பூமியின் வளிமண்டலத்தில் ஏராளமான விண்கற்கள் நுழைந்து வாணவேடிக்கை நிகழ்த்துவது வழக்கம்.
இந்த ஆண்டு விண்கற்களின் வாணவேடிக்கை கடந்த ஜூலை 17ஆம் திகதி தொடங்கியது. இது ஒகஸ்ட் 27 வரை நீடிக்கும். இந்த நாட்களில் சராசரியாக ஒரு மணி நேரத்தில் 50 முதல் 100 விண்கற்கள் பூமியின் வளிமண்டலத்தில் நுழைகின்றன.
இதில் உச்சகட்டமாக நாளை இரவு சராசரியாக ஒரு மணி நேரத்தில் 150 விண்கற்கள் பூமியின் வளிமண்டலத்தில் நுழையும் என்று விண்வெளி விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ம)

# 300 மில்லிய

கோலாலம்பூர், ஓக. 11
காதலித்தவரை கரம் பிடிக்க தந்தை
யின் கோடிக்கணக்கான சொத்தை
தூக்கி எறிந்திருக்கிறார் மலேசியாவை
சேர்ந்த ஏஞ்சலின் கூ என்ற பெண்.
சுமார் 300 மில்லியன் அமெரிக்
டொலர்கள் சொத்து மதிப்பு கொண்டவ
தொழிலதிபர் கோ கே பெங். இவர் மலே
சியாவின் பணக்காரர்களில் 44ஆவது
இடத்தில் இருக்கிறார்.
இவரது மகள்தான் 31 வயதான ஏஞ்ச
லின் பிரான்சிச் கூ.
இவர் 2008ஆம் ஆண்டு லண்டனி
லுள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தில்
கல்வி கற்றுக் கொண்டிருக்கும் கொண்
டிருக்கும்போது கரீபியத்தீவுகளின் எளிய
குடும்பத்தைச் சேர்ந்த ஜிடியா பிரான்
சிஸ் என்பவரைக் காதலித்துள்ளார்.
இதனை தனது தந்தையிடம் தெரிவித்

# காணாத பேரழிவை விரைவில் சந்திக்கும்




இடங்களில் இருப்பது
பு. கடலுணவு ஏற்றுமதி
ன்றும் தற்போது முடக்கப்பட்டுள்ளன. இதனால் வடகொரியா ஏவுகணைச் சோதனைகள் நடத்தாது கட்டுப்படும் என்பது அமெரிக்காவின் திட்டம். எனினும் இந்தத் தடைகளை பொருட்படுத்தாத வடகொரியா மற்றொரு ஏவுகணைக்குத் தற்போது தயாராகி வருகிறது.

பசுபிக் பெருங்கடலில் உள்ள குவாம் தீவு அமெரிக்காவினுடையது. இந்தத் தீவை தாக்க வடகொரியா தற்போது தயாராகி வருகிறது என்றும் செய்திகள் வெளிவந்தன.

இந்தப் ின்னணியில் கருத்துத் தெரிவித்திரு;ந்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப், "வடகொ யா கடுமையான ஊழிக்காலப் பேரழிவை சந்திக்க நேரிடும். அமெரிக்க இராணுவ முகாமின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் இந்த உலகம் இதுவரை காணாத தீயையும் சீற்றத்தையும் வடகொரியா சந்திக்கும்" என எச்சரிக்கை விடுத்துள்ளார். (ம)



## பிரான்ஸ் சிப்பாய்கள் மீது பரிசில் கொலை முயற்சி

பரிஸ், ஓக. 11

பிரான்ஸ் நாட்டில் இராணுவச் சிப்பாய்கள் மீது கார் ஏற்றி கொல்ல முயன்ற ஆசாமியை பொலிஸார் கைது செய்தனர். இவரின் தாக்குதலில் 6 சிப்பாய்கள் காயமடைந்தனர் என்று பன்னாட்டு உடகமான டெய்லி மெய்ல் செய்தி வெளியிட்டது.

பரிஸில் உள்ள சந்தைத் தொகுதி ஒன்றில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சிப்பாய்கள் மீது உயர்ரக சொகுசுக் காரை மோதி ஒருவர் தாக்குதல் நடத்தியதில் 6 சிப்பாய்கள் காயமடைந்தனர். பின்னர் விரைந்து செயற்பட்ட பொலிஸார் ஆயுததாரியைக் கைது செய்தனர். இது ஓர் தீவிரவாதத் தாக்குதல் என்ற கோணத்திலும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (ம)

து

யோ
நடுக்
ங்கள்
ள ஜப்
க்கங்
அல
இந்த
ாக்கி
தியில்
ாலை
டது.
அகு
நிலந
க்கை
(ம)



ஜவரி கோஸ்டின் 57ஆவது சுதந்திர தினம் நேற்றுமுன்தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இராணுவ அணி வகுப்புக்களும் இடம்பெற்றன. (ம)

## கருணாநிதியின் உடல்நிலையில் முன்னேற்றம்

சென்னை, ஓக. 11

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு அளிக்கப்பட்டு வந்த சில சிறப்புச் சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக அவரது தொண்டைப் பகுதியில் சிறு துளையிட்டு வைக்கப்பட்டிருந்த குழாயும் அகற்றப்பட் டுள்ளது.

முதுமை காரணமாக ஏற்பட்ட உடல்நலக் குறைவுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட மருந்துகளால் கருணாநிதிக்கு ஒவ்வாமை ஏற்பட்டது. இதற்கு சிகிச்சை பெற, கடந்த டிசெம்பர் மாதம் சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் கருணாநிதி சேர்க்கப்பட்டார். மூச்சுத்திணறல் நோயை சரிசெய்ய தொண்டையில் சிறு துளையிட்டு, ஒரு குழாய் பொருத்தி சிகிச்சை வழங்கப்பட்டது.

சில நாட்கள் சிகிச்சைக்குப் பின்னர் வீடு திரும்பிய கருணாநிதி, மருத்துவர்களின் அறிவுரைப்படி தொண்டர்களைச் சந்திப்பதை பெரும்பாலும் தவிர்த்து வந்தார். இந்த நிலையில், அவரது உடல்நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டதை அடுத்து, கருணாநிதியின் தொண்டைப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சிறு குழாயும் தற்போது அகற்றப்பட்டுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## யனைத் தூக்கியெறிந்து காதலரைக் கரம்பிடித்த பெண்

தந்தை
சாத்தை
யாவைச்
பண்.
மெரிக்க
ாண்டவர்
வர் மலே
44ஆவது

ன ஏஞ்ச

ண்டனி
கழகத்தில்
ம் கொண்
ின் எளிய
ா பிரான்
துள்ளார்.
தெரிவித்த

ஏஞ்சலினுக்கு வழக்கமான தந்தையர்கள் தெரிவிக்கும் பதிலைத்தான் அவரது தந்தையும் அளித்துள்ளார்.

ஏஞ்சலின் காதலுக்குத் தடை விதித்த அவரது தந்தை அவரது திருமணத்துக்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் சினிமாப் பாணியில் தந்தையின் கோடிக்கணக்கான சொத்தைத் துறந்து தனது காதலரை எளிய முறையில் திருமணம் செய்து அனைத்து ஊடகங்களின் பார்வையும் அவரது திருமணத்தின் மீது குவியச் செய்திருக்கிறார் ஏஞ்சலின்.

திருமணம் குறித்து ஏஞ்சலின், "எனது காதல் திருமணம் குறித்த என் தந்தையின் நிலைப்பாடு தவறு என்று நான் நம்பினேன். இதனால் இதில் எது சரி என்ற கேள்வி எனக்குள் எழவில்லை. உங்களிடம் பணம் இருந்தால் அது ஆசிர்வாதம். பணம் நீங்கள் நினைத்ததை செய்ய வழிவகுக்கும். உங்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கும். ஆனால் அத்துடன் சேர்த்து ஆதிக்க உணர்வுகளும் வரும்.

பணம் எதிர்மறையான பண்புகளை உருவாக்கும். அது பிரச்சினைகளையும் உருவாக்கும். இதனால் இதிலிருந்து வெளியே வநதது எனக்கு எளிதாகவே இருந்தது" என்றார். (ம)



> “ பணம் எதிர்மறையான பண்புகளை உருவாக்கும். அது பிரச்சினைகளையும் உருவாக்கும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வன்முறைக் குழுக்களின் வளர்ச்சிக்கு காரணம் யார்?

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள்என்றுகூறப்படும்13பேரைக்கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். கொக்குவிலில் பொலிஸார் இருவரை வாளால் வெட்டிய சம்பவத்தில் தொடர்புபட்டவர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டவர்கள் இவர்கள். இந்தக் கூட்டத்தின் தலைவர் எனக் கூறப்படும் நிசா விக்டர் எனப்படும் சத்தியவேல் நாதனும் கைது செய்யப்பட்டவர்களில் அடக்கம். இதுபோக வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் வேறு சிலரும் கூடக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கொக்குவில் சம்பவம் நடைபெற்று 10 நாள்களுக்குள் அதனோடு சம்பந்தப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படும் அனைவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். இதுபோன்ற குழுக்கள் இனிமேல் தலைதூக்க முடியாத வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

வாள்வெட்டுக் கும்பல்களால் யாழ்ப்பாணக் குடாநாடு கடந்த சில வருடங்களாகவே பெரிதும் பாதிக்கப்பட்டு வந்திருக்கிறது. பட்டப்பகலில் நகரின் மத்தியில் வாள்களுடன் வந்துநின்று அட்டகாசம் செய்துவிட்டுப்போகும் அளவுக்கு அந்தக் குழுக்கள் துணிபு பெற்றிருந்தன.

பாதாளஉலகக்குழுக்களைப்போன்று, இந்தவாள்வெட்டுக் குழுவும் இரண்டாகஉடைந்து போனதன்பின்னர் ஒன்றோடு ஒன்று மோதியதன் பக்க விளைவாகத்தான் பொலிஸார் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டது என்று விசாரணைகளில் இருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

இப்படி இந்தக் குழுக்கள் தமிழ் மக்களுக்கு எதிராக அட்டகாசம் புரிந்தபோதும் தமக்கிடையில் மோதிக்கொண்டபோதும் அதனை வெறும் அடிதடியாக நோக்கி அசண்டையாக நடந்துகொண்டது பொலிஸ். இந்தக் குழுக்களால் அப்பாவிகளும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டபோதே இந்தளவிற்குத் தீவிர நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைக் கைது செய்து உள்ளே தள்ளியிருந்தால் இந்தப் பிரச்சினை இந்தளவுக்குப் பெரிதாக வளர்ந்திருக்காது.

வாள்வெட்டுக் குற்றங்களில் ஈடுபட்ட உண்மையானவர்களை விட்டுவிட்டு, சிறு குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது இத்தகைய பாரதூரமான குற்றங்களையும் சுமத்தி பொலிஸார் விளையாடிய விளையாட்டின் வினையையே அவர்கள் அறுவடை செய்தனர்.

தம் மீது அடி விழுந்த பின்னர் இவ்வளவு தீவிரமாக ஓடி ஓடி எடுத்த நடவடிக்கையை ஆரம்பத்திலேயே பொலிஸார் எடுத்திருந்தால் குற்றங்களைக் கட்டுப்படுத்தியிருக்கலாம் என்பதுடன் வாள்வெட்டுக் குழுக்களையும் கட்டுப்படுத்தியிருக்கலாம். சட்டத்தின் ஓட்டைகள் வழியேயும் பொலிஸாரின் காவல் வழியேயும் தம்மால் தப்ப முடியும் என்ற துணிவே இத்தகைய சட்டத்துக்குப் புறம்பான குழுக்களின் வளர்ச்சிக்குக் காரணம்.

வெட்டுபவர்களும் வெட்டப்படுபவர்களும் தமிழர்கள் தானே என்ற எண்ணப்பாங்குடன் பொலிஸார் நடந்துகொண்டமையே பிரச்சினையின் அடிநாதம் என்று சொன்னால், அது தவறாக இருக்க முடியாது. ஏனெனில், தம்மை வெட்டியவர்களில் கிட்டத்தட்ட அனைவரையும் 10 நாள்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரை கைது செய்யும் திறமை பொலிஸாருக்கு இருக்கும்போது வாள்வெட்டுக் குழுக்களால் மக்கள் பாதிக்கப்பட்டபோது அந்தத் திறமையை அவர்கள் காட்டாதிருந்ததற்கு வேறு என்ன காரணத்தைச் சொல்லித் தப்பிக்க முடியும்.

சிங்களவர்கள் தாக்கப்பட்டால் அது பயங்கரவாதம் என்றும், தமிழர்கள் தாக்கப்பட்டால் அது வெறும் காவாலித்தனம், சிறு பிரச்சினை என்றும் நினைத்து நடக்கும் போக்கைப் பொலிஸார் கைவிடாத வரைக்கும், இது போன்ற குழுக்களையும் குற்றங்களையும் அவர்களால் முற்றிலும் கட்டுப்படுத்த முடியாது. இனியும் இதுபோன்ற குழுக்கள் தோன்றத்தான் செய்யும்.





# முடிவின்றி இழுபறிப்படும் வடமாகாண சபை சிக்கல்கள்


ந.லோகதயாளன்

> முதலமைச்சர் தனக்கிருக்கும் சட்டரீதியான தற்துணிபு அதிகாரங்களைப் பயன்படுத்தி அமைச்சரவை மாற்றத்தை ஏற்படுத்தவோ, திருத்தி அமைப்பதற்கோ அங்கத்துவக் கட்சிகள் சம்மதத்தை வெளிப்படுத்துகின்றன.

கூட்டமைப்பின் தலைவர் மற்றும் வடமாகாண முதலமைச்சர் ஆகியோருடன் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சகல கட்சித் தலைவர்களும் முதலமைச்சர் இல்லத்தில் கூடிக் கலைந்தமை, கூட்டமைப்பின் ஒற்றுமைக்கு வழி கோலியது என்பதற்கும் அப்பால், கூட்டமைபபிற்குள் நிலவிய பனிப்போர் மேடையேற்றப்படுவதற்கான ஓர் சந்தர்ப்பமாகவும் அமைந்ததாகக் கொள்ளமுடியும்.

குறித்த கலந்துரையாடல், தொடக்கம் முதல் இறுதிவரை, அதி உச்ச சச்சரவாகவே காணப்பட்டபோதிலும், இறுதியில் என்னமோ, வள்ளுவரின் இருவரிக் குறளைத் தாண்டி மூன்றுவரித் தீர்மானமாக வெளியானது. மாலை 6 மணிக்குக் கூடி, இரவு 9.30 மணிக்கு முடிவடைந்த கூட்டத்தின் தொகுப்பு மூன்றுவரித் தீர்மானம் மட்டுமே என்றால், அந்த மூன்றரை மணித்தியால நேரம் உள்ளே என்னதான் நடந்தது? அதாவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், கட்சிகளின் தலைவர்களும், முதலமைச்சரும் தமிழ்மக்களின் நலன்கருதி மேற்கொண்ட தீர்மானங்களாக முன்வைக் கப்பட்ட தீர்மானங்கள் சர்ச்சையைக் குறைக்குமா? அல்லது மேலும் வலுக்கச் செய்யுமா? என்பதே தற்போதைய பெரும் கேள்வியாகத் தலைதூக்கியுள்ளது.

முதலமைச்சர் தனக்கிருக்கும் சட்டரீதியான தற்துணிபு அதிகாரங்களைப் பயன்படுத்தி அமைச்சரவை மாற்றத்தை ஏற்படுத்தவோ, திருத்தி அமைப்பதற்கோ அங்கத்துவக் கட்சிகள் சம்மதத்தை வெளிப்படுத்துகின்றன. அமைச்சர்கள் மாற்றப்பட்டால், அது, குறித்த அமைச்சர் எந்த ஒரு குற்றச்சாட்டையும் இழைத்ததாக அர்த்தப்படாது. அமைச்சரவை நியமனங்களைப் பொறுத்தமட்டில் அங்கத்துவக் கட்சிகளின் ஆலோசனைகளையும் கருத்தில் எடுத்து, அவை மேற்கொள்ளப்படவேண்டும், எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



### முதலமைச்சரது நிலைப்பாட்டை ஏற்க மறுக்கின்றனர் உறுப்பினர்கள்

இறுதியில் இவ்வாறானதொரு இணக்கம் எட்டப்பட்ட போதிலும் முதலமைச்சரின் நிலைப் பாட்டுக்குச் சில கட்சிகளின் தலைவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

வேறு வழியில்லாமல் அந்த இடத்தில் அவர்கள் இணங்கிப் போயிருந்தாலும், முழுமனதோடு அவர்கள் இணங்கினார்கள் என்று சொல்வதற்கில்லை.

எனவே இந்தப் பிரச்சினை இத்தோடு முடிந்து விடும் என்று கூறிவிட இயலாது. அது தொடர்வதற்கான வாய்ப்புகளே அதிகம் இருக்கின்றன. ரெலோ அமைப்பினர், தமது கட்சியின் சார்பில் அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்ற பா.டெனீஸ்வரனை நீக்கவேண்டும் என்று வலியுறுத்தினர்.

அதேபோன்று அமைச்சரவை மாற்றம் தொடர்பில் பேசப்பட்ட போது, விசாரணைக் குழு விடுவித்த இரு அமைச்சர்களையும் நீக்கி விட்டு, டெனீஸ்வரனுக்குப் பதிலாக ரெலோ அமைப்பு பிரேரிப்பவருக்கும், மற்றைய அமைச்சுப் பதவியை புளொட் கட்சிக்கும் வழங்கும் முடிவை முதலமைச்சர் முன்வைத்தார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார். தமது கட்சியின் அமைச்சரவைப் பிரதிநிதித்


துவத்தை மாற்றி வழங்குவதற்கு அவர் எதிர்ப்பு வெளியிட்டார்.
மாகாண சபையில் 15 உறுப்பினர்கள் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கும்போது, அந்தக் கட்சிக்கு அமைச்சர் பதவியொன்றை வழங்காமல் விடுவது மேலும் பிரச்சினையைச் சிக்கலாக்கும் என்று புளொட் கட்சியின் தலைவர் நேரடியாகவே கூறினார்.

**தமிழ் அரசுக் கட்சிக்குள்ளேயே தொடர்கின்றன கருத்து முரண்பாடுகள்**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராசா, திருமதி அனந்தி சசிதரனைத் தமது கட்சியின் அங்கத்தவராக இப்போது கருத வேண்டாம் என்றும் கூறியுள்ளார்.
எங்கள் கட்சி சார்பாக எவரை அமைச்சர் பதவிக்குப் பிரேரிப்போம் என்பதை வெளிப்படுத்துவோம் என்று கூறியபோது, அந்த ஐவரில் எவரது பெயரைப் பிரேரித்தாலும் (மாகாண சபையில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அணி என்று அடையாளப்படுத்தப்படுபவர்கள்) அவர்களில் எவரையும் அமைச்சர் பதவிக்கு நியமிக்கவே மாட்டேன்.
எனக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட போது 43 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. 43 கேள்விகளுக்கு என்றல்ல 400 கேள்விகளுக்கு வேண்டுமானாலும் என்னால் பதிலளிக்க முடியும். தற்போதைய நிலையில் வடமாகாண சபையில் தமிழ் அரசுக் கட்சி சார்பான உறுப்பினர்கள் 16 பேர் இருப்பதால், எனக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்ற வும் தமிழ் அரசுக் கட்சியால் முடியும். ஆனாலும் அவ்வாறான சவால் எதனையும் சந்திக்க நான் தயார் என்றார் முதலமைச்சர்.
இவ்வாறு உள்ளுக்குள் உச்சக்கட்ட மோதலில் ஈடுபட்ட பின்பு, வெளியில் வந்து வள்ளுவரின் குறள்போன்ற இருவரிகளில் 3 தீர்மானங்களை வெளியிட்டாலும் அது ஒருநாள் கூட நீடித்ததாகத் தெரியவில்லை. அதாவது மறுநாளே தமிழ் அரசுக் கட்சியின் வட மாகாண சபை உறுப்பினர்கள் ஒன்று கூடி, புதிய அமைச்சரவையில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களில் எவரும் பங்கு கொள்வதில்லை என்ற தீர்மானத்தை எட்டியுள்ளனர்,
அதேவேளை வடமாகாண சபை உருவாக்கத்தின் பின்னர் மத்திய அரசிடமிருந்து 2014, 2015, 2016, 2017 ஆகிய 4 ஆண்டுகளிலும் மாகாண சபைக்கு அபிவிருத்தி நிதியாக வழங்கப்பட்ட மொத்த நிதியிலும் பார்க்க சுகாதார அமைச்சர் தனி ஒரு அமைச்சராக மாகாணத்திற்குத் தேடிக் கொடுத்த வருமானம் அதிகம்.

**ஆளை ஆள் குற்றம்சாட்டி விமர்சிக்கும் தரப்புக்கள்**

வட மாகாண சபையானது எந்தவொரு பெரிய அபிவிருத்தித் திட்டத்தையும் முன்னெடுக்கவோ அல்லது அதற்கு ஒத்துழைக்கவோ கூடாது என்ற நிலைப்பாட்டில் இயங்குவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு வரிசையில், தற்போது சத்தியலிங்கத்தின் பெயரும் பட்டியலில் இணைந்து கொள்கின்றது. இந்தக் கொள்கையிலேயே வட மாகாண முதலமைச்சர் இயங்குகின்றார் என குற்றச்சாட்டை முன்வைப்பவர்கள் அடுக்கும் குற்றச்சாட்டுக்களின் பட்டியலோ நீண்டது.




அந்தப் பட்டியலில் ஐ.நாவால் வழங்கப்படவிருந்த ஆயிரத்து 500 மில்லியன் யு.எஸ் டொலர் நிதியை வேண்டாம் எனத் தெரிவித்தமை, முல்லைத்தீவில் இந்தியத் துணைத் தூதரகம் அமைக்க முன்வந்த தொழில் நுட்பக் கல்லூரிக்கான காணியை வழங்காது வேண்டுமென்றே தடுத்து நிறுத்தியமை, சாவகச்சேரிப் பகுதியில் அமைக்க உத்தேசித்த உப்பளத்துக்கான திட்டத்தை தடுத்தமை, பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கு முட்டுக் கட்டை போட்டமை என அந்தப் பட்டியல் நீள்கின்றது.
அவர் ஆனால் இதற்குப் பதிலாக இவ்வாறான பெரிய திட்டங்கள் எவற்றையாவது முதலமைச்சரின் இந்த 4 ஆண்டுகள் கால நிர்வாகத்துக்குள் வட மாகாணத்துக்குள் கொண்டு வர முயற்சித்தாரா என்றால் அதற்கு இல்லை என்பதே பதிலாகும். அத்தோடு காரிய நிதியீட்டல்களைப் பெற்றுவரும் மற்றுமோர் பெரிய நிதியாக 11 ஆயிரத்து 600 மில்லியன் ரூபா நிதியை கிடைக்கச் செய்ய அனைத்து ஒப்பந்தங்களும் பூர்த்தி செய்யப்பட்டு, அந்த நிதியை வழங்கும் டென்மார்க் அரசும் மத்திய அரசும் அனுமதியும் வழங்கிவிட்ட நிலையில் கதாநாயகனாக விளங்கும் வட மாகாண சுகாதார அமைச்சர் வடக்கில் பெரிய திட்டங்களை ஆரம்பித்தால் அரசு வடமாகாணத்தை அபிவிருத்தி செய்கின்றது என்ற குற்றச்சாட்டு வந்துவிடும் என்ற ஒரே நோக் கத்திற்காகவே அவரது அமைச்சிற்கும் ஆப்பு வைக்கப்படுவதாக தற்போது கூறப்படுகின்றது.



> வட மாகாண சபையானது எந்தவொரு பெரிய அபிவிருத்தித் திட்டத்தையும் முன்னெடுக்கவோ அல்லது அதற்கு ஒத்துழைக்கவோ கூடாது என்ற நிலைப்பாட்டில் இயங்குவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு வரிசையில், தற்போது சத்திய லிங்கத்தின் மீதான பட்டியலும் இணைந்து கொள்கின்றது. இந்தக் கொள்கையிலேயே வட மாகாண முதலமைச்சர் இயங்குகின்றார் எனக் குற்றச்சாட்டை முன்வைப்பவர்கள் அடுக்கும் பட்டியலோ நீண்டது.

**குப்பையைக் கிண்டக் கிண்ட குப்பையே வெளிப்படும்**

அவ்வாறு இல்லை எனச் சொன்னாலும் நிச்சயமாக திட்டத்தை தயாரித்து அத்தனை முன்னகர்வுகளையும் செய்தவர் அந்த இடத்தில் இருந்து நகரும்போது அங்கே நிச்சயமாக ஓர் தடங்கல் ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை.
அதாவது ஒரு காலதாமதம் ஏற்படுமேயன்றி நிதி திரும்பிச் செல்லாது. அந்தக் காலதாமத எல்லைக் காலத்தில் வட மாகாண சபையின் ஆயுள்காலம் நிறைவுபெற்றுவிடும். அப்போதும் இதனை ஓர் அரசியல் பேசுபொருளாக, அதாவது எவையுமே இடம் பெறவில்லை எனச் சுட்டிக்காட்டும் உத்தி என தற்போது இனம் காட்டப்படுகின்றது.
இதன் காரணமாகவே 4 ஆண்டு கால ஆட்சியில் மத்திய அரசு வழங்கிய 24 ஆயிரத்து 800 மில்லியன் ரூபாவைவிட, தனி அமைச்சராக அதிக வருமானத்தை தேடிக் கொடுத்த சுகாதார அமைச்சரும் இலக்கு வைக்கப்பட்டுள்ளாரா? என்ற கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் உள்ளது.
இந்த நிலையில் மாகாண சபையின் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் சற்றே சீற்றம் கொண்டுள்ள நிலையில், தமிழ் அரசுக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களை கொழும்புக்கு அழைத்துள்ளார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.
இவ்வாறு அழைக்கப்பட்ட இடத்தில் என்ன தீர்மானம் எட்டப்பட்டது. என்பதன் அடிப்படையிலும், எதிர்கால சபை நடவடிக்கையிலுமே மாகாண சபையின் தலைவிதி தீர்மானிக்கப்படவுள்ள நிலையில், முதலமைச்சரின் போக்கே அதன் ஆயுள் காலத்தை தீர்மானிக்கும் என்பதில் மட்டும் சந்தேகம் இல்லை.
இதேவேளை மாகாண சபையில் அமைச்சர்கள் பிரச்சினைக்கு விசாரணை என்கின்ற கோரிக்கையே காரணமாக அமைந்தது. அந்தக் கோரிக்கையைத் தமிழ் அரசுக்கட்சியே சபையில் முதலில் கொண்டுவந்ததாக கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சுரேஸ் பிறேமச்சந்திரன் தொடக்கம் வேறு பலரும் தவறாகவே கருத்துரைத்து வருகின்றனர்.
உண்மையில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 9ஆம் திகதியன்று வட மாகாண சபையின் 45 ஆவது அமர்வில் புளட் அமைப்பின் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனே அமைச்சர்கள் மீதான விசாரணையை தீர்மானமாகக் கொண்டுவந்தார்.
இது சபை நடவடிக்கை குறிப்பேட்டில் பதிவில் இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.
இவ்வாறு ஆவண ரீதியாகவுள்ள ஓர் விடயத்திலேயே பொய் உரைப்பதன் உள்நோக்கம் என்ன என்பதும் தனியே ஆராயப்பட வேண்டிய விடயமாகக் கொள்ளத்தக்கது.



## ஆசிரியருக்கான கடிதம்

### வடமாகாணத்தில் முன்னர் செயற்பட்ட பெரிய தொழிற்சாலைகளுக்கு விடிவு காலம் வருமா?

வடமாகாணத்தில் முன்னர் நீண்டகாலமாக இயங்கி வந்த பெரிய தொழிற்சாலைகளான காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை பரந்தன் இரசாயன தொழிற்சாலை, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை என்பவை உள்நாட்டுப் போர் காரணமாக செயற்பாடின்றி முடங்கி பல ஆண்டுகள் கடந்து விட்டன. இந்த நிலை அரசுக்கு மட்டுமல்லாது வட மாகாண மக்களுக்கும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கத்தக்க நிலை இதனால் அற்றுப் போயுள்ளது. இன்று போர் முடிவுக்கு வந்து எட்டு ஆண்டுகள் கழிந்தும் மேற்குறிப்பிட்ட தொழிற்சாலைகளை இயங்க வைக்க எந்த விதமான முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை. எமது நாடாளுமன்ற உறுப்பினர்களோ, வடமாகாண சபையோ இந்த விடயம் தொடர்பாக எதுவித நடவடிக்கைகளையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆனால் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரேயொரு தொழிற்சாலையான வாழைச்சேனை காகித ஆலையை வெளிநாட்டு உதவியுடன் இயங்க வைக்க கிழக்கு மாகாணசபை நடவடிக்கை எடுத்துள்ளமை பாராட்டப்பட வேண்டிய விடயம்.
எமது நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு சிலர் செயலற்றுப் போயுள்ள வடமாகாணத் தொழிற்சாலைகள் குறித்து அரசுக்குச் சுட்டிக் காட்டிய போதிலும், பயனேதும் ஏற்பட்டதாக இல்லை.
1990 ஆம் ஆண்டில் மூடப்பட்ட ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை வன்னிப் பிரதேச மக்களுக்கு மட்டுமல்லாமல், யாழ்.குடாநாட்டு மக்களின் ஓடு, செங்கல் தேவைகளைப் பூர்த்தி செய்த ஒரு தொழிற்சாலை ஆகும். இங்கே 200க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கடமை ஆற்றினார்கள். அவர்களுக்கான வேதனங்கள் கடந்த 25 வருடங்களாக வழங்கப்படாமை நியாயமற்றதொன்று.
இது விடயமாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பல வழிகளிலும் நெருக்கம் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இன்று வரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவரவில்லை. எனவே, வடபகுதியில் செயலற்றுப் போயிருக்கும் குறித்த தொழிற்சாலைகள் அனைத்தையும் மீள இயங்க வைப்பதன் மூலம் வடபகுதி யில் வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிட்டச் செய்ய எமது அரசியல்வாதிகள் ஆவன செய்தல் இன்றைய காலத்தின் முக்கிய தேவை.

வே.ம.இந்திரநாதன்

# மே மாத காலப்பகுதியில் ஏற்றுமதிச் செயலாற்றுகை மூலமான வருமானப் பெறுகை 4.3 வீதமாக அமைவு

| வகைப்பாடு | மே 2016 (b) (யு.எஸ்.டொலர் மில்லியன்) | மே 2017 (யு.எஸ்.டொலர் மில்லியன்) | மாற்றம் (%) | ஜன - மே 2016 (b) (யு.எஸ்.டொலர் மில்லியன்) | ஜன - மே 2017 (யு.எஸ்.டொலர் மில்லியன்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| 1. கைத்தொழிற்துறை ஏற்றுமதி | 608.0 | 614.5 | 1.1 | 3,321.5 | 3,316.0 | (0.2) |
| துணி மற்றும் உடு புடவை வகைகள் | 374.7 | 359.2 | (4.1) | 2,084.5 | 1,985.5 | (4.7) |
| ஓ/ டபிள்யு உடுபுடவைகள் | 356.3 | 337.7 | (5.2) | 1,969.7 | 1,869.3 | (5.1) |
| இறப்பர் உற்பத்திகள் | 57.1 | 67.0 | 17.5 | 308.7 | 315.5 | 2.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 16.9 | 27.6 | 63.8 | 109.2 | 147.7 | 35.3 |
| உணவு, குடிபாணம் மற்றும் புகையிலை | 27.9 | 30.5 | 9.3 | 145.3 | 131.9 | (9.2) |
| இரத்தினம், வைரம் மற்றும் நகைகள் | 27.7 | 22.3 | (19.4) | 126.5 | 103.3 | (18.4) |
| போக்குவரத்து உபகரணங்கள் | 7.0 | 4.3 | (38.2) | 59.5 | 70.7 | 18.7 |
| மர மற்றும் தாள் உற்பத்திகள் | 8.3 | 11.1 | 33.0 | 45.8 | 56.4 | 23.2 |
| உலோகத் தாதுப் பொருள்கள் | 5.4 | 9.3 | 73.3 | 29.2 | 44.6 | 52.6 |
| அச்சுத் தொழிற்றுறை உற்பத்திகள் | 1.5 | 1.0 | (32.6) | 8.1 | 13.8 | 70.1 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.7 | 2.3 | (12.6) | 14.3 | 12.8 | (10.4) |
| ஏனையவை | 78.8 | 79.7 | 1.1 | 390.4 | 433.8 | 11.1 |
| 2. விவசாயப் பொருள்களின் ஏற்றுமதி | 168.7 | 222.7 | 32.0 | 890.5 | 1,074.4 | 20.6 |
| தேயிலை | 90.2 | 131.6 | 45.9 | 496.5 | 589.8 | 18.8 |
| தேங்காய் | 27.9 | 27.9 | 0.0 | 142.7 | 143.7 | 0.7 |
| நறுமணப் பொருள்கள் | 19.4 | 23.7 | 21.9 | 93.4 | 132.9 | 42.3 |
| கடல் உணவு | 12.6 | 17.7 | 40.5 | 70.5 | 101.9 | 44.5 |
| சிறிய விவசாய உற்பத்திகள் | 10.8 | 13.0 | 20.8 | 46.9 | 58.3 | 24.5 |
| இறப்பர் | 2.5 | 2.9 | 14.6 | 15.1 | 21.9 | 44.5 |
| மூலப் பொருள் நிலையிலுள்ள புகையிலை | 3.0 | 3.1 | 4.2 | 14.4 | 13.5 | (5.9) |
| மரக்கறி | 2.4 | 2.8 | 17.3 | 11.1 | 12.4 | 11.9 |
| 3. கனிமங்களும் ஏனையவையும் | 3.4 | 4.1 | 19.7 | 17.7 | 19.9 | 12.6 |
| மொத்த ஏற்றுமதி | 780.1 | 841.2 | 7.8 | 4,229.7 | 4,410.2 | 4.3 |

நடப்பாண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதி, கடந்த ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதி மற்றும் தனித்து கடந்த ஆண்டின் மே மாத காலப் பகுதி.நடப்பாண்டின் மே மாத காலப் பகுதி வரையான ஏற்றுமதிச் செலாற்றுகை மூலமான வருமான உள்வருகைகள் பின்வருமாறு அமைந்துள்ளது என்ற தகவலை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வு மையம் வெளிப்படுத்தியுள்ளது. இதனை வெளியார்ந்த ஆய்வு அறிக்கையிடலாக மத்திய வங்கி தந்துள்ளது.

தேயிலை, நறுமணப் பொருள்கள் பெற்றோலியம் பொருள்கள் மற்றும் கடல் உணவுப் பொருள்களின் ஏற்றுமதியால் அதிக வருவாய் கிடைத்துள்ளது. நடப்பாண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஏற்றுமதி மூலமான வருவாய் ஆண்டு அடிப்படையில் 4.3 வீதமாக அமைந்துள்ளது.வருமான ஈட்டமானது 4 ஆயிரத்து 410 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது. எனினும் புடவை மற்றும் ஆடைகள், இரத்தினக் கற்கள், வைரம் மற்றும் நகைகள் அதேபோன்று உணவு, பானங்கள் மற்றும் புகையிலை ஆகியவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய் கணிசமாக குறைந்துள்ளது.

தகவல் மூலம் : இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுங்கம்,தேசிய ஆபரணக் கற்கள் அதிகார சபை,இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்.

(a - தற்காலிக மதிப்பீடு, b - திருத்திய மதிப்பீடு) (ஒ)

## கடன் அட்டைக்கான வட்டி வீதங்கள் அதிகரிப்பு

வங்கிகளால் விநியோகிக்கப்படும் கடன் அட்டைகளுக்கு அறவிடப்படுகின்ற வட்டி வீதங்களை அதிகரிப்பதற்கு வணிக வங்கிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை காலமும் கடன் அட்டைக்காக செலுத்தப்பட வேண்டிய நிலுவைக் கட்டணத்துக்கு வருடாந்த வட்டி வீதமானது 24 வீதமாக்கப்பட்டுள்ளதுடன் இந்த அதிகரிப்பானது கடந்த ஜீலை மாதம் முதலாம் திகதியில் இருந்து 28 வீதத்தால் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி திருத்தப்பட்டதான வட்டி வீதங்கள் ஜீலை மாதம் முதலாம் திகதியின் பின்னதான அனைத்துக் கொடுககல் வாங்கல் செயன்முறைகளின் போதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படும் மாதாந்தக் கட்டண விபர அறிக்கையுடன் அதிகரிக்கப்பட்ட வட்டி வீதங்கள் தொடர்பான தகவல்கள் வழங்கப்படுமெனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாத இறுதி வரை இலங்கையில் இயங்கும் கடன் அட்டைகளின் எண்ணிக்கையானது 13 லட்சத்து 54 ஆயிரத்து 971 ஆக பதிவாகியுள்ளதென மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இவற்றுள் 28 ஆயிரத்து 621 கடன் அட்டைகள் உள்நாட்டில் இடம்பெறுகின்ற கொடுப்பனவுச் செயற்பாடுகளின் போதும் ஏனைய 13 லட்சத்து 26 ஆயிரத்து 350 கடன் அட்டைகள் பன்னாட்டு ரீதியில் இடம்பெறுகின்ற கொடுப்பனவுச் செயற்பாடுகளின் போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறித்து நோக்கத்தக்கது. (ஒ)

## இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ள தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையிலான புள்ளி விபரங்களின் படியே இந்த விடயங்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன் மே மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையானது 2.5 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது என்றும் சுட்டிக்காட்ட ப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையில் நிலவி வரும் சீரற்ற காலநிலை மாற்றங்கள் காரணமாகவே வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகளில் இருந்து வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையே அதிகளவில் வீழ்ச்சியடைந்துள்ளமை குறித்து நோக்கத்தக்கது. (ஒ)



## இலங்கையில் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்ய ஐ.நா. தீர்மானம்

### பொருளாதார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவிப்பு

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் ஐ.நா. (UNSDF) இலங்கையில் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடுசெய்யத்தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது என்ற தகவலை பொருளாதார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா வெளிப்படுத்தியுள்ளார். [illegible]

"இலங்கையின் நீண்ட கால அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பில் ஐ.நா. அடுத்த ஐந்தாண்டுகளில் இலங்கையின் அபிவிருத்திக்கு 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வது மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது. இலங்கையின் இயற்கை அனர்த்தங்கள்,பொது நிறுவனங்களின் தேவை போன்ற முக்கிய நான்கு மூலோபாயத் திட்டங்களுக்காக இந்த நிதி ஒதுக்கப்படுவது ஐ நா [illegible] திட்ட நடைமுறைப்படுத்தல்களின் ஊடே மக்களிடையேயான நேர் மறையான எண்ணங்களையும், வேறுபாடுகளை குறைப்பதற்கு முனைகின்றது" - என்றார். (ஒ)

CSE
COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

10/8/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 10.29 | 6,516.32 | 6,506.03 |
| S&P SL20 | 3.73 | 3,737.94 | 3,734.21 |
| வியாபாரப்புரள்வு | | 306,587,936 | 747,535,870 |
| உள்நாடு- கொள்வனவு | | 165,239,616 | 256,811,776 |
| விற்பனை | | 263,691,920 | 381,138,528 |
| வெளிநாடு- கொள்வனவு | | 141,348,336 | 490,724,064 |
| விற்பனை | | 42,896,028 | 366,397,312 |



| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 163.60 | 178,143 | 29,336,894 |
| சம்பத் வங்கி | SAMP.N | 289.60 | 84,242 | 24,823,625 |
| சேவ்ரோன் லுப்பிரிக்கன் | LLUB.N | 133.50 | 135,022 | 19,068,606 |
| மல்வத்த பெருந்தோட்டம் | MAL.N | 6.00 | 1,357,433 | 8,024,968 |
| சனச அபிவிருத்தி வங்கி | SDB.N | 101.60 | 77,287 | 7,918,167 |
| HNB அசூரன்ஸ் | HASU.N | 67.00 | 105,687 | 7,170,773 |
| றோயல் செரமிக் | RCL.N | 130.00 | 48,569 | 6,508,761 |
| பெஸ் கப்பிற்றல் ஹோல்டிங்ஸ் | CFVF.N | 36.90 | 158,591 | 5,952,438 |
| சிலோன் ஹோல்ஸ்ரோஸ் | CCS.N | 805.00 | 7,038 | 5,630,455 |
| பிறவன்ஸ் கப்பிற்றல் | FLCH.N | 3.90 | 1,389,179 | 5,296,659 |

சம்பத் வங்கி Right issue 1 for 6 @ Rs.245
பங்குலாபம்
சொ.ப்ட்லொஜிக் பைனான்ஸ் - ரூபா 1.65 சதம்
சேவ்ரோன் லுப்பிரிக்கன் - ரூபா 2.00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 230 |
| விலை உழைப்பு | 10.06 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விளை | 3.1 |

# ஆடவல்லான்


## பிட்டுக்கு மண் சுமந்த மேனியன்

மதுரகவி அருளானந்தன்

ஆடவல்லானின் திருவிளையாடல்கள் ஆயிரமாயிரம். வாதவூரர் என்ற திருநாமம் கொண்ட மாணிக்கவாசகர் ஐந்தொழுத்தினை தனது மூச்சாக உச்சரித்து வந்தார். ஒரு சமயம் பாண்டிய மன்னன் வாதவூரரை சிறையிலிடுகிறான். இந்த சந்தர்ப்பத்திலே நியாயத்தை நிலைபெறச் செய்ய எம்பெருமான் ஈசன் பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார்.

**ஆறு பெருக்கெடுத்தல்**

வைகை என்ற ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிடச் செய்யவும், மதுரை மாநகர்



முழுமையுமாக மூழ்கிடுமோ என்று ஐயம் கொள்ளும்படி எங்கும் தண்ணீர்க் காடாக நிரம்பச் செய்தார். வாதவூரர் அடைபட்டிருந்த சிறையின் காவலர்கள் தங்களது குடும்பத்தைக் காத்திடச் சென்றனர். சிறைக் கதவு ஈசனின் அருட்கடாட்ச வெள்ளத்தால் உடைவு கொண்டு திறந்தது. ஆலவாய் பெருமான் கோயிலை அடைந்த வாதவூரர் அங்கு மோன நிஷ்டையில் ஆழ்ந்தார். வெள்ளம் மேலும் பெருக்கெடுத்து நகரினுள்ளே வராமல் இருக்க மன்னன் அரச வேலையாள்களை ஏவல் செய்கிறான். வெள்ளப் பெருக்கினைத் தடுத்திட அனைவரையும் ஒன்றிணையுமாறு கூறி பறை அறைந்து அறிவிப்புச் செய்கிறான். அவ்வாறே அனைவரும் ஒன்றிணைந்து பணி செய்தனர்.

**வந்தியின் வேண்டுதல்**

ஆனால் அந்த ஊரில் வாழ்ந்த மூதாட்டியான வந்தி என்பவளால் பணிகள் எதனையும் செய்ய முடியவில்லை. வெள்ளம் வரும் திசையில் அவளுக்கென குறித்தொதுக்கப்பட்ட பகுதியை மண்ணிட்டு அடைக்கமுடியவில்லை. ஓரத்தில் முடங்கிப்படுத்திருந்தாள். அரச காவலர் இதனை அவதானம் கொள்கின்றனர். அவளை மிரட்டிப் பணிசெய்ய அறிவுறுத்துகின்றனர். அரசனின் தண்டனைக்குப் பயந்தவளாய் வந்தி சொக்கநாதரை மனதில் நினைந்து தனக்கு உதவ வேண்டுமென வேண்டிப் பணிகிறாள்.

**கூலியாள் வேடம் தரித்தல்**

கருணாகரனான சொக்கநாதன் வந்தியின் வேண்டுதலை ஏற்றுக்கொண்டான். பழைய துணியை இடுப்பிலே சுற்றிக்கொண்டு, கூடையை தலையிலே சுமந்து கொண்டு, மண்வெட்டியை தோளிலே காவியபடி வந்தியின் வீட்டுக்கு முன்பாக வந்து நின்றான். "கூலிக்கு ஆள் வேண்டுமா..? கூலிக்கு ஆள் வேண்டுமா...? வேலை ஏதும் உண்டோ..!" என்று கூக்குரல் இட்டான். இதை செவிமடுத்த வந்தியும் கூலியாள் வடிவம் தரித்து வருகை தந்துள்ள எம்பெருமான் சொக்கநாதன் அருகாக வந்து நின்றாள். "அப்பா..! வெள்ளம் பெருக்கெடுக்கும் திசையில் எனது பங்கை அடைத்துவிடு. நான் தரும் கூலியை பெற்றுக் கொள்" என்றாள்.

இதைக் கேட்ட கூலியானவன், "தாயே மண் சுமந்து அணைகட்ட நீ கொடுக்கப்போகும் கூலி தான் என்ன" என்று வினவினான். அதற்கு வந்தி, "என்னிடம் பிட்டைத் தவிர வேறு எதுவுமில்லை. அதனையே கூலியாக்த் தர எண்ணியுள்ளேன். நீ அதனை ஏற்பாயா..?" என்று நெஞ்சுருகக் கேட்டாள்.



> கருணாகரனான சொக்கநாதன் வந்தியின் வேண்டுதலை ஏற்றுக்கொண்டான். பழைய துணியை இடுப்பிலே சுற்றிக்கொண்டு, கூடையை தலையிலே சுமந்து கொண்டு, மண்வெட்டியை தோளிலே காவியபடி வந்தியின் வீட்டுக்கு முன்பாக வந்து நின்றான். "கூலிக்கு ஆள் வேண்டுமா..? கூலிக்கு ஆள் வேண்டுமா...? வேலை ஏதும் உண்டோ..!" என்று கூக்குரல் இட்டான்.




வந்தியின் வேண்டுதலை ஏற்றுக்கொண்டு வேலைசெய்வதற்கு முன்பதாகவே கூலியைத் தரவேண்டும். அப்படியெனில் உனது பங்கை மண்சுமந்து அடைக்கின்றேன் என்றார் கூலி வடிவம் தரித்த எம்பெருமான். அதற்கு ஒப்புதல் கொடுத்தாள் வந்தி. வந்தி கொடுத்த பிட்டை வாங்கி வயிறுபுடைக்க உண்ட பின்பு அங்குமிங்கும் அல்லாடினார். சற்றே படுத்து உறங்கினார். ஆனால் சொன்னபடி வேலை எவையும் நடக்கவில்லை.

**பாண்டிய மன்னன் வருகை**

இந்தச் செய்தியை பாண்டிய மன்னன் தெரிந்து கொண்டான். அவ்விடம் வருகை தந்தான். சும்மா ஜாலஞ் செய்து கொண்டு, அங்குமிங்கும் திரிந்து கொண்டிருந்த கூலியாள் வேடம் தரித்த உமாபதியைக் கடிந்தான். தான் வைத்திருந்த சவுக்கால் முதுகில் ஓங்கி அடித்தான்.

இந்த சந்தர்ப்பத்திலே ஈசன் மீது அந்த அடி விழவில்லை. சவுக்கடிகள் அனைத்துமே அரசன் மீது விழுந்தது. அமைச்சர் மீதும், பாண்டிமாதேவியின் மீதும், சிறுவர் சிறுமியர் மீதும் ஏன் மதுரை மாநகரிலுள்ள அனைவரினதும் மீது பளார், பளார் என்று வலியோடு தழும்பு ஏற்படும் விதமாக அடி விழுந்தது.

**அருள் உவகை**

இறுதியில் ஒரேயொரு கூடை மண்ணால் உடைப்பு அடைக்கப்பட்டதைக் கண்டு பாண்டிய மன்னன் வியந்தான். வாதவூரர் புஷ்பக விமானத்திலேறி விண்ணுலகம் போவதையும் கண்டான். அந்தவேளை அசரீரீ வாக்கு ஒலித்தது. "பாண்டிய மன்னா..! எதையும் தீர விசாரித்து முடிவெடுக்காது எனது மீளா அடியவன் வாதவூரனைச் சிறையிலிட்டாய். இமைப்பொழுதும் கைவிடாது என்னையே துதித்து நம்பி வாழ்ந்த வந்தியையும் துன்புறுத்தினாய். அதற்கான கூலியே உனக்குக் கிடைத்தது." என்றுரைத்தார் கைலைநாதன் சிவபெருமான்.

இப்படியாக தம்மை நாடிவரும் அடியவர்கள் மீது அதீத கருணை காட்டிடும் கங்காதரன், எங்கள் சிவகுருநாதனின் கதைகள் ஏராளம்.

---

# பரிபூரணமான ஆன்மிகம் அமைதியின் வடிவம்

## அசைவுகளின் இசைவு கொண்டு ஆன்மாவை உணர்தல்

சாம் ரமேஸ்குமார்

இந்து தர்மத்தில் நிலை பெற்றிருக்கின்ற ஒவ்வொரு மனிதனும் சமயம் என்றால் என்ன என்பது பற்றியும், ஆன்மிகம் என்றால் என்ன என்பது பற்றியும், இவை இரண்டுக்கும் இடையேயான வேறுபாடுகள் என்ன என்பது குறித்தும் தெளிவுறத் தெரிந்துகொள்ள வேண்டும். தெரிந்திருக்க முயற்சிக்க வேண்டும்.

சமயத்தையும் ஆன்மிகத்தையும் நாம் ஒன்றாகக் கலந்திடக் கூடாது. கலங்கிய குட்டையில் ஒருபோதுமே மீன் பிடிக்க முடியாது. சமயம் என்பது புற உலகைச் சார்ந்த பயணம். ஆன்மீகம் என்பது உள்ளுணர்வைச் சார்ந்த ஒரு பயணம். சமயத்தினுள் சடங்குகள், கிரியைகள், யாகங்கள், மடைகள் போன்ற புற செயற்பாடுகள் உள்ளடங்கும்.

ஆனால் ஆன்மிகம் என்பதுள் ஒரு மனிதனின் உள்ளுணர்வுக்கு அப்பாலான அமைதி உள்ளடக்கம் பெற்றுள்ளது. தனி மனித ஆன்மா மலர்வுறுதலே பரிபூரணமான ஆன்மிகமாகும். உண்மையான ஆன்மிகவாதி ஒருவர் புற உலகைச் சார்ந்த அனைத்துச் சமய நிகழ்வுகளையும் தன் உள்ளுணர்வின் வெற்றிக்கான படிமுறைகளாக அமைத்துக் கொள்வான். அறிவின் யோகம் கொண்டு இலக்கினை அடையும் நுட்பமாய் மாற்றி விடுவான். இதனையே பிறர், ஞானியின் விவேகம் என்று குறிப்பிடுகின்றனர்.

சமயவாதிகள் புற உலகிலே தமது மனப் போக்கை என்றும் நிரந்தரமாய் வைத்திருப்பர். ஆன்மாவின் உண்மை முகத்தை என்றும் அறியாதவராய் இருப்பர். சமயத்தின் அனைத்துச் சம்பிரதாயங்களையும் தமது உள்ளுணர்வின் அமைதிக்கான அடிப்படைகளாக மாற்றத் தெரியாது தவிப்பர். அறியாமையுள் உட்பொதிந்து சமயத்தோடு கூட்டிணைவாகி தமது வாழ்க்கையை முடித்துக் கொள்கின்றனர்.



இந்த நிலையிலே இந்து தர்மம் சார்ந்த பிரசங்கிகளும், சொற்பொழிவாளர்களும் சமயத்துக்கும் ஆன்மிகத்துக்கும் இடையிலான உண்மைவேறுபாடுகளை அறிந்திடாது தவறான போதனைகளை மக்களிடத்தில் பரம்பலடையச் செய்கின்றனர். அதிலும் சிலர் ஆன்மிகம் என்பது எங்கு பொதிந்துள்ளது என்ற அடிப்படைகளைத் தெரிந்துகொள்ளத் தவறுகின்றனர். ஆன்மிகம் பேச முற்படுகின்றனர்.

உண்மையில் ஆன்மிகம்என்பது ஆரம்பகாலம் தொட்டு ஆன்மாவைக் கொண்டே எப்போதும் அறியப்பட்டுவந்திருக்கின்றது. இனிவரும் காலங்களிலும் ஆன்மாவைப் பற்றியே அறியப்படும். அதற்கு முடிவு என்பதே இல்லை எனலாம்.

சமய தத்துவம் பேசுபவர்களோடு ஒருபோதுமே ஆன்மிகம் பேச முடியாது. ஆனால் ஆன்மிகம் பேசுபவர்களோடு எப்போதும் சமயத்தைப் பேசலாம். ஏனெனில் சமயத்தின் தத்துவார்த்த நுட்பங்களை தங்கள் உள்ளுணர்வுக்குள் அமைதியாக மாற்றிக்கொள்பவர்கள் அவர்களே.

ஆக, எதிர்காலத்தில் வளர்ந்து வரும் இளம் தலைமுறையினர் சமயத்துக்கும், ஆன்மிகத்துக்கும் இடையிலான வேறுபாட்டை முழுமையாக உணர்ந்து கொள்ள வேண்டும். அசையும் சமயத்தில் இருந்து கொண்டு அசையாத ஆன்மிகத்தின் ஊடே தமது ஆன்மாவை உணர்ந்து கொள்ள வேண்டும். ஆன்மாவை உணர்ந்துகொண்டு இந்து தர்மத்தின் காவலர்களாக என்றென்றும் வலம்வர வேண்டும்.

> எதிர்காலத்தில் வளர்ந்து வரும் இளம் தலைமுறையினர் சமயத்துக்கும், ஆன்மிகத்துக்கும் இடையிலான வேறுபாட்டை முழுமையாக உணர்ந்து கொள்ள வேண்டும். அசையும் சமயத்தில் இருந்து கொண்டு அசையாத ஆன்மிகத்தின் ஊடே தமது ஆன்மாவை உணர்ந்து கொள்ள வேண்டும். ஆன்மாவை உணர்ந்து கொண்டு இந்து தர்மத்தின் காவலர்களாக என்றென்றும் வலம்வர வேண்டும்.

# ஒகஸ்ட் மாத பலன்

## கன்னி

உத்திரம் 2, 3, 4 பாதம், அஸ்தம், சித்திரை 1, 2, பாதம்

எந்த ஒரு வேலையையும் மிகவும் பொறுமையாகவும், பொறுப்புடனும் செய்து முடிக்கும் கன்னி ராசியினரே! இந்த மாதம் சகல காரியங்களும் அனுகூலமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். எதிர்பார்த்த தகவல்கள் நல்லவையாக வரும். விருப்பங்கள் கைகூடும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும், அந்தஸ்தும் உயரும். மற்றவர்களிடம் பேசும்போது கோபத்தைக் குறைத்துப் பேசுவது நல்லது. பணவரத்து இருக்கும்.

தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்கள் சொற்படி பிள்ளைகள் நடந்து கொள்வது மனதுக்கு இதமளிக்கும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள்.

**பெண்கள்:** நிதானமாகப் பேசுவது நன்மை தரும். பணவரத்து திருப்தி தரும். எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரும்.

**அரசியல்வாதிகள்:** குழுச் சண்டையிலிருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. சகாக்களுடன் உரிமையாகப் பேசிப் பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். எனினும் கட்சி மேல்மட்டத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**கலைத்துறையினர்:** மூத்த கலைஞர்களால் ஆதாயமடைவர். பழைய நிறுவனத்திலிருந்து புதிய வாய்ப்புத் தேடி வரும். சம்பள விடயத்தில் இறுக்கமாக இருப்பது அவசியம்.

**மாணவர்கள்:** சக மாணவர்களுடன் பழகும் போது கவனம் தேவை. பாடங்கள் எளிமையாகத் தோன்றும்.

**உத்திரம் 2, 3, 4 பாதம்:**
இந்த மாதம் வீண் அலைச்சல் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் ஏற்படும். வாக்குவன்மையால் அனுகூலம் உண்டாகும். எந்தக் காரியத்தையும் யோசித்துச் செய்வது நல்லது. பணம் சார்ந்த கஷ்டங்கள் குறையும். காரிய வெற்றியும், நன்மையும் உண்டாகும்.

**அஸ்தம்:**
இந்த மாதம் காரிய அனுகூலம் உண்டாகும். எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிக்கத் தேவையான உதவிகள் கிடைக்கும். சுய நம்பிக்கை அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். எந்தப்பிரச்சினையும் எதிர்கொள்ளும் தைரியம் உண்டாகும்.

**சித்திரை 1, 2, பாதம்:**
இந்த மாதம் மனதை கவலை கொள்ளச் செய்த பிரச்சினைகளில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டு சாதகமான பலன் கிடைக்கப் பெறலாம். தொழில், வியாபாரம் முன்னேற்றப் பாதையில் செல்லும். சிறப்பாகச் செயற்பட முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும். எதிர்பார்த்த பண உதவியும் கிடைக்கப் பெறும். வேலை தேடிக் கொண்டு இருப்பவர்களுக்கு உத்தியோக வாய்ப்பு ஏற்படும். முக்கிய நபர்களின் உதவியும் கிடைக்கும்.

**பரிகாரம்:** கிருஷ்ண பரமாத்மாவை வணங்க கஷ்டங்கள் தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

# வரலாற்றில் இன்றைய தினம் 11.08.2017



*2012-ஈரான் டப்ரிஸில் ஏற்பட்ட இரட்டை நில நடுக்கத்தில் 306 பேர் உயிரிழக்க 3 ஆயிரம் பேர் வரை காயமடைந்தனர்.*

1804-இரண்டாம் பிரான்ஸிஸ் ஒஸ்ரியாவின் முதலாவது பேரரசராகப் பதவியேற்றார்.

1898-அமெரிக்க-ஸ்பானிஷ் போரில், அமெரிக்கப் படைகள் பியோற்றோ றிகோ மாயாகுவெஷ் நகரைக் கைப்பற்றின.

1952-ஜோர்தான் அரசரானார் ஹுசைன் பின் ரலால்.

1959-ரஷ்யாவின் இரண்டாவது மிகப்பெரிய பன்னாட்டு வானூர்தி நிலையம் திறக்கப்பட்டது.

1968 - பிரிட்டனில் கடைசித் தடவையாக நீராவி இயந்திரத்தைக் கொண்ட ரயில் ஓடவிடப்பட்டது.

1972-வியட்னாம் போர்: அமெரிக்காவின் கடைசித் தரைத்தாக்குதல் அணி தென் வியட்டனாமிலிருந்து வெளியேறியது.

[illegible]-உக்ரைனுக்கு மேலாகப் பறந்த இரண்டு ஏரோபுளட் வானூர்திகள் ஒன்றோடொன்று மோதியதில் 178 பேர் உயிரிழந்தனர்.

[illegible] - [illegible]ம் ஒன்றுக்[illegible] 41 ஆயிரம் ரூபா போர்ச் செலவு என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு.

2006-பளை இயக்கச்சி மக்கள் பரந்தன் பகுதிக்கு இடம் பெயர்வு.

2006-முஸ்லிம்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து மீண்டும் மூதூரில் குடியமர்த்தியே தீருவோம் என நாடாளுமன்றத்தில் அதாவுல்லா சூளுரை.

2012-ஈரான் டப்றிஸில் ஏற்பட்ட இரட்டை நில நடுக்கத்தில் 306 பேர் உயிரிழக்க 3 ஆயிரம் பேர் வரை காயமடைந்தனர்.

2016-உண்மை கண்டறியப் பட்டாலே நல்லிணக்கம் ஏற்படுமென நாடாளுமன்றில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு.

2016-டெங்குத் தொற்றுக்கு உள்ளாவோர் தென்மராட்சியில் அதிகரிப்பு. பெரும்பாலானோர் தென்னிலங்கை சென்று வந்தவர்கள்.

## நாளை

**12.08.2017**

சனிக்கிழமை

**ஆடி - 27**

திதி: பஞ்சமி மு.இ. 10.08 வரை
நட்சத்திரம்: ரேவதி பி.இ.05.44
சுபநேரம்: 03.04–04.34 வரை
ராகுகாலம்: 09.04–10.34 வரை

# பத்தி எழுத்து

## மாகாண சபை உறுப்பினர்களும் விசாரிக்கப்படவேண்டும்

நம்பகமான தெரிவுக்குழு ஒன்றினால் வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் மீதான விசாரணைகள் இடம்பெறும் போதுதான் உண்மைகள் வெளிவருவதற்கான வாய்ப்பு ஏற்படும். இந்த விசாரணைகள் முதலமைச்சர் வசமுள்ள அமைச்சுக்களிலும் இடம்பெற வேண்டும். இதனால் விசாரணைக் குழுவை அமைக்கும் பொறுப்பிலிருந்து முதலமைச்சர் விலகி நிற்க வேண்டும். அத்துடன் விசாரணைகளில் அவர் தலையிடவும் கூடாது.

இதேவேளை மாகாணசபை உறுப்பினர்கள் மீதும் மக்கள் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து வருவதால் அவர்களிடத்திலும் விசாரணை கள் இடம்பெறுவது அவசியமாகின்றது.

மாகாணசபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதி மக்கள் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுதல் அவசியமாகும். அதிலும் போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்கள் உதவிகளைப் பெறுவதற்காக ஏங்கி நிற்கின்றனர்.

இவர்களின் தேவைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாகாணசபை உறுப்பினர்களுக்கும் உள்ளது. இவர்கள் தமக்கென ஒதுக்கி வைக்கப்படு கின்ற நிதியை இதற்காகப் பயன்படுத்திக் கொள்ளுதல் அவசியமானதாகும்.

ஆனால் இதில் சில மாகாணசபை உறுப்பினர்கள் முறைகேடாக நடந்து கொள்கின்றனர் என்று மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

சில மாகாணசபை உறுப்பினர்கள் அந்தப் பதவி கிடைத்ததன் பின்னர் தமது குடும்பத்தின் வசதிகளைப் பெருக்கியுள்ளனர் எனப் பரவலாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான நிதி இவர்களுக்கு எவ்வாறு கிடைத்தது? எனவும் மக்கள் வினா எழுப்புகின்றனர். ஆகவே இந்த விடயம் தொடர்பாக ஆராய வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

மாகாணசபை உறுப்பினர்கள் சிலர் தமது எண்ணம்போன்று பாராபட்சமாக நடந்து கொள்கின்றனர் என்றும் குற்றச்சாட்டுக்களும் உள்ளன. இதுவும் விசாரிக்கப்படவேண்டிய ஒன்று.

வடக்கு மாகாணசபை மக்களுக்காக இயங்காமல், மாகாணசபை உறுப்பினர்களுக்காகவே இயங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. உண்மையைச் சொல்லப்போனால் மாகாணசபை உறுப்பினர்கள் பணம் சம்பாதிக்கின்ற ஓர் இடமாகவே மாகாணசபை விளங்குவதாக மக்கள் கூறுகின்றனர்.

ஆகவே மாகாணசபை உறுப்பினர்களும் தெரிவுக்குழு மூலமாக விசாரிக்கப்படுதல் தவிர்க்க முடியாதது. மாகாணசபை உறுப்பினர்கள் மீது மக்கள் கொண்டுள்ள சந்தேகங்கள் அகல வேண்டுமானால் அவர்களும் தெரிவுக் குழுவினால் விசாரிக்கப்படுதல் அவசியம்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | | 8 | | 7 | | | 3 |
| | 6 | | | | | 1 | 2 | 7 |
| 3 | | 7 | 5 | | | | 8 | |
| | | 4 | 9 | | | | | 2 |
| | 3 | | | | | | 1 | |
| 1 | | | | | 5 | 3 | | |
| | 8 | | | | 4 | 2 | | |
| | | 6 | | | | | 3 | |
| 9 | | | 1 | | 8 | | 6 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 7 | 3 | 6 | 8 | 5 | 9 | 1 |
| 6 | 9 | 3 | 1 | 4 | 5 | 7 | 8 | 2 |
| 1 | 8 | 5 | 9 | 7 | 2 | 4 | 6 | 3 |
| 8 | 5 | 1 | 2 | 3 | 4 | 6 | 7 | 9 |
| 7 | 2 | 4 | 5 | 9 | 6 | 3 | 1 | 8 |
| 9 | 3 | 6 | 8 | 1 | 7 | 2 | 5 | 4 |
| 3 | 6 | 2 | 7 | 8 | 9 | 1 | 4 | 5 |
| 5 | 7 | 9 | 4 | 2 | 1 | 8 | 3 | 6 |
| 4 | 1 | 8 | 6 | 5 | 3 | 9 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1—9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமா கப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# வி.ஐ.பி.—2 இன்று 'ரிலீஸ்'



தமிழ் திரையுலக முன்னணி நடிகர் தனுஷ் நடித்துள்ள வேலையில்லாப் பட்டதாரி படத் தின் இரண்டாவது பாகம் பெரும் எதிர்பார்ப்புக்களின் மத்தியில் இன்று திரைக்கு வருகிறது.

சவுந்தர்யா ரஜினிகாந்த் இயக்கி யிருக்கும் இந்தப் படத்தில் விவேக், கஜோல், அமலாப்பால் ஆகியோரும் சமுத்திரக்கனி, சரண்யா பொன்வண்ணன், மோனல் கஜ்ஜார், ரிஷிகேஷ் உள் ளிட்ட பலரும் நடித்திருக்கின்ற னர். சீன் ரோல்டன் இந்தப் படத் துக்கு இசையமைத்திருக்கிறார். சமீபத்தில் சிங்கப்பூரில் நடத்தப் பட்ட தணிக்கைக் குழு சோதனை யின் மூலம் வேலையில்லா பட்ட தாரி2 படத்தின் நீளம் 128 நிமிடங் கள் (2 மணித்தியாலம், 8 நிமிடங் கள்) என்பது தெரிய வந்துள்ளதா கக் கூறப்படுகிறது. (ம)

வேலை செய்யாத சிசிடிவி கமராவும்



போர்க்களத்தில் தோட்டா இல்லாத துப்பாக்கியும் ஒன்றுதான்

பல பொண்ணுங்களை லவ் பண்ணி அத அவங்ககிட்ட சொல்லாமலே விட்டிருக்கேன்



அது மாதிரி எத்தன பொண்ணுங்க என்கிட்ட சொல்லாம விட்டிருக்குங்களோ...

எமக்கு என்னவெல்லாம் புடிக்கும்னு ஒரு லிஸ்ட் போட்டு வைச்சுகிட்டு...



அதையெல்லாம் கிடைக்காம பாத்துக்கிறது தான் கடவுளோட வேலை போல...

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வாழ்வில் முன்னேற்றம் பெற புதிய வாய்ப்பு கிடைக்கும். சாமர்த்தியமாக செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** நீண்ட நாள் தாமதமான பணி எளிதாக நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை உயர்வால் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் ஆதரவால் வளர்ச்சி காண்பர்.

**மிதுனம்:** எதிலும் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. சகதொழில் சார்ந்தவர்களிடம் வாக்கு வாதம் செய்ய வேண்டாம். தொழில், வியா பாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். குடும்ப விடயத்தை பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**சிங்கம்:** பேச்சு, செயலில் உறுதி நிறைந் திருக்கும். நற்செயல் மூலம் சமூக மதிப்பு உய ரும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடை யூறு விலகும்.

**கன்னி:** சிறு செயலையும், நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரம் வியப்பூட்டும் வகையில் வளர்ச்சி அடையும். பணியாளர்கள் விரும்பிய சலுகைகள் கிடைக்கப் பெறுவர்.

**துலாம்:** சுய நலத்துடன் செயற்படுவதைத் தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில் விடா முயற்சி தேவைப்படும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்ல வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** எதிர்மறை எண்ணம் உள்ள வர்களிடம் பேசுவதைத் தவிர்க்கவும். பொறுமை காப்பதால் சிரமம் தவிர்க்கலாம். தொழில் வளர்ச்சி பெற கூடுதல் முயற்சி தேவை.

**தனுசு:** பேச்சில் இனிமை மிகுந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும். குடும்ப பிரச்சினைக்குச் சுமுக தீர்வு கிடைக்கும்.

**மகரம்:** சிலர் சுயநலத்துடன் நெருங்கி வருவர். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பணியரளர்கள் பணிச்சுமையால் சிரமப்படுவர்.

**கும்பம்:** நேர்மை மிக்க மனிதராக செயற் படுவீர்கள். திறமையுடன் செயற்பட்டு முன்னேறு வீர்கள். தொழில், வியாபாரத்தில் நிர்ணயித்த இலக்கை அடைவீர்கள். வருமானம் உயரும்.

**மீனம்:** சிலர் தவறான ஆலோசனை சொல்ல வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் ஆதா யம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம்,

மனைவி : நீங்க எங்க இருக்கீங்க?
கணவன் : உனக்கு அந்த நகைக்கடை ஞாபகம் இருக்கா? உனக்குக்கூட அங்கு இருந்த ஒரு வைரத்தோடு ரொம்பப் பிடிச்சுதே, ஆனால் என்கிட்டே பணம் இல்லாததாலே வாங்க முடியாம போச்சே,



ஒருநாள் இல்லை ஒருநாள் கண்டிப்பாக வாங்கி தருவேன்னு நான் கூட சொன்னேனே, ஞாபகம் இருக்கா?
மனைவி (சந்தோஷமாக): எனக்கு நல்லா ஞாபகம் இருக்குங்க. சொல்லுங்க!
கணவன்: அதுக்குப் பக்கத்தில் இருக்கிற சலூனிலதான் இருக்கேன். இன்னும் ஒரு மணி நேரத்தில வீட்டுக்கு வந்துடுவேன்.



# எனது கிராமம்

- ★ கின்னியா எனது கிராமம் ஆகும்.
- ★ அது அழகான சூழலில் அமைந்துள்ளது.
- ★ இது திருகோணமலை நகரிலிருந்து எட்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ளது.
- ★ இங்கு ஏழு வெந்நீர் கிணறுகள் உள்ளன.
- ★ ஒவ்வொன்றும் வெவ்வேறான வெப்பமுடையவை.
- ★ இந்த கிணறுகளின் நீர் மருத்துவ சக்தி உடையது
- ★ இந்தக் கிணறுகள் இராவணனால் உருவானதாகக் கூறுவர்.
- ★ இவற்றைப் பார்ப்பதற்காக மக்கள் நாட்டின் பல இடங்களில் இருந்தும் வருகை தருவார்கள்.
- ★ எனது கிராமம் வரலாற்றுப் பெருமை மிக்கது.
- ★ அநுராதபுரம் செல்லும் வீதி கின்னியாவின் ஊடாகச் செல்கின்றது.
- ★ எனது கிராமத்தில் குறிஞ்சியும் மருதமும் கொஞ்சி விளையாடும்.
- ★ எனது கிராமத்து மக்கள் விவசாயம் செய்வார்கள்
- ★ எனது பாடசாலை தலைமை வீதியில் அமைந்துள்ளது.
- ★ எனது கிராமம் பலமுறை வன்செயல்களால் பாதிக்கப்பட்டுள்ளது.
- ★ எனது பெற்றோர் வன்செயல்களின் போது இடம் பெயர்ந்து வாழ்ந்தனர்.
- ★ பின்னர் மீண்டும் இங்கு குடியமர்ந்தனர்.
- ★ அப்போது நான் சிறு பிள்ளையாக இருந்தேன்.
- ★ இந்த ஊரில் குடியிருக்க நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

ஜருணி குணசீலன்,
*யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.*

# செருப்பு



ஆடு, மாடு, குதிரை போன்ற விலங்குகளின் பாதங்களில் குளம்புகள் இருக்கின்றன. அவற்றின் உதவியால் அவை கரடு முரடான தரைகளில் இலகுவாக நடந்து செல்கின்றன. ஆனால் மனிதனிடத்தில் இத்தகைய அமைப்பு இல்லை. எனவே அவன் தன் பாதத்தைப் பாதுகாக்கச் செருப்பு செய்து அணியத் தொடங்கினான். குளிர்காலம், மழைக்காலம், கோடை காலம் முதலிய பருவ காலங்களுக்கு ஏற்ற வகையில் செருப்புக்கள் உள்ளன. மேலும் விளையாடும் போது அணியும் செருப்புகள், வேட்டைக்குச் செல்லும் போது அணியும் செருப்புக்கள் என்று பல வகையான செருப்புக்களும் உள்ளன. தோலினால் மட்டுமன்றி இறப்பர், பிளாஸ்டிக் போன்றவற்றாலும் இன்று செருப்புக்கள் தயாரிக்கப்படுகின்றன. மரக் கட்டைச் செருப்புக்களும் பயன்படுகின்றன.

செருப்போ, வேறு காலணியோ அணியாமல் நடப்பது ஆபத்தாகும். கல், முள், ஆணி அல்லது கண்ணாடித்துண்டு முதலியன எமது கால்களில் குத்த நேரிடலாம். அசுத்தங்களும் நோய்க் கிருமிகளும் பாதங்களில் ஒட்டிக் கொண்டு நோய்களைப் பரப்புகின்றன. கொக்கிப்புழுக்கள் பாதத்தின் வழியாக உடலில் புகுந்து குருதியை உறிஞ்சி குருதிச்சோகை நோயை உண்டாக்குகின்றன. ஆகவே எங்கு சென்றாலும் செருப்பு அணிந்து செல்ல வேண்டும். காலில் அணியும் செருப்புக்களை வீட்டுக்கு வெளியே கழற்றி வைத்து விட்டு வீட்டுக்குள் நடமாடும் பழக்கம் நல்லது.



# வாத்து

குள்ள குள்ள வாத்து
குவா குவா வாத்து
குஞ்சுகள் சூழ நித்தம்
ஊர் கோலம் வரும் வாத்து

படகு போல நீரில்
பவனி வரும் வாத்து
பாசி புழு பூச்சிகள்
பார்த்தே உண்ணும் வாத்து

சேற்றில் சுற்றி இரையைத்
தேடித் தின்னும் வாத்து
ஆற்று வெள்ளம் தன்னிலும்
அஞ்சா திறங்கும் வாத்து

முட்டை இட்ட பின்பு
விழித்து நிற்கும் வாத்து
முயன்றே அடையும் காக்க
முடியாப் பெட்டை வாத்து



# தொழில் கற்றுக்கொடு

சுந்தரும் வண்ணனும் சகோதரர்கள் சுந்தர் மூத்தவன், வண்ணன் இளையவன். இருவரும் மீன்பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தனர். ஒரு நாள் நண்பகல் நேரம். அவர்கள் இருவரும் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அவர்களிடம் அவன் "நான் சாப்பிட்டு பல நாள்கள் ஆகின்றன. ஏதேனும் உணவு தாருங்கள்" என்று கெஞ்சினான். இரக்கப்பட்ட சுந்தர் அவனுக்கு உணவு கொடுத்தான். இதனைப் பார்த்த வண்ணன் "அண்ணா இப்படிப் பட்ட சோம்பேறிகளிடம் இரக்கம் காட்டக் கூடாது" என்றான் எரிச்சலுடன், அடுத்த நாளும் அந்தப் பிச்சைக்காரன் அவர்களிடம் வந்தான். அவனுக்கு சுந்தர் உணவு கொடுத்தான். "மீண்டும் மீண்டும் வருகிறானே"! என கோபப் பட்டான் வண்ணன். "சோம்பேறிப் பயலே! அடுத்த தடவை உன்னை நான் இங்கே பார்க்கக் கூடாது" என்று எச்சரித்து கத்தினான். ஆனால் மூன்றாவது நாளும் பிச்சை கேட்டு அவன் அவர்களிடம் வந்தான். கோபத்தால் துடித்த வண்ணன், அங்கிருந்த ஒரு தூண்டில் ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். பிச்சைக் காரனின் கையைத் தன் ஒரு கையால் பிடித்து 'தர தர'வென இழுத்துக் கொண்டு ஏரிக்கரைக்கு வந்தான். "இப்படி கைகால்கள் நன்றாக இருந்தும் பிச்சை எடுத்து இழிவான வாழ்க்கை நடத்துகிறாயே? உனக்கு இன்றிலிருந்து மீன்பிடிக்கக் கற்றுத் தருகிறேன். இந்த தூண்டிலை வைத்து பிழைத்துக் கொள்!" என்றான். வண்ணன் கோபமாக. பின்னர் அவனுக்கு மீன்பிடிக்கக் கற்றுக் கொடுத்து விட்டு அங்கிருந்து சென்று விட்டான். அதன் பின்னர் அந்தப் பிச்சைக் காரன் அவர்கள் வீட்டிற்கு வருவதே இல்லை.


பல ஆண்டுகள் சென்றன. ஒரு நாள் செல்வந்தர் ஒருவர் அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் அவர்கள் வீட்டுக்கு வந்தார். அவர் கையில் தங்கத்தால் செய்யப்பட்ட சிறிய தூண்டில் ஒன்று இருந்தது. சுந்தரும் வண்ணனும் அவரைப் பார்த்தனர். வந்தவர் தங்கத் தூண்டிலை வண்ணனிடம் கொடுத்து "என் அன்புப் பரிசாக இதனை வைத்துக் கொள்ளுங்கள்" என்றார். தனது வீட்டுக்கு முன்பு வந்து, தான் இரங்கி உணவளித்த பிச்சைக்காரன் தான் வந்தவர் என்று அடையாளம் கண்டு கொண்டான் சுந்தர். இப்போது கோபமுற்ற சுந்தர் "நீ சாகப் பிழைக்க கிடைக்கும் நிலையில் பசியோடு இங்கு வந்த வேளை, உனக்கு உணவு தந்து காப்பாற்றியவன் நான். ஆனால் நீயோ என் தம்பியிடம் தங்கத்தூண்டிலைக் கொடுத்து விட்டாய். அதை என்னிடம் பெற்றுக் கொடு" என்று கத்தினான்.

அவரோ "இல்லை இது உன் தம்பிக்கே உரியது" என்றார். இந்தக் கூற்றை சுந்தர் ஏற்க மறுத்ததால் வழக்கு நீதிமன்றுக்குச் சென்றது. நீதிமன்றில், நடந்தவை அனைத்தையும் விசாரித்த நீதிபதி, சுந்தரைப் பார்த்து "நீ இவருக்கு உணவளித்து காப்பாற்றியது உண்மைதான். நீ செய்த உதவி இவர் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. உன் தம்பியோ இவர் உழைத்துப் பிழைப்பதற்கு ஒரு தொழிலுக்கு வழிகாட்டினார். அந்தத் தொழிலைப் பயன்படுத்தியே இவர் இன்று இந்த நிலைக்கு உயர்ந்துள்ளார். நிலையான உதவி செய்தவருக்கு இந்த தங்கத் தூண்டிலைப் பரிசளிப்பது முறையே" என்று தீர்ப்பு வழங்கினார் நீதிபதி.

**ஒருவனுக்கு தினமும் உணவளிப்பதை விடவும் அந்த உணவைப் பெறுவதற்குரிய உழைப்பைக் கற்றுக் கொடுப்பதே மேலான உதவியாகும்.**

## திருக்குறள் புதிர்; கண்டுபிடிப்போம்

**இங்கே 29 படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தப் படங்களின் பெயர்களை வைத்து அவற்றின் எழுத்துகளை கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளின் வரிசைப்படி சரியான எழுத்துகளை கட்டத்துக்குள் எழுதுங்கள். மொத்த கட்டங்களிலுமுள்ள எழுத்துகளையும் ஒன்று சேர்த்து படித்துப் பாருங்கள். ஒரு திருக்குறள் கிடைக்கும். அதனைக் கீழே எழுதுக**




..........................................................................................

..........................................................................................

# கண்ணெரிச்சலில் இருந்து தீர்வு தரும் இயற்கை வைத்தியம்

இன்றைய காலக்கட்டதில் கணினி, மடிக் கணினி, அலைபேசி போன்ற நவீன தொழில் நுட்ப சாதனங்களின் பாவனை சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் பாதிக் கின்றது. பயனுறுதியற்ற விளைவாக கண்ணெரிச்சலை அதிகம் தருகிறது.

இதனை தவிர்ப்பதற்கான எளிய வீட்டு முறை வைத்தியம் ஒன்று இருக்கிறது. அது ஒரு சிறப்பான எண்ணெய், அதைத் தலைக்குத் தேய்த்து குளித்தால் கண்களில் எரிச்சல் குறைந்து கண்கள், குளிர்ச்சி அடையும். உடல் புத்துணர்ச்சியாக இருப்பதை உணர முடியும். இனி அந்த சிற்ப்பான எண்ணெயை எப்படி வீட்டிலேயே தயார் செய்வது, பயன்பெறுவது என்பது பற்றிப் பார்க்கலாம்.

**தேவையான பொருள்கள்**

நல்லெண்ணெய், வெங்காயச் சாறு, புளியம் இலைச் சாறு

**செய்முறை:**

வெங்காயம் மற்றும் புளியம் இலையை இடித்துச் சாறு எடுக்க வேண்டும். பின்பு அதனுடன் நல்லெண்ணெய் கலந்து கொள்ளவும்.

**பிரயோகச் செய்முறை:**

நன்கு கலந்து வைத்துள்ள அந்த எண்ணெயை தலையில் தேய்த்து சிறிது நேரம் காய விடவும்.

எண்ணெய் நன்கு காய்ந்த பிறகு, வழக்க மான தலைக் குளித்தல் செயற்பாட்டை மேற்கொள்ளலாம். இப்போது உங்கள் கண் எரிச்சல் நீங்கி, கண்கள் குளிர்ச்சியடைவதை உணரலாம்.



**சாரதி தேவை**

AD வகை சாரதி அனுமதிப் பத்திரமுடைய வாகன சாரதி தேவை. மாலை 6 மணிக்கு பின்பு தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு - 075 6563 907

**காணி விற்பனைக்கு**

நாவற்குழியில் A9 வீதியிலிருந்து 25 அடி பாதையுடன் கூடிய 2ஆவது காணி 8 பரப்பு (United Motors Companyக்கு அருகில்) விற்பனைக்குண்டு. (தொழில் நிறுவனங்களுக்கு பொருத்தமானது Hotel Yard Inn Restaurant)

**தொடர்பு - 076 697 2284**

**வேலையாள் தேவை**

உணவு பரிமாறுபவர்
றொட்டி தயாரிப்பாளர்
சமையல் உதவியாளர்
ஆகிய வேலைகளுக்கு ஆள் தேவை.
**நேரில் தொடர்பு கொள்ளவும்.**
**452. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்










விசாரணை ☎ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1388
சீட்டிழுப்பு திகதி 2017.08.10
29 37 46 56 E
48 50 53 59
ரூ. 16,672,112/-

**SUPER BALL**
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 687
சீட்டிழுப்பு திகதி 10.08.2017 வியாழக்கிழமை
X 09 15 53 72
சுப்பர் ஜக்பொட் ரூ. 55, 394, 188/=
வெல்லப்படவில்லை
11 22 63 71
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### சிவக்கொழுந்து வேலுப்பிள்ளை

இருபாலை கிழக்கு, சிவன்கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சிவக்கொழுந்து வேலுப்பிள்ளை நேற்று (10.08.2017) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி வேலுப் பிள்ளையின் அன்பு மனைவியும் சிவநாதன், சிவராசா, சிவயோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் சரஸ்வதிதேவி, ரமணி, மனோகரதாஸ் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கோப்பாய் தபால்கந்தோர் அருகில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை கிழக்கு நொச்சிக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தபால்கந்தோர் அருகில்,**
**கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

**தகவல்:**
**வே.சிவநாதன் (மகன்)**
**077 614 7421**

திருமதி

### யோகம்மா சேதுபதி



யாழ்ப்பாணம் கொட்டடியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி, திருநெல் வேலி கெனடி வீதியை வசித்த வரும் தற்போது கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா சேதுபதி (10.08.2017) இறைவன் கழல் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோம சுந்தரம் சேதுபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர் களான சண்முகம் - சரஸ்வதி அம்மா தம்பதியின் அன்புமகளும் திருமதி துரைராசா கமலாதேவியின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற துரைராசாவின் மைத்துனியும் சுகந்தினி (லண்டன்), சசிகலா (லண்டன்), பிரேமினி ஆகியோரின் அன்புத்தாயும் முரளிதரன் (லண்டன்), பாஸ்கரன் (லண்டன்), ஜெயக்குமார் (விஜயன் - வெற்றிக்கண்ணன், கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மாமியும் துஷிக்கா, வினோஜன், பிரியா, தரணிகா, தர்மினா, தர்சனா ஆகியோரின் பேர்த்தியும் உமாதேவி, வசந்தாதேவி, நீதிராசா (லண்டன்), கிருஷ்ணராசா (கிருஷ்ணா) ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கோகுல வீதி கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோகுல வீதி**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 023 7514**

## வீடு விற்பனைக்கு

நல்லூர் கந்தசாமி கோயில் முன்பாக பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள ஒரு பரப்பு காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 075 774 7573**

**சுவர்ண வாசனாவ**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 064
சீட்டிழுப்பு திகதி 10.08.2017 வியாழன்
07 31 33 49 6 ஜீனை
ரூ. 15, 189, 226/= | ரூ. 2, 247, 707/= | ரூ. 2, 077, 890/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
13 21 36 41
2017.08.12 ஆம் திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 28 06 1946

மறைவு 13 07 2017

**அமரர் ஈஸ்வரதேவி சிவசுப்பிரமணியம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.08.2017) வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் இல்லத்தில் நடைபெறும். நாளை (12.08.2017) சனிக் கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன்கோயிலடி,
புத்தூர்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### துரைராசா சாந்தகுமார்





ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும், சுவிஸ்சலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா சாந்தகுமார் கடந்த (09.08.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப் பாறிய ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் ந.துரைராசா மற்றும் தனேஸ்வரி தம்பதியரின் அன்புமகனும் சந்திரமதியின் அன்புக்கணவரும் நவீனன், லக்ஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ் சென்ற து. சிறிகாந்தன், திருமதி து. சத்தியபாமா, து. ஜெயதேவன் (கனடா), து. ஜெயதீஸ்வரன் (இளைப்பாறிய நீதிமன்ற உத்தியோகத்தர்), திருமதி அ. உமாபதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி ஸ்ரீ.சகுந்தலா (கொழும்பு), ச.துரைவீரசிங்கம் (இளைப்பாறிய சித்திர ஆசிரிய ஆலோசகர்), வை. அருளநந்தம் (கனடா), திருமதி கெ. புஸ்பா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸ்சலாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: து. ஜெயதீஸ்வரன் (ஈசன்)**
**சகோதரன்**






# சூரியக் குடும்பம்

## விண் முகிலின் உடைவில் தோற்றம் கண்ட அங்கம்

யாழிசை

சூரியக் குடும்பம் எவ்வாறு தோன்றியது என்பதற்கு உறுதியான கொள்கையோ, பதிலோ இதுவரை கண்டறியப்படவில்லை. சூரியக் குடும்பம் தோன்றியது குறித்து இதுவரை பல்வேறான கருத்துக்கள் கூறப்பட்டு வந்துள்ளன. தொடக்கத்தில் அதாவது 18 ஆம் நூற்றாண்டில் புகையுருக் கோட்பாடு என்ற தத்துவம் ஒன்று கூறப்பட்டது. "பல வாயுக்களால் அமைந்த பெரும் தொகுதி ஒன்று சுழற்சியினால் மெதுவாகக் குளிர்ந்து சுருங்கத் தொடங்கியது. அச்சுருக்கத்தின் காரணம் கொண்டு அந்தத் தொகுதி முழுவதும் ஈர்ப்பு சக்தியின் அரவணைப்பு அதிகரிக்க சுழற்சி வேகம் மேலும் அதிகரித்தது. அதனால் அத்தொகுதியின் வெளிப்பரப்பின் வேகம் என்பது மிகவும் அதிகமாகிட அவை ஈர்ப்பை மீறத் தொடங்கின. இதிலிருந்து சிறு சிறு துண்டுகள் விடுபட்டுக் கோள்கள் உருவாகின. மையப் பகுதி மட்டும் சூரியனாக ஒளியையும், வெப்பத்தையும் வெளிப்படுத்திக் கொண்டுள்ளது." என புகையுருக் கோட்பாடு கருத்துரைக்கிறது. சூரியக் குடும்பத்தின் தோற்றம் பற்றித் தகவல் கூறுகிறது.

### ஈர்ப்பின் அடைவு

பின் நாள்களில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியால் தொலைநோக்கி கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் ஈர்ப்பு விசையை மீறி இடைப்பட்ட துண்டுகள் வெளியேற முடியாது என்ற தகவல் அறியப்பட்டது. இதன் காரணமாக இக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. 18 ஆம் நூற்றாண்டில் சூரியக் குடும்பத்தின் தோற்றம் பற்றிய கொள்கை உருவானது. "விண்வெளியில் உலவும் பிறிதொரு விண்மீன் சூரியனின் அருகே வர நேர்ந்த போது ஈர்ப்பின் காரணமாக சூரியனது வாயுக்களை விண்வெளியில் அது கவர்ந்து ஈர்த்தது. அவ்வாறு சூரியனிலிருந்து பிரிந்த வாயுக்கள் குளிர்ந்து கோள்களாக உருவாகின." என்று அக்கொள்கை விளக்கமளிக்கிறது. இரு விண்மீன்களுக்கு இடையேயுள்ள தூரம் மிக அதிகமாகையால் சூரியனை நோக்கி அதன் அருகே மற்றொரு விண்மீன் வந்திருக்கும் என்பது ஏற்புடையதல்ல என்கின்றனர் ஆய்வாளர்கள்.

### விண்முகில் உடைவு

இறுதியாகத் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கொள்கை ஒன்று சொல்லப்பட்டு வருகிறது. அது பின்வருமாறு விளக்க மளிக்கிறது. " ஆரம்பகாலத்தில் மிகப் பெரிய விண் முகில் ஒன்று இருந்தது. அதன் ஒரு பகுதியில் நிறைச் செறிவு ஏற்பட்டது. இப்பகுதி ஏனைய பகுதிகளை ஈர்க்க ஆரம்பித்தது. அதாவது நியூட்டனின் ஈர்ப்பு விதியின் படி, இரு பகுதிகளான விண்முகிலில் நிறை ஈர்ப்புக் செறிவு அதிகம் காணப்பட்ட பகுதி மறுபகுதியை ஈர்க்க ஆரம்பித்தது. இதன் பின் சொந்த நிறை ஈர்ப்பினால் விண்முகிலானது சுருங்கத் தொடங்கியது. இந்த நிலையில் இது ஒரு வாயுப் பந்து போல் சுருங்கச் சுருங்கச் சுழலும் வேகமும் அதிகரித்தது. காலப்போக்கில் இதன் மையப் பகுதி குமிழ் போன்றும், சுற்றுப் புறப் பகுதி வட்டுப் போன்ற அமைப்பையும் பெற்றது. இதன் பின்னர் வெளிப்புற வட்டின் சுழற்சி வேகம் அதிகரித்ததால் மையப் பகுதியில் உள்ள குமிழ் மேலும் சுருங்கியது. இதனால் மையத்தில் வெப்பம் அதிகரித்து மையப்பகுதி ஒரு விண்மீனாக (சூரியன்) மாறியது. சுற்றியுள்ள வட்டு உடைந்து சிறு பகுதிகளாகப் பிரிந்து வெவ்வேறு கோள்களாக மாறின." என்ற கருத்தியலைத் தருகிறது.

### சூரியனுக்கு அருகான கோள்கள்

சூரியனுக்கு அருகில் உள்ள கோள்களான புதன், வெள்ளி, புவி மற்றும் செவ்வாய் என்பன மிக அதிகமான வெப்ப நிலையிலிருந்து குளிர்ந்து உருவானவை. இதனால் இவை உறுதியான கோளங்களாகக் காணப்படுகின்றன. இவற்றில் சிலிக்கன், இரும்பு போன்ற தாதுக்கள் காணப்படுகின்றன. இக் கோளங்களைச் சுற்றி மென்மையான வாயு மண்டலம் காணப்படுகிறது. ஆனால் சூரியனிலிருந்து தொலைவில் உள்ள கோள்கள் உயர்வெப்ப நிலையை அடையாது குளிர்ந்த வாயு நிலையிலேயே சுழன்று வருகின்றன. இவை பெரும்பாலும் கீலியம்,ஐதரசன் வாயுத் தனிமங்களைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

சூரியனுக்கு அருகிலிருந்து கோள்கள் முறையே புதன், வெள்ளி, புவி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் என அமைந்துள்ளன. சூரியனுக்கும் புவிக்கும் இடையே அமைந்துள்ள கோள்களான புதன், வெள்ளி ஆகிய இரண்டும் உட்கோள்கள் (Inner Planers) என்றும், புவியைத் தாண்டிச் சுற்றி வரும் கோள்களான செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் என்பன வெளிக்கோள்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. சூரியனைச் சுற்றி வரும் கோள்கள் அனைத்தினதும் பாதை நீள்வட்டமாகவே அமைந்துள்ளன. அதே வேளை இவை ஏறக்குறைய ஒரே தளத்தில் அமைந்துள்ளன.

## மரண அறிவித்தல்



### திருமதி வள்ளிப்பிள்ளை பொன்னையா

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை பொன்னையா நேற்று (10.08.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்தி பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னராசா, சின்னக்கிளி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கச்சி, மயில்வாகனம், மாணிக்கம் மற்றும் தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் இராஜேஸ்வரி, விஜயகுமார், குசலகுமார், உதயகுமார், நந்தகுமார், சாரதா (சுதா), ஜெயந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் துரைரட்ணம், கமலா, கெங்கேஸ்வரி, குமுதமலர், செல்வச்சந்திரன் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் துஷாந்தன், கிரிசாந்தன், குகநந்தினி, ரூபநந்தினி, தீபநந்தினி, யோகநந்தினி, பிரணவன், பிரசன்னா, சாரு, கம்சா, தர்சா, தனிஸ்ரா, சானுஜன், றஜீவன், சாளினி, திரிசா, அபர்ணா, அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2017) வெள்ளிக் கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைவாணி மில் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 3611323

## பதவியிலிருந்து...

ரவி கருணாநாயக்க ஒப்படைத்தார். பதவி விலகியதை அவர் நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

நிதி அமைச்சராக ரவி கருணாநாயக்க இருந்த காலத்தில், பிணைமுறி விவகாரத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பில் அரச தலைவர் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி வருகின்றது.

அர்ஜுன அலோசியஸின் பெப்பச்சுவலர் ட்ரசரீஸ் நிறுவனத்தின் நிதியால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள சொகுசு வீட்டிலேயே ரவி கருணாநாயக்க தனது குடும்பத்துடன் வசித்து வருகின்றார் என்று நிறுவனமொன்றின் பிரதானி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கியிருந்தார். அதன் பின்னர் ஆணைக்குழுவில் முன்னிலையாகிய ரவி கருணாநாயக்க, இது பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனக் கருத்து வெளியிட்டிருந்தார். இதையடுத்தே அவருக்கு எதிராக எதிர்ப்புகள் வலுத்தன.

அவர் பதவி விலகவேண்டுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களும், ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள சில உறுப்பினர்களும் வலியுறுத்தினர். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் அவருடன் பேச்சு நடத்தியிருந்தனர். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே பதவி விலகும் முடிவை அவர் நேற்று அறிவித்தார். தனது பதவி விலகும் முடிவை அறிவிப்பதற்காக நாடாளுமன்றத்துக்கு நேற்று மதியம் 1.30 மணியளவில் ரவி கருணாநாயக்க வருகை தந்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமையின் கீழ் அவருக்கு உரையாற்ற வாய்ப்பளிக்கப்பட்டது. தான் ஏன் பதவி விலகும் முடிவை எடுத்தார் என்பது பற்றி விரிவாக விளக்கமளித்தார்.

உரை முடிவடைந்ததும் ஆளுங்கட்சியின் முன்வரிசையிலிருந்து வெளியேறிய அவர் பின்வரிசையில் சென்று அமர்ந்தார். இனி பின்வரிசையில் இருந்தே செயற்படப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

(வ-5)

## அரசமைப்பு...

**அரசியல் தீர்வு**

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பனவற்றின் உறுப்பினர்கள் நாட்டின் நலனைக் கருத்திற் கொள்ளாது தமது அரசியல் எதிர்காலத்தை முன்வைத்துச் செயற்படுவதன் நிமித்தம் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் தேவையற்ற ஓர் இழுத்தடிப்பு நிலவுகின்றது.

புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதோடு மாத்திரமல்லாமல், அது பொது வாக்கெடுப்பின் மூலம் மக்களால் அங்கீகரிக்கப்படவும்வேண்டும்.

இந்தப் பொன்னான தருணத்தை நாம் தவறவிடக்கூடாது. நான் தமிழ் மக்களின் நன்மைக்காக மாத்திரம் இதைக் கூறவில்லை. மாறாக இலங்கை வாழ் அனைத்து மக்களின் நன்மைக்காகவுமே இதனைத் தெரிவிக்கிறேன். பிரிவுபடாத, ஒன்றிணைந்த ஐக்கிய இலங்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் புதிய அரசமைப்புத் தொடர்பில் பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள் பொது மக்களிடையே பரப்புரை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்கின்றபோது இந்தக் கருமத்தில் நாங்கள் வெற்றி காண்பது மாத்திரமல்ல, ஒரு பகுதி மக்களிடையே காணப்படும் தேவையற்ற சந்தேகங்களையும் அது நீக்கும்.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமையினால் ஏற்கனவே 50 சதவீதத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ள அதேவேளை, நியாயமான தீர்வை எட்டமுடியாத சந்தர்ப்பத்தில் இன்னும் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறுவார்கள். அந்த நிலைமை நடைபெறக் கூடாது.

**அன்றாடப் பிரச்சினை**

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பில் இனிமேலும் காலதாமதத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது. காணாமல்போனோர் தொடர்பான அலுவலகச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த அலுவலகத்தை நிறுவுவதன் மூலம் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய விசாரணைப் பொறிமுறைகளுக்கூடாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான உண்மை கண்டறியப்பட்டு அவர்களது உறவினர்களுக்குத் தக்க ஆதாரங்களுடன் அவை வெளிக்காட்டப்படவேண்டும்.

காணி விடுவிப்பில் என்னுடைய மக்கள் காலவரையறையின்றித் துன்பப்படுவதை அனுமதிக்க முடியாது. அரசு எதிர் காலத்தில் தேவையற்ற, பாதகமான சூழ்நிலைகளைத் தவிர்க்குமுகமாக இந்த அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் விரைந்து செயற்பட வேண்டும் - என்றார்.

வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், "பெரிய அளவிலான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவது தொடர்பில் அரசிடம் தெளிவான திட்டமில்லை. இளைஞர்கள் மத்தியில் வேலையின்மையானது பல்வேறு சமூகப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது" என்றார்.

இந்த விடயம் தொடர்பில் அமெரிக்கா தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று இரா.சம்பந்தன், காங்கிரஸ் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டார்.

"பன்னாட்டுச் சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை அமெரிக்க அரசு உறுதி செய்ய வேண்டும். மனித உரிமைகள் சபையின் தீர்மானமானது முழுவதுமாக நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணித்து உறுதி செய்யவேண்டும். இலங்கை அரசு பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலிருந்து தப்பிக்க முடியாது" - என்றும் சம்பந்தன் கூறினார்.

"கடந்த இரண்டு தசாப்தங்களாக இந்த விடயங்கள் தொடர்பில் நீங்கள் காட்டும் உறுதிப்பாட்டுக்கும் விடாமுயற்சிக்கும் நாங்கள் தலைவணங்குகின்றோம். நிச்சயமாக உங்களுடைய கரிசனைகளை அரச உயர்மட்டத்துக்கு எடுத்துச் செல்வோம்" என்று அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் தெரிவித்ததாக அந்தப் பத்திரிகைக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (உ-5)

## நீதியமைச்சர்...

பம் திரட்டும் நடவடிக்கை யில் அவர்கள் இறங்கியுள்ளனர். இன்றைய தினம் இது பற்றி இறுதி முடிவு எடுக்கப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச கடந்த காலங்களின் அரசின் கொள்கைகளைக் கடுமையாக விமர்சித்து வருகின்றார். அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு வழங்கும் அரசின் முடிவையும் அவர் விமர்சித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-5)

## பிடிக்க...

பின் தொடர்ந்து துரத்தித் துரத்தி வெட்டினோம். நானும் மனோஜும் சேர்ந்தே அவர்களை தொடர்ச்சியாக வெட்டினோம் - என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வடக்கு வாள் வெட்டுக் குழுவை சுவிட்ஸர்லாந்து நாட்டிலிருந்தவாறே முகப் புத்தகத்தின் மூலம் 'சன்னா' எனும் நபர் இயக்கி வந்த விவரங்கள் இப்போது வெளியாகியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தக் குழுவின் முக்கிய சூத்திரதாரிகள் எனக் கருதப்படும் நிசா விக்டர் உட்பட நால்வர் அண்மையில் கொழும்பில் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்திய தீவிர விசாரணைகளின்போதே இந்த விவரங்கள் வெளியாகியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (வ-5)

## ரவிகரன்...

புக்கள் எனக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவில்லை. சில தனி நபர்களும், பொய்க் கையெழுத்துடனும், கடற்றொழில் சமூகம் சாராதவர்களும் கையெழுத்திட்டு கடிதம் ஒன்றை சில வாரங்களுக்கு முன்னர் முதலமைச்சர் உள்ளிட்ட பலருக்கு அனுப்பியிருந்தனர். இது தொடர்பில் நான் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளேன். பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதுதவிர, முதலமைச்சர் என்னிடம் விளக்கம் கோரவுமில்லை. விளக்கம் கோரி அவரிடமிருந்து எந்தவொரு கடிதமும் எனக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலையில் பத்திரிகையில் வெளியான செய்தியை மறுக்கின்றேன் - என்று குறிப்பிட்டுள்ளார். (வ)

## சாரதிகளே...

றுக்கு அறவிடப்படும் தண்டப் பணம் 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

குறிக்கப்பட்ட வேகத்தை விட 20 வீதம் வரையான அதிக வேகத்தில் வாகனம் செலுத்துபவர்களுக்கு 3 ஆயிரம் ரூபாவும், 20 வீதத்துக்கும் அதிகமான மற்றும் 30 வீதத்துக்கும் குறைவான வேகத்தில் வாகனம் செலுத்துபவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாவும், 30 வீதத்துக்கும் அதிகமான வேகத்தில் வாகனம் செலுத்துபவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும் எனும் அடிப்படையில் உரிய இடத்தில் தண்டப்பணம் அறவிடப்படும்.

இடது பக்கத்தால் முன்னோக்கிச் சென்றால் அதற்கான தண்டப் பணம் 2 ஆயிரம் ரூபா வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.பிறிதொரு நபரை நோக்கி கவனவீனமாக அல்லது எந்த வித காரணமுமின்றி வாகனம் செலுத்தினால் 10 ஆயிரம் ரூபா குறைந்த பட்ச தண்டப்பணமாக விதிக்கப்படும். அலைபேசி பயன்படுத்திக் கொண்டு வாகனங்களைச் செலுத்துவது தொடர்பில் 2 ஆயிரம் ரூபா உரிய இடத்தில் தண்டப்பணம் அறவிடப்படும் - என்றார்.

(வ-5)

## பதவி...

யிடுகையிலேயே தலைமை அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சியின் உப தலைவரான ரவி கருணாநாயக்க அமைச்சுப் பதவியில் இருந்து விலகுவதாக எமக்குக் கூறினார். அரச தலைவரைச் சந்தித்துப் பேசிய பின்னர் முடிவை அறிவிக்குமாறு நான் அவருக்குக் கூறினேன். அரச தலைவருடன் சந்திப்பு நடைபெற்றது. கடிதம் கையளிக்கப்பட்டது. குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு முன்னரே இவ்வாறு பதவி விலகியதன் மூலம் புதிய சம்பிரதாயமொன்று ஏற்படுத்தப்பட்டமை உறுதியாகின்றது. விசாரணைகளுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் ரவி கருணாநாயக்க பதவி விலகியுள்ளார். எந்தவொரு விசாரணைகளிலும் கூட்டு அரசு தலையிடுவதில்லை என்ற செய்தி இதன்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் திருடர்கள் எப்படி செயற்பட்டார்கள் என்பது எமக்குத் தெரியும். கடந்த ஆட்சியில் எந்தவொரு அமைச்சரும் விசாரணை ஆணைக்குழுவுக்குச் சென்று பார்த்ததில்லை.

அமைச்சர் ரவி கருணாநாயக்க உயர் நீதிமன்றம் சென்று தடையுத்தரவொன்றைப் பெறுவதற்கு முயற்சிக்கவில்லை. விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் சென்று சாட்சியமளித்து தற்போது தமது பதவியிலிருந்து விலகி பின்வரிசையில் அமர்ந்து முன்னுதாரணமாக செயற்பட்டுள்ளார் - என்றார். (வ-5)

## பொலிஸ்...

கொக்குவில் கிழக்கில் கைது செய்யப்பட்ட இளைஞர் நடைபெற்று வரும் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதுகிறார்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவிலில் பொலிஸார் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்திய சந்தேகத்தில் நேற்று மாலைவரையில் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த சில தினங்களில் சுன்னாகம் நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையத்தில் வைத்து சிவில் உடையில் நின்றிருந்த பொலிஸார் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் நேற்று முன்தினம் மூன்று பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-5,8,26,101)

## மங்களவா?...

பதவி வகித்திருந்த நிலையில் அவன் காட் சர்ச்சை காரணமாக அந்தப் பதவியிலிருந்து அவர் விலகியிருந்தார். இதனால் அவருக்கு அயலுறவுத் துறை அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு கூட்டு அரசுக்குள் எதிர்ப்பு உள்ளது.

மேலும் முன்னர் அயலுறவுத் துறை அமைச்சராகவிருந்த மங்கள சமரவீரவை மீண்டும் அதே அமைச்சுக்கு நியமித்து தற்போது அவர் வகிக்கும் நிதி அமைச்சை பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வாவிடம் வழங்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி உறுதியாக உள்ளது.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி சரத் அமுனுகமவை அயலுறவுத் துறை அமைச்சராக நியமிக்க வேண்டும் என கோரிக்கை முன்வைத்துள்ளதாக அறிய முடிகிறது.

(வ-5)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 11

**ஐக்கியத்தின் கபடித் தொடர்**

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக அமரர் ம.சூரியகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் கபடித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் இறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி ச.ச.நிலைய தாச்சித் தொடர்**

நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையமும், சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் இணைந்து. யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் துர்க்கா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திருவள்ளுவர் வி.க. கால்பந்துத் தொடர்**

சரவணை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் பொன் விழாவையும், திருவள்ளுவர் விளையாட்டுக் கழகத்தின் 37ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு தீவக ரீதியாக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சின்னமடு ஆலய மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றன. முதலாவது ஆட்டத்தில் ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரண்டாவதாக இடம்பெறும் ஆட்டத்தில் வேலணை ஐயனார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்லைப்பிட்டி சென். பிலிப் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மூன்றாவதாக இடம்பெறும் ஆட்டத்தில் நயினாதீவு அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு ஈஸ்ரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நான்காவதாக இடம்பெறும் ஆட்டத்தில் புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)



மன்னார் சிரேஷ்ட கால்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்கந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம், மன்னார் பொது விளையாட்டரங்கில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசெப் விளையாட்டுக் கழகம் சம்பியனானது. பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினரராக வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், மதி பபுறு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-23)



# ஜொலிஸ்ரார் அணி அசத்தலான வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் மகாலிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான ரி-20 தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஜொலிஸ்ரார் அணி வெற்றிபெற்றது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் சிறிகாமாட்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மதுசன் 86 ஓட்டங்களையும், சஜீவன் 59 ஓட்டங்களையும், பிரியதர்சன் ஆட்டம் இழக்காமல் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கொக்குவில் சிறி காமாட்சி விளையாட்டுக் கழக அணியின் சார்பில் மோகன்ராஜ் 2 இலக்குகளையும், தீபநாதன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

206 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய கொக்குவில் சிறி காமாட்சி விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 143 ஓட்டங்களை மட்டுமே பெற்று 62 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக நிரோசன் 41 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் அணியின் சார்பில் மதுஷன் 3 இலக்குகளையும், குகானன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

(ம-6,23)


# பாரதி அணியின் கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 11

பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு.

பூநகரி நண்பர்கள் விளையாட்டுக் கழக அணிக்கும் கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சக்திவேல் விளையாட்டுக் கழக அணி 3:0 கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற கிளிநொச்சி திருநகர் விளையாட்டுக் கழக அணிக்கும் சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கிளிநொச்சி திருநகர் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.



பிறிதொரு ஆட்டத்தில் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியும் ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழக அணியும் மோதின. இந்த ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் முரசுமோட்டை விளைபூமி விளையாட்டுக் கழக அணியும், வெற்றிலைக்கேணி றம்போ விளையாட்டுக் கழக அணியும் மோதின. இந்த ஆட்டத்தில் விளைபூமி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக அணியும், கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதின. இந்த ஆட்டத்தில் சென். மேரிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம-23)

# துடுப்பாட்டத் தொடர்

*யாழ்ப்பாணம், ஓக. 11*

*தென்மராட்சி பிரதேசத்தில் பொருளாதாரத்தின் மட்டில் பின்தங்கிய நிலையில் காணப்படும் மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவும் விதத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட துடுப்பாட்ட அணிகளுக்கு இடையிலான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரை விரைவில் நடத்தவுள்ளனர். இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் தமது பதிவுகளை விரைவில் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.*

*(ம-9)*

# நாவலர் கழகத்தின் துடுப்பாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக. 11

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டத் தொடர் மாதனை கண்ணகை அம்மன் ஆலய ம்மைதானத்தில் நாளை காலை 8.30 மணிமுதல் நடைபெறவுள்ளது. பங்கு பற்றவிரும்பும் கழகங்கள் நாளை காலை 8.30 மணிக்கு முதல் வருகை தந்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-422)

# மின்கசிவு காரணமாக மல்யுத்த வீரர் சாவு



இந்தியாவில் ஜார்க்கண்ட் மாநிலத்தில் மைதான உள்ளக அரங்கில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாக தேசிய மல்யுத்த வீரர் விசால் குமார் வர்மா என்பவர் மின்சாரம் தாக்கி பரிதாபமாக உயிரிழந்தார்.

ராஞ்சி நகரில் உள்ள, ஜெய்ப்பால் சிங் உள்ளக அரங்கிலேயே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. விசால் நினைவு இழந்து கிடப்பதைப் பார்த்த உள்ளூர் மக்கள் அவரை மருத்துவமனையில் சேர்த்தபோது, முன்னதாகவே அவர் உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்களின் தரப்பால் தெரிவிக்கப்பட்டது என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.


இந்தச் சம்பவம் மிகவும் துரதிருஷ்டமானது என்று ஜார்க்கண்ட் மல்யுத்த சங்கத்தின் தலைவர் போலா நாத் சிங் தெரிவித்தார். வீரர் விசாலின் குடும்பத்துக்கு இடைக்கால நிவாரண நிதியாக ஒரு லட்சம் ரூபாவை அவர் அறிவித்தார். (ம)



உலக சம்பியன்ஷிப் தடகளத் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான 400 மீற்றர் தகுதிகாண் ஓட்டத்தில் போஸ்ட்வானாவைச் சேர்ந்த பிரபல தடகள வீரர் ஐசக் மக்கவாலா கலந்துகொள்ள தடை விதிக்கப்பட்டது. மருத்துவச் சோதனையில் அவர் உடல்நலக் குறைவுடன் உள்ளார் என்று தெரியவந்துள்ளது என்று தெரிவித்தே அவருக்குத் தடை விதிக்கப்பட்டது. எனினும் இந்தத் தடையை மக்கவாலா ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் தனித்து 400 மீற்றர்களையும் ஓடினார். இவரது இந்த ஓட்டம் தடகள உலகால் கண்டுகொள்ளப்பட மாட்டாது என்று ஆரம்பத்தில் செய்திகள் வெளியாகியிருந்தன. எனினும் அவர் தனியாக ஓடிய பெறுபேறு கருத்தில் கொள்ளப்பட்டு இறுதிச் சுற்றுக்கு மக்கவாலா தகுதி பெற்றார் என்று நேற்று இரவு அறிவிக்கப்பட்டது. (ம)

# கரித் பேலுடன் ஒப்பந்தமில்லை

## மொரின்கோ திட்டவட்டம்



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகமான ரியல் மட்ரிட்டிலிருந்து, கரித் பேலைக் கைச்சாத்திடுவதான, மன்செஸ்டர் யுனைற்ரெட்டின் நம்பிக்கைகள் முடிந்து விட்டன என்று மன்செஸ்டர் யுனைற்ரெட் அணியின் முகாமையாளர் ஜோஸ் மொரின்கோ தெரிவித்தார்.


முன்கள வீரரான கரித் பேலை, ரியல் மட்ரிட் விற்க விரும்பினால், கரித் பேலைக் கைச்சாத்திடுவதற்கு போராடுவேன் என மொரின்கோ ஏற்கனவே தெரிவித்திருந்தார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'சுப்பர் கப்' கிண்ணத்துக்கான இறுதியாட்டத்தில் ரியல் மட்ரிட்டும், மன்செஸ்டர் யுனைற்ரெட்டும் மோதின. இந்த ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே மட்ரிட்டின் சார்பாக பேல் களமிறக்கப்பட்டார். ஆட்டம் முடிந்த பிற்பாடு ரியல் மட்ரிட்டிலிருந்து வெளியேறலாம் என உங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதா என கரித் பேலை செய்தியாளர்கள் வினவியபோது, "எனக்குத் தெரிந்த வரையில் இல்லை" என்று பதிலுரைத்தார். இதையடுத்தே பேலை ஒப்பந்தம் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை மொரின்கோ கைவிட்டார். (ம)



## பாக். கிரிக்கெட் சபையின் தலைவராக நஜம்


பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக நஜம் சேதி நேற்று தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது பதவி காலம் 3 ஆண்டுகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக இருந்த 83 வயதான சகாரியர்கான் தனது உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அந்தப் பொறுப்பில் இருந்து விலகினார். இதையடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக நஜம் சேதி நேற்று தேர்ந்தெடுக்கப்பட்டார். 10 உறுப்பினர்களைக் கொண்ட பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் குழு அவரைப் போட்டியின்றித் தெரிவு செய்தது. (ம)

# இலங்கையை எதிர்க்கும் எதிர்பார்ப்பில் குல்தீப்



இலங்கை அணியை எதிர்த்து நாளை களமிறங்கும் எதிர்பார்ப்பில் உள்ளார் இந்திய அணியின் இளம் சுழல்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ். இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதலிரண்டு ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன. அவற்றில் வெற்றிபெற்று 2:0 என்று முன்னிலையில் உள்ளது இந்திய அணி.

மூன்றாவது ஆட்டம் பல்லேகலவில் நாளை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் சகலதுறை வீரர் ஜடேயாவுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஜடேயாவைப் போல் சுழல் பந்துவீச்சும், துடுப்பெடுத்தாடவும் கூடியவரான ஓர் வீரரை களமிறக்க கோக்லி முடிவு செய்துள்ளார். ஜடேயாவின் இடத்துக்கு அக்சர் பட்டேல் அழைக்கப்பட்டுள்ளார். அணியில் ஏற்கனவே இடம்பிடித்திருந்த குல்தீப் யாதவ் ஓர் சுழல்பந்து வீச்சாளர். துடுப்பெடுத்தாடவும் வல்லவர். இதனால் குல்தீப் யாதவ், அக்சர் பட்டேல் இருவரில் எவர் களமிறங்குவது என்ற போட்டி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே இலங்கையை எதிர்ப்பதற்கான காத்திருப்பை வெளிப்படுத்தினார் குல்தீப் யாதவ். (ம)



# ரெய்னாவை அங்கிகரித்தார் ரோட்ஸ்

"இந்திய அணியின் சிறந்த களத்தடுப்பாளர் என்றால் அது ரெய்னாவே" என்று தெரிவித்தார் களத்தடுப்பில் கொடிகட்டிப் பறந்தவரான தென்னாபிரிக்க வீரர் ஜோண்டி ரோட்ஸ்.

இந்திய அளவில் நடக்கும் ஐ.பி.எல். தொடரைப் போன்று, தமிழகத்தில் தமிழ்நாடு பிரீமியர் லீக் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் திருச்சி வாரியர்ஸ் அணியின் ஆலோசகராக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் ஜோண்டி ரோட்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலேயே ஜோண்டி இவ்வாறு தெரிவித்தார்.

"இந்திய அணியில் சிறந்த களத்தடுப்பாளர்களுக்குப் பஞ்சம் இல்லை. யுவராஜ் சிங் மற்றும் கைப் ஆகியோர் கடந்த காலங்களில் சிறந்த களத்தடுப்பாளர்களாக இருந்துள்ளனர். தற்போது ரெய்னா மிகச் சிறப்பாக களத்தடுப்பில் ஈடுபடுகிறார். கோக்லி, தவான், ஜடேயா, பாண்டியா, கம்பீர், ரோகித் ஆகியோரும் சிறந்த களத்தடுப்பாளர்கள்" என ஜோண்டி மேலும் தெரிவித்தார். (ம)

# எல்லாப் புகழும் டோனிக்கே!

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் சகலதுறை வீரர்களுக்கான டெஸ்ட் தரப்படுத்தலில் தான் முதலிடம் பிடித்தமைக்கு டோனிதான் காரணம் என்று குறிப்பிடுகிறார் இந்திய அணியின் சகலதுறை வீரர் ஜடேயா.
பன்னாட்டு கிரிக்கெட் சபையின் சகலதுறை வீரர்களுக்கான டெஸ்ட் தரப்படுத்தலில் பங்களாதேஷ் அணியின் சகிப் அல் ஹசன் தொடர்ந்து முதலிடத்தில் நீடித்து வந்தார். இலங்கைக்கு எதிரான முதலிரு டெஸ்ட் ஆட்டங்களில் தனது பெறுபேறுகளை வைத்து அவரைப் பின்தள்ளி முதலிடம் பிடித்தார் ஜடேயா. இதையடுத்து தனது கீச்சகப் பக்கத்தில் தான் முதலிடம் பிடித்தமைக்கு டோனிதான் முக்கிய காரணம் என்று அவர் குறிப்பிட்டார். தனது இந்த அடைவில் கோக்லிக்கும் பங்குண்டு என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ம)

# இறுதி டெஸ்ட்டுக்கான இலங்கை அணி 'ரெடி'


இறுதி டெஸ்ட் ஆட்டத்துக்காக இலங்கை அணியினர் நேற்று கடும் வலைப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

இந்திய அணிக்கு எதிராக நாளை நடைபெறவுள்ள மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்துக்கான இலங்கை அணி நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.
இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முடிவடைந்த முதலிரு ஆட்டங்களிலும் அபார வெற்றிபெற்றது இந்தியா. இதனால் அந்த அணி இலங்கையில் வைத்து இலங்கைக்கு எதிராக கிண்ணத்தைக் கைப்பற்றுவது உறுதியாகியுள்ளது. மூன்றாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்துக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது.
குணதிலக காயம் காரணமாக விலகியுள்ளார். கேரத்துக்கு கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பதில் வீரர்களாக சமீர மற்றும் கமகே ஆகியோர் அணியில் இணைந்துள்ளனர்.
இலங்கை அணி - சந்திமல், மத்தியூஸ், தரங்க, கருணாரட்ன, டிக்வெல்ல, குசல் மென்டிஸ், சில்வா, திரிமன்ன, சமீர, கமகே, டில்ருவான் பெரேரா, புஸ்ப குமார, சன்டகன்.

(ம)

# ஆஸியின் பயிற்சியாளராக நியமனம் பெற்றார் ஹடின்



ஆஸ்திரேலிய அணியின் களத்தடுப்புப் பயிற்சியாளராக அந்த அணியின் முன்னாள் இலக்குக் காப்பாளர் பிரட் ஹடின் நியமனம் பெற்றுள்ளார்.
ஆஸ்திரேலிய அணியின் களத்தடுப்புப் பயிற்சியாளராக இருந்த கிரைக், தனது பதவியில் இருந்து விலகியதை அடுத்து அந்த இடத்துக்கு எவரை நியமிப்பது என்பது தொடர்பில் சுமார் இரண்டு மாத காலமாக பரிசீலித்து வந்தது ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை. பல முன்னாள் வீரர்களுடன் பேச்சு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் எந்தெந்த வீரர்களுடன் பேச்சு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படவில்லை.
இந்த நிலையில் முன்னாள் இலக்குக் காப்பாளரான பிரட் ஹடின், ஆஸ்திரேலிய அணியின் களத்தடுப்புப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடர் வரை அவர் இந்தப் பதவியில் தொடர்வான என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்தது.

(ம)

# லிவர்பூலில் தொடர்கிறார் கவுண்டினோ

பிலிப் கவுண்டினோவிற்கு 100 மில்லியன் யூரோ கொடுக்க வந்த பார்சிலோனாவின் ஒப்பந்தத்தை நிராகரித்துள்ளது லிவர்பூல். இதன் மூலம் லிவர்பூலில் கவுண்டினோ நிலைத்திருப்பது உறுதியாகியுள்ளது.
ஸ்பானியக் கழகமான பார்சிலோனாவில் விளையாடிய நட்சத்திர வீரரான நெய்மர் அந்த அணியை விட்டு விலகிச் சென்றதை அடுத்து அந்த இடத்துக்கு புதிய வீரர்களை ஒப்பந்தம் செய்ய எத்தனிக்கிறது பார்சிலோனா. அந்த வகையில் நெய்மரின் வெற்றிடத்தை நிரப்ப லிவர்பூல் அணிக்காக தற்போது விளையாடும் பிலிப் கவுண்டினோவை ஒப்பந்தம் செய்ய எத்தனித்தது பார்சிலோனா. லிவர்பூல் பின்னடித் ததை அடுத்து பார்சிலோனாவின் கனவு மெய்ப்படாமல் போனது.

(ம)



ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.
www.ambafrance-lk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

EASY WAY யின்
புதிய முறையிலான ஆங்கிலப்பயிற்சி
EASY WAY யின் ஆங்கில பாடப்புத்தகங்களைக்கற்று அதிலுள்ள பயிற்சிகளை செய்தவர்கள் சரளமாக ஆங்கிலத்திலும் பேசுவதை ஏற்கனவே எமது நேரடி வகுப்புகளில் நாம் நிரூபித்துள்ளோம்.
வகுப்புகளுக்கு வர நேரமற்ற தொழில்புரிவோர், பாடசாலை மாணவர்கள், வீட்டுப்பெண்கள், ஆசிரியர்கள், பல்கலை கழக மாணவர்கள் ஆங்கிலம்பேசவிரும்புவோர் இணையமுடியும்
பாடநெறிக்கட்டணம் : ரூபா 1000 மட்டுமே.
(14.08.2017 இற்குமுன் இணைவேருக்கு மட்டுமே! பின்னர் ரூ 3000.00)
90 பாடங்களையும், 90 வீடியோ பாடங்களையும் கற்று அதிலுள்ள பயிற்சிகளுக்கு பதில்களை எழுதி ஆகக் கூடியது 90 - 120 நாட்களுக்குள் ஒப்படைத்தல்வேண்டும.
இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் இறுதிப்பரீட்சை நவம்பர் 12, 2017 அன்று இடம்பெறும்.
EASY WAY 403, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோவில் அருகில் யாழ்நகர். 021 320 3313 077 1570 486

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை
யாழ். நகரில் உள்ள
பிரபல தனியார் நிறுவனத்துக்கு
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.

வயது : 30 - 50
தகைமைக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையுடன் 13.08.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வேலையாள்கள் தேவை
யாழ். நகரில் உள்ள உணவகத்திற்கு காசாளர் தேவை.
(அடிப்படை கணினி அறிவு உள்ளவர்களாக இருக்கவேண்டும்.
தொடர்பு - 077 2017004

வேலையாள்கள் தேவை
யாழ். நகரில் இயங்கிவரும் பிரபல புடைவை நிறுவனத்திற்கு விற்பனைப்பிரதிநிதிகள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு - 077 0748 999
021 222 5571

வேலையாள் தேவை
யாழ். நகரில் இயங்கிவரும் பிரபல வர்த்தக ஸ்தாபனத்திற்கு கணக்குப் பதிவாளர் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
தொடர்பு - 077 905 8252, 077 074 8999, 021 226 2941

வாடகைக்கு
அரசடிவீதி, கந்தர்மடம், நல்லூரில் பிரதான வீதியில் அமைந்துள்ள இரண்டு மாடி வீடு வாடகைக்கு விட உள்ளது. வாகனத்தரிப்பிட வசதியுண்டு அலுவலகம், நிறுவனம், கொம்பனி விரும்பத்தக்கது.
076 921 7954/ 077 939 6287

...திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார வீதியில் 361 ஆம இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.08.2017 அச்சிட்டு வெளியிடப்பெற்றது.